DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Homelife/Future Realty Inc. Brokerage
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail : raj.p@rogers.com

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777


ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurence;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

21ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1470 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 7, 2024

# புலம்பெயர் தேசங்களில் தமிழ் மொழியை தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் மூலம் கற்பிப்பதன் ஊடாக தமிழுக்கு நாம் புத்துயிர் கொடுக்கின்றோம்.



## ரொறன்ரோவில் நடைபெற்ற 15வது உலகத் தமிழ் ஆசிரியர் மாநாட்டில் மாகாண அரசின் பிரதிநிதி லோகன் கணபதி புகழாரம்

(ரொறன்ரோவிலிருந்து "வீணைமைந்தன்")

"புலம்பெயர் தேசங்களில் தமிழ் மொழியை தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் மூலம் கற்பிப்பதன் ஊடாக தமிழுக்கு நாம் புத்துயிர் கொடுக்கின்றோம். தங்களின் சொந்த மொழியில் பேசுவதென்பது ஒவ்வொருவரின் உடலுக்கும் உள்ளத்திற்கும் ஊட்டச் சத்து போன்றது. தாய்மொழிதான் சிந்திக்கும் திறனின் திறவுகோலாக இருக்கிறது. எந்த மொழியைக் கற்றாலும், எத்தனை மொழிகளைக் கற்றாலும் ஒருவரின் சிந்தனை உருவெடுப்பது தாய்மொழியில்தான். மனித ஆற்றலை வளமையாக்கவும், ஒருவரது படைப்பாற்றலை அதிகப்படுத்தவும் தாய்மொழிக் கல்வியால் மட்டுமே முடியும். இது அறிவியல் பூர்வமாக நிரூபணமான உண்மை.

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

# பெண்களின் உலக உதைப்பந்தாட்ட போட்டி- 2024 இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது. 'தமிழ் ஈழம்' பெண்கள் அணி

தற்போது நடைபெற்று வரும் பெண்களின் உலகக் கோப்பை உதைப்பந்தாட்டப் போட்டி- 2024 இன் இறுதிப் போட்டிக்கு தமிழ் ஈழம் பெண்கள்அணி தெரிவாகியுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை இங்கு பதிவு செய்துள்ளோம். இந்த முறை வடக்கு நோர்வேயின் போடோவில் உள்ள ஆர்க்டிக் வட்டத்திற்கு மேலே உள்ள போடோ வட துருவத்திற்கு தெற்கே 1,500 மைல் தொலைவில் அமைந்துள்ள நகரத்தில் இந்தப் போட்டிகள் நடைபெறுகின்றன.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)




INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23 -8907 The Gore Rd. Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "செல்வம் தரும் கறுவா" நூல் திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் வெளியீடு

செல்வம் தரும் கறுவா நூல் வெளியீட்டுவிழா 06.06.2024 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

கறுவா செய்கைக்கான வழிகாட்டியான இந்நூலின் தொகுப்பாசிரியர் சுந்தரமூர்த்தி புவனகுமார் அவர்களின் வரவேற்புரையினையும் தலைமையுரையையும் தொடர்ந்து அறிமுகவுரையினை ஓய்வுநிலை ஆங்கில மொழி கற்பித்தல் பேராசிரியர் ம. சரவணபவ ஐயர் நிகழ்த்தினார்.

நூல் மதிப்பீட்டுரையினை மூத்த எழுத்தாளரும், சமூக செயற்பாட்டாளருமான வடகோவை வரதராஜன் அவர்கள் நிகழ்த்தினார்.







தொடர்ந்து வடமாகாண விவசாய பணிப்பாளர் சுகந்தினி செந்தில்குமரன், யாழ். மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் அஞ்சனாதேவி சிறீரங்கன், யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகின் தலைவர் விவியன் சத்தியசீலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்கள் உரைகளை நிகழ்த்தினார்கள்.

தொடர்ந்து கறுவா பயிர் செய்கையில் ஈடுபட்ட பண்ணையாளரது அனுபவ உரையும் இடம்பெற்றது.

பணப்பயிரான கறுவா செய்கையில் கடந்த பத்தாண்டுகளாக ஆர்வமுடன் செயற்பட்டுவரும் சுந்தரமூர்த்தி புவனகுமார் அவர்கள், உலகெங்கிலும் இருந்து கொண்டு வந்த கறுவா சார்ந்த பல்வேறு உற்பத்திகள் குறித்தும் அங்கு வருகை தந்தவர்களுக்கு விளக்கினார். நிகழ்வுக்கு வந்திருந்த அனைவருக்கும் குறித்த நூல் இலவசமாக வழங்கப்பட்டது.

# யாழ்ப்பாணக் குடாநாட்டில் டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பு?

- நடராசா லோகதயாளன்



யாழ்ப்பாணக் குடாநாட்டில் முதல் அரையாண்டில் 4 ஆயரத்து 729 டெங்கு நோயாளர் இனம் காணப்பட்டுள்ளதாக மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

குடாநாட்டின் டெங்கு கட்டுப்பாடு தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் 05-06-2024 இடம்பெற்ற விசேட கூட்டத்தின் நிறைவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி மேலும் விபரம் தெரிவிக்கையில்:

எமது பிரதேசத்தில் பருவ மழை காலத்தில் டெங்கு நோய்த் தாக்கம் காணப்பட்டாலும் அது ஜனவரி மாதத்தின் பின்னர் குறைவடைவது வழமையாகும். இருப்பினும் இந்த ஆண்டு அது வழமைக்கு மாறாக ஆண்டின் முதல் அரையாண்டின் இதுவரை 4 ஆயரத்து 729 டெங்கு நோயாளர் இனம் காணப்பட்டுள்ளனர். அதே நேரம் ஒரு மரணமும் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக நாம் தீவிர கண்காணிப்பில் ஈடுபடவுள்ளோம். இவ்வாறு அதிகரித்த எண்ணிக்கை மாவட்டம் முழுவதுமாக காணப்பட்டாலும் மாநகர சபை, சாவகச்சேரி, கோப்பாய், பருத்தித்துறை, நல்லூர் போன்ற பகுதிகளில் டெங்குத் தாக்கம் அதகமாக காணப்படுகின்றன என்றார்.

# வடக்கு மாகாணத்தில் தொடர்ந்து இரகசியமாக நில அளவைப் பணிகள் முன்னெடுப்பு



- நடராசா லோகதயாளன்

கீரிமலை ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பிரதேசத்தில் எவருக்கும் தெரியாது இரகசியமாக நில அளவைப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள ஜே/233 கிராம சேவகர் பிரிவில் தனியாருக்குச் சொந்தமான நிலம் மற்றும் சைவ அடையாளங்களை அபகரித்து மகிந்த ராஜபக்சவின் காலத்தில் இரகசியமாக ஓர் ஜனாதிபதி மாளிகை அமைக்கப்பட்டது. இவ்வாறு அமைக்கப்பட்ட ஜனாதிபதி மாளிகை கோட்டபாய ராஜபக்சாவின் காலத்தில் நகர அபவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டு நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக கடந்த ஆண்டு தனியார் பல்கலைக் கழகத்திற்கு 50 ஆண்டு குத்தகைக்கு ஒப்பந்தம் எழுதப்பட்டது.

இந்த நிலையில் தனியார் காணிகளை சுவீகரிப்பு செய்வதற்காக யாழ்ப்பாணம் நில அளவைத் திணைக்களம் 5 தடவை முயன்றபோதும் நில உரிமையாளர்கள், பொது அமைப்புக்கள் மற்றும் அரசியல்வாதிகளினால் தொடரச்சியாக தடுக்கப்பட்டது. இதன் காரணமாக தம்மால் அளவீடு செய்ய முடியவில்லை என யாழ்ப்பாணம் நில அளவைத் திணைக்களம் நில அளவைத் திணைக்கள தலைமைப் பணிமனைக்கு அறிவித்துள்ளனர்.

இதன் அடிப்படையில் கொழும்பு தலைமைப் பணிமனையில் இருந்து 2024-05-16 அன்று வருகை தந்த உத்தியோகத்தர்கள் கடற்படையினரின் பாதையின் ஊடாக உள்நுழைந்து அப் பிரதேசத்தை முழுமையாக அளவீடு செய்து பணிகளை நிறைவு செய்து அப் பகுதி கிராம சேவகர்களிடமும் ஒப்பம் பெற்றுச் சென்றுள்ளனர்.

இவை தொடர்பில் யாழ்ப்பாணம் நில அளவைத் திணைக்களத்தினரிடம் எந்தவொரு தகவலோ அல்லது அளவீட்டு வரை படமோ இல்லை எனவும் சுட்டக் காட்டப்படுகின்றது.

# "அரசியலில் செயற்படுபவர்களில் பொது வேட்பாளருக்கு தகுதியான ஒருவரை சொல்லுங்கள் பார்ப்போம்" என்கிறார் ஆனந்தசங்கரி



அரசியலில் தீவிரமாக செயற்படுபவர்களில் பொது வேட்பாளருக்கு தகுதியான ஒருவரை முதலில் சொல்லுங்கள் பார்ப்போம் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பொது அபேட்சகர் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் நிலவிவரும் நிலையில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலைப்பாடு தொடர்பில் ஊடகங்களிற்கு அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

தேடிவந்த வாய்ப்புக்களை நாங்கள் தவறவிட்டுள்ளோம். இலங்கை வரலாற்றில் சிங்கள தலைவர் ஒருவர் சமஸ்டியை முன்வைத்து தேர்தலில் போட்டியிட்டபோது, வாக்களிக்க வேண்டாம் என தூண்டிய இப்பொழுது உள்ளகட்சிகள்தான் அப்பொழுதும் இருந்துள்ளன.

மக்களிற்கு நீங்கள் செய்ய வேண்டிய கடமையை செய்ய தவறிவிட்டீர்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, நீங்கள் தகுதியோடு பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. 22 பேரும் எவ்வாறு பாராளுமன்றம் வந்தார்கள், சமஸ்டியை முன்வைத்து போட்டியிட்ட ஜனாதிபதி வேட்பாளருக்கு என்ன நடந்தது என்பதை அறிவோம்.

48 வீதம் சமஸ்டியை முன்வைத்து போட்டியிட்டவர் பெற்றிருந்தார். அது இலங்கை வரலாற்றில் நடக்காத விடயம். குற்றவாளிகள்தான் தக்களுடைய ஊத்தைகளையும், குற்றங்களையும் மறைப்பதற்கு புதிதாக கண்டுபிடித்தது போல தனி வேட்பாளரை பிரேரிக்கின்றார்கள்.

அரசியலில் தீவிரமாக செயற்படுபவர்களில் அதற்கு தகுதியான ஒருவரை முதலில் சொல்லுங்கள் பார்ப்போம். அவ்வாறு மக்கள் மத்தியில் தகுதியானவர்கள் எல்லோரும் ஒதுங்கி இருக்கின்றார்கள். இவ்வாறான நிலையில் தமிழ் வேட்பாளர் ஒருவரை போட வேண்டும் என்ற கருத்துக்கு நான் மாறாக உள்ளேன்.

இவ்வாறான விடயங்கள் தொடர்பில் பேசும்போது என்னைப் போன்றோரின் ஆலோசனைகளை பெறுவதில்லை. இவ்வாறான முக்கிய விடயங்கள் தொடர்பில் பேசும்போது அனுபவமுள்ளவர்களின் ஆலோசனைகளை பெற வேண்டும். அவ்வாறு பெறுவதில்லை. என்னைப் பொறுத்தவரையில் எனது அரசியல் சுத்தமாகவே உள்ளது.

2005ம் ஆண்டு முதல் தடவையாக சமஸ்டியை முன்வைத்து ஜனாதிபதி தேர்தலில் ஒருவர் போட்டியிட்டார். அந்த நேரத்தில் அவருக்கு மாறாக செயற்பட்டு அல்லது மக்களை தூண்டிவிட்டு அவருக்கு வாக்களிக்க வேண்டாம் என்று சொன்னீர்கள்.

விடுதலைப்புலிகளை மறைமுகமாக தோற்கடிக்கும் நோக்கத்தோடு, யார் விடுதலைப்புலிகளை அழிப்பேன் என்று யாழ்ப்பாணத்தில் ஆரூடமிட்டாரோ அவரை ஆதரித்தீர்கள். கடந்த கால வரலாற்றை பார்க்கின்ற போது நீங்கள் பதவிக்காகவும், பலவித நன்மைகளிற்காகவும் உங்களிற்காக உழைத்தீர்களேயன்றி, மக்களிற்காக உழைக்கவில்லை.

மக்களிற்கு 2005ம் ஆண்டு கிடைத்த வாய்ப்பை தடுத்த நீங்கள் யாரும் அரசியலில் இருக்க தகுதியற்றவர்கள். அந்த தேர்தலில் சிங்கள மக்கள் 48 வீதம் வாக்களித்திருந்தார்கள். எமது மக்களை 2 வீதமாவது வாக்களிக்க விட்டிருந்தால் இன்று சமஸ்டி ஆட்சி இருந்திருக்கும்.

இவர்களில் யாரேனும் ஒருவர் தனது தகுதியை வைத்து தனது வரலாற்றை வெளியிடட்டும் பார்ப்போம். என்னைப்பொறுத்தவரையில் மக்களை ஏமாற்றுகின்றார்கள். 3 லட்சம் மக்களை காப்பாற்றுங்கள் என்று நான் கூறியபோது நீங்கள் வெளிநாடுகளில் இருந்தீர்கள்.

நான் மீண்டும் மீண்டு அந்த மக்களை காப்பாற்றுங்கள் என்று கேட்டேன். ஒருவரும் வாய் திறக்கவில்லை. இந்திய அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு வரச்சொன்ன போது நீங்கள் போகவில்லை. அவ்வாறு கடந்த நாட்களில் மக்களை கொண்டு சென்று நடுக்கடலில் தள்ளிவிட்டு, இன்று கரம் நீண்டுகின்றீர்கள். உங்களால் அரசியல் செய்ய முடியாது ஒதுங்கினால் நன்றாக இருக்கும் எனவும் ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

Canada

We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# தாயக மக்களின் அரசியல் அதிகாரத்தை காப்பாற்ற இயலாதவர்களின் கட்சிகளை கலைத்து விடலாமே?

வடக்கும் கிழக்கும் இணைந்ததாக கலாச்சார ரீதியாகவும் தமிழ்த் தேசியத்தின் அடிப்படையிலும் உணரப்படும் இந்த நாட்களில் தாயக மக்களின் அரசியல் அதிகாரத்தை காப்பாற்ற இயலாதவர்களின் கட்சிகளின் தேவை எமது மக்களுக்கு உள்ளதா? என்பதை நாம் கவனித்து செயற்பட வேண்டும் என்பதே தற்போதைய உடன் நடவடிக்கைக்குரிய விடயமாகும். அவ்வாறிருக்க, ஒரு பக்கத்தில் பெரும்பாலானவர்கள் கணிப்பின் பிரகாரம். எல்லாக் கட்சிகளின் மீதும் மக்கள் நம்பிக்கையிழந்து விட்டார்கள். இந்த நம்பிக்கையிழப்பும் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்ற அவர்களுடைய கருத்துக்குப் பிரதான காரணம் என்றே கருதப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் தான் வடக்கு கிழக்கு சிவில் அமைப்புக்களின் கூட்டிணைவு என்று அழைக்கப்பட்ட "தமிழ் மக்கள் பொதுச் சபை"யின் அறிக்கை ஒன்று தற்போது வெளியாகியுள்ளது.

இதுவரை வடக்கு கிழக்கு சிவில் அமைப்புக்களின் கூட்டிணைவு என்று அழைக்கப்பட்ட தமிழ் குடிமக்கள் சமூகத்தின் கட்டமைப்பை இனிமேல், "தமிழ் மக்கள் பொதுச்சபை" என அழைப்பது என்றும் தீர்மானிக்கப்படடுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயத்தில் அரசியல் கட்சிகள் தங்கள் முடிவுகளை உத்தியோகபூர்வமாக அறிவித்து முடித்தவுடன் பரஸ்பர புரிந்துணர்வு அடிப்படையில் ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்கி செயற்படுவது என ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது என்று கூறப்படுகின்ற

அதேசமயம் இதுவரை சந்திக்கப்பட்ட பொதுமக்கள் அமைப்புக்கள் தொடர்பான விபரங்களையும் அந்த அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவித்த கருத்துக்களையும் குடிமக்கள் சமூகத்தினர் தொகுத்து வெளியிடவில்லை. எனினும் சந்திப்பில் ஈடுபட்டவர்கள் தரும் தகவல்களின்படி பெரும்பாலும் எல்லா மக்கள் அமைப்புகளும் பொது வேட்பாளருக்கு முழுமையான ஆதரவை தெரிவிக்கின்றன. இப்படி ஒரு நகர்வை எப்பொழுதோ எடுத்திருக்க வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். அவர்களில் அநேகர் பெரும்பாலான எல்லாக் கட்சிகளின் மீதும் நம்பிக்கையிழந்து விட்டார்கள். இந்த நம்பிக்கையிழப்பும் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்ற அவர்களுடைய கருத்துக்குப் பிரதான காரணம்.

கடந்த காலங்களில் 'பொது வேட்பாளர் தேவை' என்ற சிந்தனை தோன்றும் போது. பெரும்பாலானவர்கள் அதை சட்டை செய்வதில்லை. அதற்கிடையில் மாறி மாறி வரும் தென்னிலங்கை அரசுகள் மற்றும் இந்திய அரசு ஆகியவற்றிடமிருந்து தொடர்ச்சியாக நிதி அன்பளிப்புக்களையும் சலுகைகளையும் பெற்றுக்கொள்வதையே குறிக்கோளாகவும்., பணம் சம்பாதிப்பதே அவர்களின் முக்கியமானது என்ற 'கொள்(ளை)கையில்" உள்ள சில பதவிகள் இல்லாத அரசியல்வாதிகள் வெளியிடுகின்ற ஒவ்வொரு அறிக்கைக்கும். அவற்றுக்கு உரிய சன்மானம் மற்றும் சலுகைள் கிடைத்த வண்ணமே உள்ளன. இவ்வாறானவர்களை எமது மக்கள் அடையாளம் காண்பதற்கு தயாராக இல்லாமல் இருக்கும் போது. அவர்கள் தங்கள் 'வேலைகளை' தொடரர்ந்த வணணமே உள்ளார்கள்

இவ்வாறாக கடந்த 15 ஆண்டுகளில் நடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தல்களின் போதும் தமிழ் மக்கள் ஒப்பீட்டளவில் ஒற்றுமையாக ஒரு முடிவை எடுத்தார்கள். அது ராஜபக்சங்களுக்கு எதிரான முடிவு. ஆனால் அந்த முடிவின் விளைவையும் பலன்களையும் வேறு ஒரு தென்னிலங்கை வேட்பாளரே அனுபவித்தார். அதிலும் தமிழ் மக்களால் ஆதரிக்கப்பட்ட வேட்பாளர்களில் ஒருவர்தான் -- வெற்றி பெற்றார். ஆனால் அவர் தமிழ் மக்கள் தனக்கு வழங்கிய ஆணைக்குத் துரோகம் செய்தார்.

எனவே ஒரு குடும்பத்துக்கு- ராஜபக்ச குடும்பத்துக்கு-எதிராக கடந்த 15 ஆண்டுகளாக ஐக்கியப்பட்டு வாக்களித்த மக்கள், இம்முறை ஒரு தமிழ் பொது வேட்பாளருக்காக் தமிழ் தேசிய ஐக்கியத்துக்காக் ஒரு தமிழ்ப் பொது நிலைப்பாட்டுக்காக் தமிழ் மக்களை ஒன்று திரட்டும் ஒரு பெரும் செயலுக்காக் ஒன்று திரண்டு வாக்களிப்பார்களாக இருந்தால், அது தமிழ் அரசியலில் பெருந்திருப்பத்தை ஏற்படுத்தும். கடந்த 15 ஆண்டு காலத் தேக்கத்திலிருந்து கற்றுக் கொண்ட ஒரு புத்திசாலியான இனம் அப்படித்தான் முடிவை எடுக்கும் என்று இவ்வாரக் கட்டுரையில் பத்தி எழுத்தாளர் சாந்தன் யாழ்ப்பாணத்திலிருந்து குறிப்பிட்டதை வடக்கு கிழக்கு மக்கள் நன்கு உணர்ந்து புரிந்தும் செயற்பட வேண்டும் என்று அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

**மானிப்பாய் இந்துக்கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் — கனடா**

**33வது பொங்கும் பொழுது விழா - June 08, 2024**

மானிப்பாய் இந்துக்கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா நடாத்தும் பொங்கும் பொழுது விழா ஜுன் 08 ஆம் திகதி சனிக்கிழமை, மாலை 5:30 மணி பதாடக்கம் இரவு 11:00 மணி வரை 3840 Finch Avenue East, Scarborough, Toronto வில் அமைந்துள்ள Metropolitan Centre மண்டபத்தில் மிகவும் கோலாகலமாக நடைபெற உள்ளது. இவ்விழாவில் பிரதம விருந்தினர் உரை, விழா சஞ்சிழக வெளியீடு, திரையிசைப் பாடல்கள், விணை இசை, நடன நிகழ்ச்சிகள், ஆகிய நிகழ்சிகளோடு பழைய மாணவர் கலந்துரையாடுவதற்குரிய சந்தர்பங்களுக்கும் இடம் அளிக்கப்படும்.

இவ்விழாவிற்கு பழைய மாணவர்கள், மாணவிகள் அவர்தம் வாழ்க்கைத் துணைவர்கள், பிள்ளைகள், நண்பர்கள், நலன்விரும்பிகள் யாவரும் சமூகமளித்து சிறப்பிக்குமாறு பழைய மாணவர் சங்க செயற்குழு அங்கத்தினர் அன்புடன் அழைக்கின்றார்கள். தொடர்புகட்கு:

| | | |
|---|---|---|
| க. கமல்ராஜ் | செ. பார்த்திபன் | சி. கணேசலிங்கம் |
| (416) 821-7870 | (647) 710-9404 | (647) 993-6248 |

(முன் பக்கத் தொடர்ச்சி)

# பெண்களின் உலக உதைப்பந்தாட்ட போட்டி — 2024 இறுதிப் போட்டிக்கு...

தமிழீழ பெண்கள் அணி செப்மீ தேசத்தின் பெண்கள் அணியோடு மோதும் இறுதிப் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை ஜுன் 8, சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு (நோர்வே நேரம்) நடைபெற்று பின்னர் விருதுகள் மற்றும் வெற்றிக்கிண்ணம் வழங்கும் வைபவம் மாலை 4 மணிக்கு (நோர்வே நேரம்) நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கொனி.ஃ.பாவின் மகளிர் உலக உலக உதைப்பந்தாட்டப் போட்டியில் தமிழ் ஈழம் பெண்களின் அணி முதல் தடவையாக பங்கேற்கிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

எமது தாய் மண்ணை அடையாளப்படுத்தும் தமிழ் ஈழம் மகளிர் கால்பந்து உதைப்ந்தாட்ட அணியில் நோர்வே, இங்கிலாந்து, சுவிஸ், நெதர்லாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் கனடா ஆகிய 7 நாடுகளில் வசிக்கும் தமிழ் ஈழம்த்தை பிரதிநிதித்துவம் செய்யும் பெண் வீராங்கனைகள் அங்கம் வகிக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் மெலனி சுரேஸ்குமார் என்னும் கனடிய பல்கலைக்கழக மாணவியும் விளையாடுகின்றார் என்பதும் கனடா உதயன் சர்வதேச விருது விழாவில் 2022ம் ஆண்டிற்கான "இளையோர் அடையாள விருது" பெற்றவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# இந்தியப் பொதுத் தேர்தலில் தமிழ்நாட்டின் அனைத்து தொகுதிகளிலும் வெற்றிவாகை சூடி தமிழர்களின் பலத்தை நிரூபித்து விட்டீர்கள்

### தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ள உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையகம்



"அண்மையில் நடைபெற்று முடிந்த இந்தியப் பொதுத் தேர்தலில் தாங்களும் தங்கள் கட்சியினரும் எதிர்பார்த்தது போன்று தமிழ்நாட்டின் அனைத்து 40 தொகுதிகளிலும் வெற்றிவாகை சூடி தமிழர்களின் பலத்தை நிரூபித்து விட்டீர்கள். ஏனைய தேசியக் கட்சிகள் மேற்கொண்டான பொய்யான பிரச்சாரத் தந்திரங்களையெல்லாம் முறியடித்து தமிழ் நாட்டின் பலத்தை உலகிற்கு எடுத்துக் காட்டிய தாங்கள் உலகத் தமிழர்களின் ஒப்பற்றத் தலைவராகவும் விளங்குகின்றீர்கள் என்பதே உண்மை. எனவே தங்கள் தமிழ்நாட்டிலும் "இந்தியா" என்ற புகழ் மிக்க ஜனநாயக தேசத்திலும் மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ அனைத்து முயற்சிகளையும் தொடர்ச்சியாக மேற்கொள்வீர்கள் என்றும் நாம் நிச்சயமாக நம்புகின்றோம்"

இவ்வாறு தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ள கனடாவில் இயங்கிவரும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையகத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் அவர்கள் இயக்கத்தின் சார்பில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி வாழ்த்துச் செய்தியில் தொடர்ந்து செயலாளர் நாயகம் குறிப்பிடுகையில் தமிழ்நாட்டில் மட்டுமல் உலகில் ஏனைய நாடுகளிலும் தமிழ் மொழியையும் தமிழர் பண்பாட்டையும் கலைகளையும் காப்பதற்கு தாங்கள் "அயலகத் தமிழர்களுக்கான" பிரிவொன்றை ஆரம்பித்துள்ளீர்கள்.

எமது உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கமும் கடந்த பல ஆண்டுகளாக உலகின் பல நாடுகளிலும் மாநாடுகளை நடத்தி பல பணிகளை ஆற்றிவருகின்றோம்.

எனவே எமது இயக்கமும் தங்கள் அரசோடும் தமிழக மக்களோடும் இணைந்து எதிர்காலத்தில் பல ஆரோக்கியமான தமிழ் மொழி தொடர்பான பணிகளை மேற்கொள்ள தங்கள் அனுமதியை எதிர்பார்த்து காத்திருக்கின்றோம்.

இங்ஙனம்
துரை கணேசலிங்கம்
செயலாளர் நாயகம்- உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்
தலைமையகம்- கனடா 06-06-2024

**யாழ்ப்பாணத்தில் காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் - கொழும்புத்துறையில் 4 பரப்பு காணி, கொழும்புத்துறை வீதியில் யோகர் சுவாமிகள் மடத்துக்கு அருகாமையிலும் பிள்ளையார் கோவிலுக்கு எதிர் புறமாகவும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு : krishnasubram7@gmail.com

What's up number Australia-61,434079623 – Serious Buyers Only

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

# கணிதப்பிரிவில் யாழ்ப்பாணத்தில் முதலிடம் பெற்ற மாணவன்!



யாழ்ப்பாண மாவட்டத்தில் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவன் மதியழகன் டினோஜன் முதலிடத்தைப் பெற்று பொறியியல் பீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

குறித்த மாணவன் அகில இலங்கை மட்டத்தில் 47 வது நிலையை பெற்று தென்மராட்சி மண்ணுக்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

குறித்த மாணவன் கருத்து தெரிவிக்கையில், சிறு வயது முதல் எனக்கு கணித பாடத்தில் ஆர்வம் இருந்தது. அதனால் தான் கணித பிரிவை உயர்தர பிரிவிலும் நான் தெரிவு செய்தேன்.

பாடசாலை சமூகம் தனியார் கல்வி சமூகம் எனது நண்பர்கள் போன்ற அனைவருக்கும் எனது வெற்றியில் பங்கு உண்டு. வகுப்பிலேயே 75 சதவீதமான பாடப்பரப்பை கவனித்து கிரகித்துக் கொள்வேன் வீட்டில் படிப்பது குறைவு. கல்வி பயின்று கொண்டிருக்கின்ற மாணவர்களுக்கு நான் கூறுவது யாதெனில் நீங்கள் பல இடங்களுக்கு சென்று கல்வி பயில வேண்டிய தேவை இல்லை. நீங்கள் ஏதாவது இடத்தில் கல்வி பயின்றாலும் அதனை நான்கு கிரகித்து விளங்கி படித்தால் அது போதுமானது.



செயற்கை நுண்ணறிவு பொறியியலாளராக வருவதே எனது இலட்சியமாக உள்ளது. அதனை நான் நிச்சயமாக அடைவேன் உறுதி பூணுவதாக அவர் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணம் நாரந்தனை பகுதியில் தமது பிள்ளைகள் மூவரையும் இழந்து தவிக்கும் பெற்றோர்!



ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாரந்தனை தெற்கு சூரியவத்தை பகுதியில் 01-06-2024 மாலை ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சிறுமிகள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது, 01-06-2024 மாலை அருகிலுள்ள வீடொன்றிற்கு பால் வாங்குவதற்காக சென்ற இரு சிறுமிகளையும் காணவில்லை என பெற்றோர்கள் தேடும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இதன்போது பால் வாங்குவதற்காக இரண்டு சகோதரிகளும் துவிச்சக்கர வண்டியில் சென்ற நிலையில் துவிச்சக்கர வண்டி கைவிடப்பட்ட குளக்கரையிலே காணப்பட்டது. இந்நிலையில் குளத்திலே தேடுகின்ற முயற்சியின் போது இரண்டு சகோதரிகளும் சடலமாக இரவு மீட்கப்பட்டனர்.

கைவிடப்பட்ட குளத்தின் அருகாமையில் செல்லும் ஒற்றையடிப் பாதையில் காணப்படும் கல்லொன்றில் தடக்கி வீழ்ந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

தந்தையும் தாயும் கூலி தொழிலாளர்களாக காணப்பட்ட நிலையில் வீட்டிலே அவர்கள் இல்லாத நிலையில் இவர்கள் பால் வாங்க செல்லும் வழியில் சூர்யவத்தைப் பகுதியில் காணப்படுகின்ற தனியாருக்கு சொந்தமான கைவிடப்பட்ட நீர்நிலையில் வீழ்ந்து உயிரிழந்துள்ளனர்.

வழமையாக பயன்படுத்துகின்ற வீதியில் திரிகின்ற கடிநாய்களுக்கு பயந்தே இந்த ஆபத்தான பாதையை பயன்படுத்தியதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

நிரஞ்சன் நிருசா வயது - 11, நிரஞ்சன் அனுஷ்கா வயது - 06 ஆகிய இரு சிறுமிகளுமே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

மிகவும் வறுமையான நிலையில் காணப்படும் இவர்களின் 3 பிள்ளைகளில் இரண்டாவது மகள் கடந்த வருடம் தண்ணீர் பவுசரில் ஏறியதால் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்துள்ளார். இந்நிலையில் மற்றைய இரண்டு பிள்ளைகளும் உயிரிழந்துள்ளனர்.

தமது மூன்று பிள்ளைகளையும் இழந்த நிலையில் ஏற்பட்ட அதிர்ச்சியினால் தாய் ஊர்காவற்றுறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிசாருக்கு தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து பொலிசாரின் உதவியுடன் சடலங்கள் குளத்தில் இருந்து மீட்கப்பட்டு ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்படவுள்ளது.



சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஊர்காவல்துறை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அனைத்து தமிழ் தலைவர்களுக்கும் சிலை அமைக்கப்படும்

## தியாகி சிவகுமாரன் நினைவு தினத்தில் அமைச்சர் டக்ளஸ் அறிவிப்பு!



தேசிய நல்லிணக்கமும் அணுகுமுறைகளும் மட்டுமல்லாது எமது தற்துணிவுமே இன்று சிவகுமாரன் சிலை கம்பீரமாக நிமிர்ந்திருக்க காரணம் என சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எதிர்காலத்தில் கட்சி மற்றும் இயக்க வேறுபாடுகள் இன்றி, ஈழப் போராட்டத்தினை முன்னெடுத்த அனைத்து தலைவர்களுக்கு சிலைகளை அமைத்து அவர்கள் அனைவரையும் வரலாற்றில் நிலைநிறுத்த எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

ஈழப் போராட்ட வரலாற்றில் உயிர் தியாகம் செய்த முதல் போராளி பொன் சிவகுமாரனின் 50 ஆவது ஆண்டு நினைவு தினத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உரும்பிராயிலுள்ள பொன் சிவகுமாரனின் உருவச் சிலைக்கு அருகில் இன்று இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈகச் சுடரேற்றி மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தியபின் நடைபெற்ற நினைவுக் கூட்டத்தில் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடிய தமிழ் தலைவர்கள், போராளிகள், மக்கள் எனப் பலரும் நினைவுகூரப்பட வேண்டியவர்களாக உள்ளனர். அவர்களது நினைவேந்தல்களை செய்வதற்கான ஏற்பாடுகளும் குறிப்பாக அவர்களது நினைவுச் சிலைகள் நிறுவப்படுவது அவசியமாகும். இதில் கட்சி பேதங்களோ இயக்க வேற்றுமைகளோ இருக்கப்போவதில்லை.

பொன் சிவகுமாரனது உருவச்சிலை தற்போதுள்ள உருவச்சிலை நிறுவப்படுவதற்கு முன்னர் மூன்று தடவைகள் உடைத்தெறியப்பட்டது. இதற்கு சரியான புரிதல் இன்மையே காரணம் என்று நினைக்கின்றேன்.

ஆனால் 1999 களில் அன்றைய அரசுடன் எமக்கிருந்த நல்லுறவு, எமது தேசிய நல்லிணக்க வழிமுறை என்பவற்றுடன் எமக்கிருக்கும் தற்துணிவுமே இந்த சிலையை அமைப்பதற்கும் தலைநிமிர்ந்திருக்க முக்கிய காரணமாக உள்ளது.

அதுபோலதான் யாழ். மணிக்கூட்டு கோபுர சுற்றுவட்டத்திலுள்ள மன்னர்களது சிலைகள், முத்திரைச்சந்தியிலுள்ள சங்கிலியன் சிலை, யாழ்.மடத்தடியிலுள்ள தனிநாயகம் அடிகளார் சிலை போன்றனவும் நிறுவப்பட்டன.

இதேநேரம் பொன் சிவகுமாரனது நினைவு நாளான இன்று தமிழ் அரசியல் பரப்பில் உள்ள பல கட்சியின் தலைவர்கள் முக்கியஸ்தரகள் பிரமுகர்கள் என ஒன்றாக கூடியிருப்பதானது இந்நாளை அனைவரும் எமது இனத்தின் ஒரு பொதுவான நாளாக அடையாளப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

இருப்பவைகளை பாதுகாத்துக்கொண்டு இழந்தவைகளை ஈடுசெய்யும் வகையில் முன்னோக்கி நகரவேண்டும் என்று அடிக்கடி வலியுறுத்துவதை போல, எமது மக்களின் உரிமைசார் விவகாரங்களிலும் நடைமுறை சாத்தியமான முன்னெடுப்புக்களை அனைத்து தரப்பினரும் இணைந்து முன்னெடுக்க முடியும்.





அதேபோன்று, எமது மக்களின் இருப்புக்கள் மற்றும் வரலாறுகள் அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்லப்படுவதற்கான முயற்சிகள் அனைத்திற்கும் நாம் முழுமையான ஒத்துழைப்புகளுடன் முயற்சிகளையும் மேற்கொள்ள தயாராக இருக்கின்றோம்" எனவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வணிகப் பிரிவில் 2இடம் பெற்று யாழ்ப்பாணத்தில் சாதனை படைத்த சுழிபுரம் விக்டோரியா கல்லூரியின் மாணவி முகுந்தினி!



வெளியாகிய 2023ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சையில், சுழிபுரம் விக்டோரியா கல்லூரியின் மாணவியான முகுந்தினி பிரான்ஸிஸ் தேவநாயகம் அவர்கள் வணிகப் பிரிவில் மாவட்ட ரீதியாக இரண்டாம் இடத்தினை பெற்று சாதனை படைத்துள்ளார்.

இது குறித்து அந்த மாணவி கருத்து தெரிவிக்கையில், 2023 ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி 3ஏ சித்திகளை பெற்று மாவட்ட ரீதியில் முதலாமிடத்தை பெற்றுள்ளேன். இந்த வெற்றிக்கு காரணமாக இருந்த அம்மா, அப்பா, அதிபர், ஆசிரியர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் என அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

பாடசாலையிலும் தனியார் கல்வி நிலையங்களிலும் நான் படிக்கின்ற பாடங்களை உடனுக்குடன் மீட்டல் செய்வேன். அப்படி படித்ததால் பரீட்சைக்கு சொல்லும்போது அதிக சுமையாக இருக்காது. எனக்கு விளங்காத பாடங்களை நிகழ்நிலை காணொளிகளை (online videos) பார்த்து விளங்கிக் கற்பேன்.

சிறந்த ஒரு கணக்காளராக வந்து எமது மக்களுக்கு சேவை செய்வதும், எனது பெற்றோரை மிகவும் சந்தோஷமாகவும் கவனிப்பதுமே எனது இலக்கு என்றார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# கிளிநொச்சி மாவட்டத்தில் உழவனூர் பகுதியில் சகோதரிகள் இருவர் வைத்தியதுறையில் விசேட சித்தி பெற்றுள்ளனர்

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட உழவனூர் பகுதியைச் சேர்ந்த சகோதரிகள் இருவர் வைத்தியதுறையில் விசேட சித்தி பெற்றுள்ளனர்.

கண்டாவளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட உழவனூர் பகுதியில் இரண்டு மாணவிகள் க.பொ.த உயர்தர பரீட்சையில் விஞ்ஞான பிரிவில் விசேட சித்தி பெற்று கிராமத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

பின்தங்கிய கிராமமான உழவனூர் பகுதியில் அடிப்படை வசதிகளின்றி வறுமையான சூழ்நிலையிலும் தனது தந்தையின் தனி உழைப்பை மட்டும் வைத்து தமது கல்வியை தொடர்ந்து வெற்றிபெற்றுள்ளனர்.

குறித்த மாணவிகளின் தந்தை லொத்தர் சீட்டுக்கள் விற்பவர். அவரது தனி வருமானத்தை கொண்டு தம்மை கல்வி பயில வைத்ததாகவும், கிட்டத்தட்ட 5 கிலோமீற்றர் சென்று தர்மபுரம் மகாவித்தியாலயத்திலேயே தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கோண்டதாகவும் தெரிவித்தனர்.

# பொன்னாலையில் பெண் தலைமைத்துவக் குடும்பத்திடம் பணத்தைப் பறித்துச் சென்ற பொலிஸ்







பொன்னாலை மேற்கில் குழாய்க்கிணறு வெட்டிய பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்று அனுமதி பெற்றுக்கொள்ளவில்லை என்ற காரணத்தைக் காட்டி பொலிஸார் 8 ஆயிரம் ரூபா பணத்தை இலஞ்சமாகப் பெற்றுச்சென்றுள்ளனர்.

03-05-2024 திங்கட்கிழமை மதியம் இச்சம்பவம் இடம்பெற்றது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

மிகவும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மேற்படி பெண் தலைமைத்துவக் குடும்பம் குடிசை வீடொன்றிலேயே வசித்து வருகின்றது. நீண்ட காலமாக கிணறு இல்லாமல் பொதுக் கிணறுகள் மற்றும் அயல் வீட்டுக் கிணறுகளையே பயன்படுத்தி வருகின்றனர்.

இக்குடும்பத்தில் தற்போது க.பொ.த உயர்தரத்தில் கற்றுக்கொண்டிருக்கும் மாணவன் கற்றல் நேரத்திற்கு மேலதிகமாக பகுதி நேரமாக தொழிலுக்குச் சென்று சேகரித்த பணத்தில் குழாய்க் கிணறு ஒன்றை அமைக்க முடிவெடுத்தனர்.

திங்கட்கிழமை மதியம் குழாய்க் கிணறு வெட்டிக்கொண்டிருந்தபோது முச்சக்கரவண்டி ஒன்றில் வந்த பொலிஸார் அனுமதி பெறாமல் குழாய்க்கிணறு வெட்டுவதாக தங்களுக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது எனக்கூறி அக்குடும்பத்தை அச்சுறுத்தினர்.

கிணறு வெட்டுவதற்காக வந்தவர்களின் கருவிகளைக் கொண்டுசெல்லப்போவதாக மிரட்டினர்.

செய்வதறியாது திகைத்து நின்ற மேற்படிக் குடும்பம் அனுமதி பெறவேண்டும் என்ற விடயம் தமக்கு தெரியாது எனவும் தமது கஸ்ட நிலையையும் பொலிஸாருக்கு எடுத்துக் கூறினர்.

அவர்களின் கருத்தைச் செவிமடுக்காத பொலிஸார் 15 ஆயிரம் ரூபா பணம் தந்தால் எதுவும் செய்யாமல் விட்டுச் செல்வதாகக் கூறினர். ஆனால் அக்குடும்பமோ கிணறு வெட்டுவதற்காக ஒரு இலட்சம் ரூபாவை மாத்திரமே சேகரித்து வைத்திருந்தது.

தம்மிடம் பணம் இல்லை எனவும் அவ்வாறாயின் இரண்டாயிரம் ரூபா தருகின்றோம் எனவும் கெஞ்சிக் கேட்டனர். பொலிஸார் உடன்படவில்லை. ஐயாயிரம் ரூபா தருகின்றோம் என்றனர். அதற்கும் உடன்படாத பொலிஸார் 8 ஆயிரம் ரூபா பணத்தைப் பறித்துக்கொண்டு சென்றனர்.


க.பொ.த உயர்தரத்தில் கல்வி பயிலும் மாணவன் பகுதி நேர கூலி வேலைக்கு சென்று சிறுக சிறுக சேமித்த பணத்திலேயே அந்த குழாய் கிணறு தோண்டப்பட்டது. அத்துடன் குறித்த மாணவன் உழைத்த பணத்தையே பொலிஸார் இலஞ்சமாக பெற்றுச் சென்றுள்ளனர்.

பொன்னாலையில் பல குழாய்க்கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்ற போதிலும் இதுவரை யாரும் அனுமதி பெற்றிருக்கவில்லை. அனுமதி பெறவேண்டும் என்ற விடயம் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட மேற்படி குடும்பத்திற்கு தெரிந்திருக்கவில்லை.

சட்டம் ஒழுங்கை நடைமுறைப்படுத்தவேண்டிய பொலிஸார் பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதிப்பதைப் போன்று பணத்தைப் பறித்துச் சென்றிருக்கின்றனர். சுமணசிறி, குமார, கசுன் என்ற மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களுமே இவ்வாறு இலஞ்சம் பெற்றதாக கூறப்படுகிறது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வட்டுக்கோட்டை பொலிஸாரின் சித்திரவதையில் அலெக்ஸ் என்ற இளைஞன் உயிரிழந்துள்ளார். அதைவிட வட்டுக்கோட்டை பொலிஸாரின் அடாவடிகளும் இலஞ்ச ஊழல்களும் அதிகரித்த நிலையில், அவை கடந்த காலங்களில் ஊடகங்களில் செய்திகளாகவும் வெளிவந்தன. இருப்பினும் இதுவரை வட்டுக்கோட்டை பொலிஸாரின் அராஜகங்கள் குறையவில்லை.

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு புதிய பொறுப்பதிகாரி இடமாற்றம் பெற்று வந்த பின்னரே இவ்வாறான பொலிஸாரின் அராஜகங்கள் அதிகரித்துள்ளன. வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு.கொஸ்தா அவர்கள் கிராமங்களுக்கு சென்று சரியான சேவைகளை செய்வதில்லை எனவும், கிராம மட்ட நிகழ்வுகளுக்கு விருந்தினராக அழைக்கின்ற சந்தர்ப்பங்களில் கூட அவர் அவற்றை புறக்கணிக்கணிப்பதாக மக்களால் கூறப்படுகிறது.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

# பிரபாகரன் உருவாக்கிய தமிழ் தேசிய கூட்டமைப்பை அழித்தவர்கள் மக்களை ஒன்று படுத்த போவதாக கூறுவது வேடிக்கையானது

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோகராதலிங்கம்

- எஸ்.ஆர். லெம்பேட் (02-06-2024)

தமிழ் பொது வேட்பாளர் நடைமுறைச் சாத்தியமில்லாத ஒன்றென தெரிந்தும் தமிழ் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் முனகிக் கொண்டே ஓடிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் அத்தனை பேரும் தான் பிரபாகரன் உருவாக்கிய தமிழ் தேசிய கூட்டமைப்பை அழித்தவர்கள்.

அனைவரும் இணைந்து ஒரு தலைமையை தேர்ந்தெடுக்க முடியாதவர்கள், தாமே ஓரணியாக வரமுடியாதவர்கள் மக்களை ஒன்று படுத்த போவதாக கூறுவது வேடிக்கையானது என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.

தமிழ் பொது வேட்பாளர் தொடர்பாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் அவர்களிடம் வினவிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது கல்லில் நார் உரிக்கும் செயற்பாடு என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும்.

அனைத்து தமிழ் தேசிய கட்சிகளும், அவற்றின் தலைவர்களும் ஒன்றுபட போவதில்லை. அப்படி ஒன்றுபட்டு நின்று தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தினால் அதற்கு ஆதரவாக பிரச்சாரங்களை முன்னெடுக்க நான் மட்டுமல்ல தமிழ் மக்கள் ஓரணியாகுவார்கள், வெற்றியும் பெறலாம்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஒரு நிலைப்பாடு, தமிழரசுக் கட்சிக்குள் இருவேறு நிலைப்பாடு, ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி ஒரு நிலைப்பாடு. தமிழ்த் தேசியப் பரப்பிலே மக்கள் ஆதரவு கொடுக்கும் இக் கட்சிகளே ஒன்றாக இல்லை.

பதவிப் போட்டிகளை தீர்க்க முடியாத கட்சிகள் மக்கள் பிரச்சினையை தீர்ப்பதாக கூறுவது ஏமாற்று வேலையாகும்.

ஆக மொத்தத்தில் சஜித், ரணில், ஆனுர, பகிஷ்கரிப்பு, தமிழ் பொது வேட்பாளர் என்ற பஞ்ச நிலை முடிவுகளை தான் மக்கள் பகிர்ந்து கொள்ளப் போகிறார்கள். மக்களின் இந்த முடிவுகளுக்கு தமிழ் கட்சிகளைத் தவிர வேறு யாரும் காரணமாக இருக்க முடியாது.

பொது வேட்பாளர் விடயம் பல படிகளை தாண்ட வேண்டியிருக்கும். யார் வேட்பாளர், எந்த கட்சியில் போட்டியிடுவது, வடக்கா, கிழக்கா, ஆணா, பெண்ணா. ஒவ்வொரு கட்சிகளும், தலைமைகளும் எடுக்கின்ற நிலைப்பாட்டுக்கு மாறான கருத்துக்களை அதே கட்சியை சேர்ந்தவர்கள் எடுக்கின்ற நிலைப்பாடும் வரும்.



தமிழரசுக் கட்சிக்குள் சுமந்திரனும், சிறிதரனும் ஒரே கருத்தில் இல்லை. அனைத்து தமிழ் கட்சிகளும் ஓரணிக்கு வராது விட்டால் தமிழ் மக்கள் ரணிலுக்கு, அனுரவுக்கு, சஜித்துக்கு, தமிழ் பொது வேட்பாளருக்கு என வெவ்வேறு தீர்மானங்களை எடுப்பார்கள். சிலர் பகிஷ்கரிப்புக்கும் செல்வார்கள். எந்தவொரு தமிழ் கட்சியினதும் கோரிக்கைகளை ஏற்காமல் தம் இஸ்டப்படியே மக்கள் வாக்குச் சாவடிக்கு செல்வார்கள். தமிழ் தலைமைகள் பூ மிதித்தல் என ஆசையூட்டி மக்களை தீ மிதித்தலுக்குள் தள்ளிவிடுதல் பெரும் ஆபத்தானதாகும்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் வேட்பாளரை நாம் ஆதரிக்கவில்லை. ஐந்து வருடங்களில் என்ன மாற்றம் வந்தது தமிழ் வேட்பாளரை ஆதரிக்க, சஜித்துக்கு வாக்களித்தோம் அவர் வெல்லவில்லை.

வென்றிருந்தால், மைத்திரி போல் ஏமாற்றி இருந்தால் அவரை விட்டு விடலாம். ரணிலுக்கும் நாம் வாக்களிக்கவில்லை. ஆகவே நாம் வாக்களித்தவர்களோ, வாக்களிக்காதவர்களோ இன்னும் வெற்றி பெறவில்லை அனுரகுமார உட்பட.


அதை விட மக்கள் மனங்களை, மக்களின் நாடித்துடிப்பை கண்டறிந்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். கடந்த காலங்களில் மக்கள் முடிவெடுத்த பின்னரே கட்சிகளும், தலைமைகளும் முடிவு எடுத்திருக்கின்றன.

பட்டுணர்ந்தும் தமிழ் கட்சிகள் ஒன்றுபட மறுப்பது துரதிஸ்டமானது. தமிழ் மக்களின் சாபக்கேடானது, அம்பாறை பறிபோய்விட்டது. அடுத்த பாராளுமன்ற தேர்தலில் தமிழர் பிரதிநிதித்துவம் திருகோணமலையில் பறிபோய்விடும். ஒற்றுமையாக தமிழ் தேசிய கூட்டமைப்பாக இருந்தே சில நூறு வாக்குகளால் தான் சம்பந்தன் ஐயா வென்றார்.இப்போ பிரிந்திருப்பது திருமலை யை பறிகொடுக்கத்தான். வன்னியிலும் இதே நிலைதான் பிரிந்து சென்றால்.

இப்படியிருக்க ஜனாதிபதி தேர்தலில் இராமன் வென்றாலும் இராவணன் வென்றாலும் ஒன்றுமே நடக்கப்போவதில்லை என சொல்லிக் கொண்டு முட்டாள் தனமான முடிவு களை எடுக்காமல் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சவால்களை வென்று சாதித்த மன் – நானாட்டான் டிலாசால் கல்லூரி மாணவர்கள்

- எஸ்.ஆர். லெம்பேட் (06-06-2024)



தற்போது வெளியாகிய 2023 ஆண்டு க.பொ.த. உயர்தர பரீட்சையில் பல சவால்களை வென்று திறமையான சித்திகளைப் பெற்று மன்-நானாட்டான் டிலாசால் கல்லூரி மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் உயிரியல் விஞ்ஞான பிரிவில் செல்வி. வின்சன் ஜோரச் ஆன் யு'ானிக்கா 3A சித்தியினைப் பெற்று மாவட்ட நிலையில் 06 இடத்தை பெற்றுள்ளார்.

செல்வன். ஞானக்கோன் தனுஷன் வர்த்தக பிரிவில் 3A சித்தியினைப் பெற்று மாவட்ட நிலை 02 பெற்றுள்ளார்.

விநாயகமூர்த்தி அபிராமி 2A,B சித்தியை பெற்று மாவட்டத்தில் 07ம் நிலையையும், ஜெகநாதன் அரிய ஜோய்னஸ் 2A,B தர சித்தியினை பெற்று மாவட்ட நிலை 10 வர்த்தக பிரிவில் பெற்றுள்ளனர்.

மேலும் கலை பிரிவில் ஜேசுதாசன் ஆன் டிலானி குலாஸ் 3A சித்திகளை பெற்று மாவட்டத்தில் 4ம் நிலையும், கோபாலகிருஷ்ணன் அபிஷா 3A சித்திகளைப் பெற்று மாவட்டத்தில் 08ம் நிலையையும், செல்வி. ஜோன் றோயல்



ஜெறோசா லெம்பேட் 3A மாவட்டத்தில் 15 நிலையையும் பெற்றுள்ளதோடு பல மாணவ மாணவியர் திறமையான உயர் பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக் கழகம் செல்ல தகுதி பெற்றுள்ளார்கள்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# அம்பாறை ஆலையடிவேம்பில் டினோஜன் வாள்வெட்டுகுழுவின் தாக்குதலில் 7 பேர் படுகாயம் மக்கள் பயப்பீதியில்

**கனகராசா சரவணன்**

அம்பாறை ஆலையடிவேம்பு பிரதேசத்தில் டினோஜன் வாள்வெட்டு குழு வீடு ஒன்றில் புகுந்த இளைஞர் ஒருவர் மீது தாக்குதலில் மேற்கொண்டதுடன் வீதியால் சென்றவர்கள் மீது மேற்கொண்ட தாக்குதலில் 7 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் வீடு ஒன்றின் பொருட்களை அடித்து சேதமாக்கிவிட்டு தப்பி ஓடிய சம்பவம் வெள்ளிக்கிழமை (31) இரவு இடம் பெற்றுள்ளதாக அக்கரைப்பற்று பொலிசார் தெரிவித்தனர்.

டினோஜன் வாள்வெட்டு குழுவினருக்கும் வாச்சிக்குடா பிரதேவத்தைச் இளைஞர் ஒருவருக்கும் இடையே மரணவீடு ஒன்றில் வாய்தர்கம் ஏற்பட்டது இதன்காரணமாக குறித்த இளைஞனை பழிவாங்குவதற்காக அவனின் வீட்டை சம்பவதினமான இரவு 7.30 மணியளவில் டினோஜன் வாள் வெட்டு குழுவைச் சேர்ந்த 10 மேற்பட்டவர்கள் மோட்டர் சைக்கிள்களில் வாள்களுடன் அவரை தேடி சென்ற நிலையில் அவர் அங்கு இல்லாத நிலையில் அந்த பகுதியில் வீதியில் வந்த அந்த இளைஞரின் நண்பன் மீது தாக்குதலை மேற்கொண்டதையடுத்து அவன் அங்கிருந்து தப்பி ஓடி அவனது சகோதரியின் வீட்டினுள் புகுந்துள்ளான்.

இதனையடுத்து அவனை துரத்திச் சென்ற வாள் வெட்டுகுழு அவனின் சகோதரியின் வீட்டின் பொருட்களை உடைத்து அந்த இளைஞன் மீது தாக்குதலை மேற்கொண்டனர் இதனை தடுக்க சென்றவர்கள் மீதும் வாளால் வெட்டி தாக்குதல் நடாத்தினர்.

அதேவேளை இந்த வாள்வெட்டு குழுவின் அராஜகத்தையடுத்து அங்கு சென்றவர்கள் வீதியால் சென்றவர்கள் மீதும் வாளால் வெட்டி தாக்குதல் நடாத்தியதில் 7 பேர் படுகாயமடைந்ததையடுத்து தாக்குதலை மேற்கொண்ட குழுவினர் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளனர்.

இதில் படுகாயமடைந்தவர்களை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிசாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதுடன் இந்த தாக்குதலை மேற்கொண்ட குழு தலைமறைவாகியுள்ளதாகவும் அவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.





இதேவேளை இந்த தாக்குதலை மேற்கொண்ட டினோஜன் வாள் வெட்டு குழு அக்கரைப்பற்று நீதிமன்ற கட்டிடத்திற்கு தீவைத்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு பிணையில் வெளி வந்துள்ளதாகவும் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் எனவும்.

இவர்கள் தொடர்சியாக இந்த பிரதேசத்தில் இடம்பெறும் ஆலைய உற்சவங்கள் விளையாட்டு போட்டிகள் போன்ற பொது நிகழ்வுகளில் மதுபோதையில் சென்று அராஜகத்தில் ஈடுபட்டு ஒலிவாங்கிகள் மற்றும் பொருட்களை அடித்து உடைத்து சேதமாக்கியுள்ளனர் எனவும்.

இந்த வாள்வெட்டுக் குழுவின் தொடர்சியான அட்காசத்தினால் பாடசாலை சிறுவர்கள் தொடக்கம் மக்கள் அச்சத்தில் வாழ்ந்துவருவதாகவும் இவர்களுக்கு எதிராக பொலிசார் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காது அசமந்த போக்கில் இருந்து வருவதாக பிரதேச புத்திஜீவிகள், பொது அமைப்புக்கள், ஆலைய நிர்வாகங்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனா.


# மட்டக்களப்பில் தமிழரசுக்கட்சி வாலிபர் அணி முன்னாள் தலைவர் மற்றும் தமிழ் இளையோர் மக்கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் இருவரையும் விசாரணைக்கு அழைப்பு



மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக்கட்சி வாலிபர் அணி முன்னாள் தலைவர் மற்றும் தமிழ் இளையோர் மக்கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் ஆகிய இருவரையும் எதிர்வரும் 11, 12ம் திகதிகளில் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் அவர்களது வீடுகனுக்கு சென்று மட்டக்களப்பிலுள்ள அலுவலகத்திற்கு விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளனா.

மாவட்ட தமிழரசுக்கட்சி வாலிபர் அணி முன்னாள் தலைவரும் அபிவிருத்தி உத்தியோகத்தருமான லோ. திபாகரனை எதிர்வரும் திகதி 11.06.2024 விசாரணைக்குவருமாறு கடிதம் ஒன்றை பயங்கரவாத தடுப்பு பிரிவினர் வழங்கியுள்ளனர்.

அதேவேளை தமிழ் இளையோர் மக்கள் இயக்க ஒருங்கிணைப்பாளரும் மனிதவுரிமை செயற்பாட்டாளருமான கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த ஜீவரெத்தினம் தவேஸ்வரனையும் எதிர்வரும் 11,12ம் திகதிகளில் விசாரணைக்கு வருமாறு பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் அழைப்பு விடுத்துள்ளதாகவும் கடந்த காலம் ஒரே நாளில் 11 மணித்தியாலம் 45 நிமிடங்கள் தடுத்துவைக்கப்பட்டு மட்டக்களப்பில் உள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவின் அலுவலகத்தில் வாக்குமூலம் பெறப்பட்ட நிலையில் இந்த புதிய அழைப்பு கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.




THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

**20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி**

**மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி**

**சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்**

**உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்**



Call us Today

**Cell : 416-728-5772**
**Office : 416-519-3896**

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கைச் செய்திகள்
Sri Lanka News

# இராணுவத்தினால் அழிக்கப்பட்ட தியாகி பொன் சிவகுமாரனின் சிலையில் அஞ்சலி



பொன் சிவகுமாரனின் 50 ஆவது நினைவேந்தல் இராணுவத்தினரால் இடித்து அழிக்கப்பட்ட பொன் சிவகுமாரனின் திருவுருவச்சிலையில் தமிழ்த் தேசியவாதிகளால் 05-06-2024 அன்று காலை உணர்வுபூர்வமாக அஞ்சலிக்கப்பட்டது.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஸ் மற்றும் அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியுமான சி.அ.யோதிலிங்கம் போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் ஈஸ்வரன, அதன் செயலாளா தனுபன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு அகவணக்கம் செலுத்தியதுடன் திருவுருவச் சிலைக்கு தீபமேற்றி மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



உயிர் தமிழுக்கு உடல் மண்ணிற்கு என்ற இலட்சியத்துடன் தமிழ் மக்களின் விடுதலைக்காக தன்னுயிர்த் தியாகம் செய்த தியாகி பொன் சிவகுமாரன் அவர்களது உருவச்சிலை 05 யூன் 1975 ஆம் ஆண்டு சிறைமீண்ட இளைஞன் முத்துக்குமாரசுவாமி அவர்களால் திறந்து வைக்கப்பட்ட நிலையில் இராணுவத்தினராலும் இராணுவத்துடன் சேர்ந்தியங்கிய தரப்புக்களாலும் அச் சிலை பலதடவைகள் உடைத்து நொருக்கப்பட்டு உரும்பிராய் சந்தை வளாகத்தில் வீசப்பட்டு புதையுண்டு கிடந்த நிலையில் அதனை தமிழ் மீள எடுத்து சிவகுமாரனின் சிலை அமைத்த வளாகத்தில் மீள சிலை வளாகத்தின் ஒருபகுதியில் முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஸ் பிரதியிஸ்டை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு கிழக்கு சிவில் அமைப்புக்களின் கூட்டிணைவு என்று அழைக்கப்பட்ட "தமிழ் மக்கள் பொதுச் சபை"யின் அறிக்கை



ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் என்ட்ரோ பிரஞ்ச் (Marc - Andre Franche) உள்ளிட்ட குழுவினர், வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களை இன்று (05-06-2024) சந்தித்து கலந்துரையாடினர். வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இந்த கலந்துரையாடல் நடைபெற்றது.

வட மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண பிரதம செயலாளர், யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபர், மாவட்ட செயலாளர் (காணி), மாகாண காணி ஆணையாளர் மற்றும் யாழ் பிராந்திய பாதுகாப்பு படைகளின் உயர் அதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

வடக்கு மாகாணத்தின் பொருளாதாரம், கல்வி, விவசாயம், தொழிற்துறை ஊக்குவிப்பு, காணி விடுவிப்பு, கண்ணிவெடி அகற்றும் பணி, மீள்குடியேற்றம், இயற்கை வளங்கள், முதலீட்டு திட்டங்கள், முன்னுரிமை படுத்தப்பட வேண்டிய செயற்பாடுகள், பாதுகாப்பு துறையினரின் செயற்பாடுகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கான ஒத்துழைப்புகள் அதிகம் தேவைப்படுவதாக வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் குறிப்பிட்டார். அவர்களுக்கான உள்ளூர் மற்றும் ஏற்றுமதி சந்தை வாய்ப்புகள் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் எனவும், நவீன தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்க வேண்டும் எனவும் கௌரவ ஆளுநர் கூறினார். அத்துடன் புலம்பெயர் உறவுகள், வடக்கிலுள்ள தொழில் முனைவோருக்கான ஒத்துழைப்புகளை வழங்கி அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.



புலம்பெயர் உறவுகளால் வடக்கு மாகாண மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவ முடியும் என குறிப்பிட்ட ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் என்ட்ரோ பிரஞ்ச், முன்னுரிமை வழங்க வேண்டிய திட்டங்களை அடையாளம் கண்டு அவற்றில் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார். அத்துடன், சிறந்த பொறிமுறையின் ஊடாக முதலீடுகளை மேற்கொள்வது சிறந்தது எனவும் அவர் தெரிவித்தார். வடக்கில் காணப்படும் இயற்கை சக்தி வளங்களை பயன்படுத்தி பாரிய திட்டங்களை மேற்கொள்ளளும் போது பிரதேச மக்களின் நலன்கள் குறித்தும் ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும் என அவர் கூறினார். மேலும் இயற்கை சக்தி வளங்களை பயன்படுத்தி மேற்கொள்ளும் திட்டங்களில் பெற்றுக்கொள்ளும் இலாபத்தில் அந்தந்த கிராம அபிவிருத்திக்கென ஒருதொகை நிதி ஒதுக்கப்பட வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் தெரிவித்தார்.

காணி உரித்துகள் வழங்கப்படுகின்றமை வரவேற்கப்பட வேண்டிய விடயம் எனவும் ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் தெரிவித்தார். அத்துடன் வடக்கு மாகாண அபிவிருத்திக்கு சர்வதேச சமூகத்திடமிருந்து எவ்வாறான ஒத்துழைப்புகள் தேவை எனவும் அவர் இதன்போது வினவினார்.

மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கையை நிறைவு செய்ய கண்ணிவெடி அகற்றும் பணிகள் நிறைவு செய்யப்பட வேண்டும் எனவும், இதற்கான ஒத்துழைப்புகளை பெற்றுக்கொடுப்பது அவசியம் எனவும் கௌரவ ஆளுநர் கூறினார். அத்துடன் ஐக்கிய நாடுகள் அமைப்பின் கீழ் செயற்படும் சர்வதேச அமைப்புகள் வடக்கில் இதுவரையில் மேற்கொண்ட செயற்பாடுகளுக்கு நன்றி தெரிவித்த கௌரவ ஆளுநர், அனைத்து துறைகளுக்குமான அபிவிருத்திக்கு தேவையான ஒத்துழைப்புகளை தொடர்ந்தும் எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

# பொருளாதார நெருக்கடி காரணமாக தமிழகம் நோக்கி தொடர்ந்து பயணிக்கும் தமிழர்கள்



- நடராசா லோகதயாளன்

இலங்கையில் இருந்து படகு மூலம் ஆறுபேர் தமிழகத்திற்குச் சென்று அகதிகளாகச் தஞ்சம் அடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டம் திருமுறுகண்டிப் பகுதியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறுபேரே இவ்வாறு தமிழகத்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக வாழ முடியாத சூழ்நிலை கருதியே தாம் தமிழகம் வந்ததாக இலங்கையில் இருந்து தப்பிச் சென்றவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு தமிழகம் சென்றவர்களில் தாய், தந்தை, 3 சிறுமிகள் மற்றும் ஒரு சிறுவனும் அடங்களாகவே ஆறுபேர் கடல் வழியாகப் பயணித்துள்ளனர்.

இவ்வாறு பயணித்த ஈழ அகதிகளை தமிழகப் பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

# வடக்கு அதிகாரிகளின் கவனயீனத்தால் யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி ரணில் வழங்கிய ஆசிரிய நியமனம் பறிப்பு



வடக்கு மாகாண நிர்வாகத்தின் கவனயீனம் காரணமாக கடந்த மாதம் பல கனவுகளுடன் ஆசிரியர் நியமனம் பெற்ற பெண் ஆசிரியர் ஒருவனின் நியமனம் மீளப் பெறப்பட்டுள்ளது.

கடந்த மாதம் யாழ்ப்பாணம் வருகைதந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வடக்கில் ஆசிரியர் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கான நியமன கடிதங்கள் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலை அரங்கில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் ஆசிரியர் ஒருவருக்கு வழங்கப்பட்ட நியமனம் மீளப் பெறப்பட்ட சம்பவம் வடக்கு மாகாணத்தில் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவது, அண்மையில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுமார் 400க்கும் மேற்பட்ட பட்டதாரிகளை ஆசிரியர் நியமனத்துக்கு உள்வாங்குவதற்கான நேர்முகத்தேர்வு இடம்பெற்றது.

இவ்வாறு நேர்முகத் தேர்வு இடம்பெற்ற நிலையில் புள்ளிகள் வெளியிடப்படாமல் நியமனத்துக்கு உள்வாங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டது.

இவ்வாறு வெளியிடப்பட்ட பெயர்களில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பெண் பட்டதாரி ஒருவரும் ஆசிரியர் நியமனத்திற்கு உள்வாங்கப்பட்டார்.

இவர்களுக்கான நியமன கடிதங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 25 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் யாழ் தந்தை செல்வா அரங்கில் இடம்பெற்றது.

இதன்போது நியமனம் கிடைத்த பெண் ஆசிரியர் ஒருவரை நியமனத்தை தவறான நியமனம் எனக் கூறிஅவரது நியமனம் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் மீளப் பெறப்பட்டுள்ளது.

பட்டதாரி களை ஆசிரியர்களாக இணைத்துக் கொள்ளும் நேர்முகத் தேர்வு கிழக்கு மாகாணத்திலும் இடம்பெற்ற நிலையில் நியமன கடிதங்கள் வழங்குவதற்கு முன்னரே அவர்கள் பெற்ற புள்ளிகளை மாகாணப் பொதுச் சேவை ஆணை குழுவினால் வெளியிடப்பட்ட நிலையில் வடக்கு மாகாணத்தில் மட்டும் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# வடக்கு மாகாண சுகாதார அமைச்சிற்கு புதிய செயலர்

- நடராசா லோகதயாளன்



வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸினால் ஜே.எஸ். அருள்ராஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண நிர்வாகத்தில் நிர்வாக சேவை விசேட தரத்தைச் சேர்ந்த அதிகாரிகள் பற்றாக்குறையினால் சுகாதார அமைச்சிற்கு நிரந்தர செயலாளர் இன்றி பதில்ச் செயலாளரினால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் வடக்கு மாகாண சபைக்கு நிர்வாக சேவை விசேட தரத்தைச் சேர்ந்த மூவர் அண்மையில் புதிதாக வருகை தந்தனர்.

இவ்வாறு வருகை தந்தவர்களில் ஒருவரான ஜே.எஸ். அருளராஜ் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸினால் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர்களின் அரசியல் அபிலாசைக்கான வழிகாட்டி பொன் சிவகுமாரன்




- முன்னாள் தவிசாளர் நிரோஷ்

போராட்டப் பயணப்பாதையில் இனத்திற்கான மாணவர் எழுச்சியின் வடிவமாக சிவகுமாரனின் எழுச்சியையும் தியாகத்தினையும் என்றும் நினைவில் கொள்கின்றோம் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தியாகி பொன் சிவகுமாரனின் 50 ஆவது ஆண்டு நினைவு நாளான இன்று நாம் தமிழ்த் தேசியவாதிகளால் நிர்மாணிக்கப்பட்டு இராணுவத்தினராலும் இராணுவத்தினருடன் சேர்ந்தியங்கியவர்களினாலும் தகர்க்கப்பட்ட நிலையில் என்னால் மீள பிரதிஸ்டை செய்யப்பட்ட திருவுருவச்சிலையில் அஞ்சலித்து உறுதிபுணுகின்றோம்.

உயிர் தமிழுக்கு உடல் மண்ணிற்கு என்ற இலட்சியத்துடன் தமிழ் மக்களின் விடுதலைக்காக தன்னுயிர்த் தியாகம் செய்த தியாகி பொன் சிவகுமாரன் அவர்களது உருவச்சிலை 05 யூன் 1975 ஆம் ஆண்டு சிறைமீண்ட இளைஞன் முத்துக்குமாரசுவாமி அவர்களால் திறந்து வைக்கப்பட்ட நிலையில் இராணுவத்தினராலும் இராணுவத்துடன் சேர்ந்தியங்கிய தரப்புக்களாலும் இச் சிலை பலதடவைகள் உடைத்து நொருக்கப்பட்டு உரும்பிராய் சந்தை வளாகத்தில் வீசப்பட்டு புதையுண்டு கிடந்த நிலையில் அதனை தமிழ் மீள எடுத்து சிவகுமாரனின் சிலை அமைத்த வளாகத்தின் நான் தவிசாளராக பதவி வகித்தபோது பிரதிஸ்டை செய்தேன். எமது இனவிடுதலைக்கான வரலாறுகளை வழிகாட்டியாக நாம் கைக்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களுக்கு எதிரான அரச அடக்கு முறை இன்றும் நீட்சியாக காணப்படுகின்றது. எமது உரிமைகளுக்காக தன்னுயிரைத் தியாகம் செய்த சிவகுமாரனின் அர்ப்பணிப்பினை ஒட்டுமொத்த தமிழ் இனமும் நினைவுகூர்கின்றது.

அரச அடக்குமுறைக்கும் வன்முறைக்கும் அகிம்சை வழிலான அணுகுமுறைகள் பயனற்றுப் போன சூழ்நிலையில் அரச அடக்குமுறையை எதிர்கொண்டாக வேண்டும் என்ற ஓர் நிர்ப்பந்தத்தில் மக்களின் மனநிலை நின்ற விடுதலைப்போராட்ட வீரனாகவே பொன். சிவகுமாரன் செயற்பட்டார்.

பொன் சிவகுமாரன் இனத்தின் அடக்கு முறைகளுக்கு எதிராக ஓர் இளையவனாக மாணவர் விடுதலைப் போராட்டத்தின் முன்னேடியாக கட்சி அரசியல் விடயங்களுக்கு அப்பாற்பட்டு தமிழ்த் தேசிய விடுதலையை இலக்காகக் கொண்டு போராட்ட அமைப்புக்கள் நிறுவனமயப்படுத்தப்படாத காலகட்டத்தில் தனது தியாகத்தினை நிலைநாட்டியுள்ளார். எதிரியிடம் விடுதலைப்போராளிகள் உயிருடன் அகப்பட்டுவிடக்கூடாது என்ற அடிப்படையில் தன் இன்னுயிரை சயனைட் அருந்தி மாய்த்துள்ளார்.

விடுதலைப்போராட்டம் ஒடுக்குமுறைகளுக்கு எதிரானது என்ற நியாயபூர்வமான யதார்த்தத்தினை பொன். சிவகுமாரன் அவர்களது தியாகம் என்றும் பறைசாற்றுகின்றது. தமிழ் மாணவர்களுக்கு எதிராகத் திட்டமிட்டு கொண்டுவரப்பட்ட கல்வி ரீதியிலான தரப்படுத்தல்கள், உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் என நீண்டு செல்லும் இனத்திற்கு எதிரான அநீதிகளிற்கு எதிராக பொன். சிவகுமாரன் போராடியுள்ளார். எமது போராட்டங்களின் முன்னோடியாக தியாகி சிவகுமாரனை என்றும் நினைவில் கொள்கின்றோம். இவ்வாறு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.



# தெல்லிப்பளையில் பசுமை இயக்கத்தின் உலக சூழல்தின நிகழ்ச்சி

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு தெல்லிப்பளையில் புதன்கிழமை (05.06.2024) பசுமை அறிவொளி நிகழ்ச்சியை நடாத்தியுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் மாணவர்களிடையே சூழல் அறிவைப்புகட்டி விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களைச் சூழல் பாதுகாப்பில் பங்குபற்றுநர்களாக்கும் நோக்குடன் பசுமை அறிவொளி என்ற நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. இதன் தொடர்ச்சியாகவே உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டுத் தெல்லிப்பளை மாவை கலட்டி பொது நோக்கு மண்டபத்தில் இந்நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.









உலகம் பூராவும் பொருத்தமற்ற விவசாய நடவடிக்கைகள், காடழிப்பு, காலநிலை மாற்றம், வெள்ளப்பெருக்கு, வறட்சி, மண்ணரிப்பு, மண்சரிவு, மண்ணில் கலக்கும் கழிவுகள் போன்ற பல்வேறு காரணங்களினால் நிலம் தரம் இழந்துவருகின்றது. இலங்கையிலும் அதன் மொத்த நிலப்பரப்பில் 34 வீதமான அளவு நிலம் தரமிழந்து உள்ளதாக அறியப்பட்டுள்ளது.

உலகின் தலையாய சூழற் பிரச்சினையாக உருவெடுத்துவரும் இதனைக் கருத்திற் கொண்டு ஐக்கிய நாடுகள் சபை இந்த ஆண்டின் சுற்றுச்சூழல் தினத்தின் கருப்பொருளாக "நிலம் மீள்சீரமைப்பு, பாலைவனமாதல் மற்றும் வறட்சியில் இருந்து மீண்டெழுதல்" என்ற கருப்பொருளைத் தேர்வு செய்துள்ளது. இக்கருப்பொருளுக்கு அமைவாகத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் இந்நிகழ்ச்சியில் உரையாற்றி இருந்தார். மேலும், மாவை கலட்டி காந்திஜி சனசமூகநிலையத்தின் தலைவர் பா.நவநேசன், ஆசிரியர் ப.பிரிந்தன் ஆகியோரும் சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவம் தொடர்பாக உரையாற்றியிருந்தனர்.

இந்நிகழ்ச்சியில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் கலந்துகொண்டிருந்தார்கள். பங்கேற்ற மாணவர்கள் அனைவருக்கும் "பிளாஸ்ரிக்கின் பிடியில்" என்ற கைநூல் வழங்கப்பட்டன. அத்தோடு, ரொறன்ரோவின் மனிதநேயக் குரலின் அனுசரணையோடு சூழல் விழிப்புணர்வு மேற்கோள்கள் அடங்கிய அப்பியாசக்கொப்பிகள் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# கனடா நபர் கைதானார் மல்லாகம் நீதிமன்றத்திற்குள் வைத்து சட்டத்தரணி மீது தாக்குதல் முயற்சி

கனடா வதிவிட உரிமையை கொண்ட புலம்பெயர் நபர் ஒருவரும் அவரது மகனும் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் - கோப்பாய் பகுதிக்கு வருகை தந்து அங்கு தங்கியிருந்தனர்.

இந்நிலையில் குறித்த நபரின் அண்ணா முறையான ஒருவர் சுன்னாகம் பகுதியில் வசித்து வருகின்ற நிலையில், அண்ணாவை பார்ப்பதற்காக அங்கு சென்றுள்ளார்.

கனடாவைச் சேர்ந்த நபருக்கு அண்ணாவின் சொத்து மீது ஆசை ஏற்பட்டது. இந்நிலையில் சுன்னாகத்தை சேர்ந்த அண்ணாவின் மகளின் கணவனுக்கும் கனடாவைச் சேர்ந்தவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. இந்நிலையில் இரு தரப்பினரும் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருந்தனர்.

இரு தரப்பினரையும் விசாரணை செய்து பொலிஸார் அவர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டவேளை கனடாவை சேர்ந்த நபரையும் அவரது மகனையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். இந்நிலையில் விளக்கமறியல் காலம் முடிவடைந்த நிலையில் இருவரும் வீட்டிற்கு திரும்பினர்.

இந்நிலையில் குறித்த வழக்கானது 05-06-2024 மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. குறித்த வழக்கிற்கு வந்த கனடாவைச் சேர்ந்தவர், மல்லாகம் நீதிமன்ற வளாகத்தில் வைத்து எதிர் தரப்பு சட்டத்தரணியுடன் தகராறில் ஈடுபட்டு, தனது தோளினால் அவரை இடித்துவிட்டு "உன்னை பார்த்துக் கொள்கிறேன்" என்று அச்சுறுத்திவிட்டு அங்கிருந்து சென்றார்.

இந்நிலையில் குறித்த சட்டத்தரணி தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். அதன்பிரகாரம், குறித்த கனடாவை சேர்ந்த நபரை தெல்லிப்பழை பொலிஸார் கைது செய்துள்ளதுடன், அவரை பொலிஸ் பிணையில் விடுவித்துள்ளனர்.

# Tamil Journalists Seek "International Inquiry" into Murder of Media Persons in Sri Lanka

Tamil Journalists in the war-affected area have voiced their support in demanding an international inquiry into the killings of journalists in the country including the Sinhala and Muslim journalists.

This call for an international inquiry has been voiced by the Tamil scribes even when no such support has come from the Sinhalese or Muslim journalists seeking accountability for the killing of Tamil journalists.

Journalists attached to the Batticaloa Press Club (BPC) have sought an international inquiry into the murders of at least 43 media persons. Among them 35 are Tamil journalists and the balance 8 comprise of five Sinhala and three Muslim journalists.

"Since no justice will be rendered concerning the killing of these journalists in Sri Lanka, the responsibility of getting justice for them lies with the international human rights organizations," a media statement from the Batticaloa Press Club said.

Their demand for an international probe came on the occasion when they assembled to pay tribute to the slain Tamil journalist Ayyathurai Nadesan, a popular media person in the Eastern city of Batticaloa who was shot dead in broad daylight 20 years back.

Events were also organized by the Press Clubs in Jaffna, Vavuniya, and Mullaitivu to pay tribute to him. His portrait was displayed at the respective press clubs with journalists paying floral tributes and lighting a candle in his memory.

A separate event was organized by the Eastern Journalist Forum, Sri Lanka Professional Web Journalists Association, North, East and South Media Societies in Batticaloa where journalists from the south participated and paid tribute to him.

None of his killers' have been brought to justice yet although enough circumstantial evidence and eyewitness accounts were there.

The same has been the case with two other popular journalists 'Taraki' Sivaram who was killed in the capital Colombo in April 2005 and Mylvaganam Nimalarajan who was killed when a grenade was thrown into his house and subsequently shot as he was reporting for the BBC Sinhala service.

Nadesan, Sivaram and Nimalarajan were among the Tamil journalists at the forefront of exposing the state atrocities and reporting the actual happenings in the war zone.

Similarly, Lasantha Wickremetunge, Editor of the Sunday Leader was assassinated in Colombo in January 2009 whose killing is yet to be solved. Another Sinhala journalist and cartoonist Prageeth Ekneligoda is untraced since he went missing in January 2010.

The killing and abduction of journalists had continued for decades and journalists say it increased rapidly during the presidency of Chandrika Bandaranaike and Mahinda Rajapaksa.

Even after the bloody civil war came to a brutal end in May 2009, the intimidation and arrest of Tamil journalists continued.

Tamil journalists were summoned to police stations even for flimsy reasons like posting a picture of the 'Maveer Naal' (Hero's Day) observation-when the Tamils remember the war dead and pray their solemn tributes and for exposing state atrocities like land grabbing, depriving the livelihood of Tamil working class and carrying out their regular newsgathering work.

In recent times, such intimidation and summoning for inquiries have become more common in the war-torn Northern Province. Two senior journalists were summoned before the dreaded Sri Lanka terror police alleging they pictured military posts in the war-ravaged Mullaitivu district. Phones and working laptops were seized and searched before being returned and journalists were forced to part with their passwords for their devices.

Batticaloa Press Club journalists point out that although the Sri Lankan government began investigations into the death of two Sinhala journos none of the alleged perpetrators have been arrested so far. But in the case of Tamil Journalists even that enquiries have not begun they allege. They also say the media played a big role in ousting the whom they call a 'murderous regime' from power.

While observing the 20th death remembrance day of murdered Tamil journalist Ayyathurai Nadesan, the BPC, Batticaloa district Tamil Journalists Union, and East Sri Lanka Journalist's Association jointly appealed to the international human rights group to press for an international inquiry to render justice for all those journalists killed brutally by the state agencies and their associates.

Their demands include the official release of details about the journalists who were either killed or disappeared with their names and other information.

BPC also sought the reopening of the Ayyathurai Nadesan's murder inquiry who was killed in Batticaloa.

Quoting the popular adage "Justice delayed is Justice denied" BPC emphasized they are in such a dire situation and forced to seek international intervention since even after two decades of his murder justice remains an illusion in Sri Lanka and their only hope lies in the international inquiries and as such global human rights organizations have a responsibility towards it.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# Canadian Hotelier Exposed for Seizing Public Road for Tourist Beach Resort in Mullaitivu



A businessman from Canada who fenced a strip of land for a luxury tourist resort on the picturesque beachfront of Sri Lanka's war-torn Mullaitivu district was found to have falsely claimed ownership.

Local authorities have strictly told a Canada-based hotelier in Sri Lanka, that he doesn't have the right to block the access way to the sea and dismissed his claim of ownership over the approach road to the coast.

Earlier, angry fishers joined by residents dismantled the fortified barbed wire fences blocking the access to the seashore and staged a protest, prompting intervention by local government officials.

Replying to the petition by 8 civil society organizations, the secretary of the Maritimepattu Pradeshiya Sabha in Mullaitivu district Rasayogini Jayakumar has made it clear, that the said approach road in Deo Nagar from the coast numbered NMUME283 belongs to the Pradeshya Sabha and they will take action for any obstruction.

"Action has been taken by the Maritimepattu Pradeshya Sabha concerning the road being blocked with a fence and a continued vigilance will be maintained regarding it".

Emphasizing further Rasayogini Jayakumar has informed the petitioners that if any such activities happen in the future they have to inform the Pradeshya Sabha and not take action by themselves.

She has also said the concerned person has been informed of their decision through a letter.

Canada-based hotelier Charlesjanthan Antony and CEO of Canbe Foods Inc, Ontario has purchased a stretch of land along the war-torn Mullaitivu coast under the name of 'Avalon Resort and Spa'.

The said land was purchased from the Jaffna Bishops' house in 2017 or 2018. Ever since around 175 fishermen families who have lived there for over five decades have been facing immense hardship using the approach road to the coast which is in the middle of the land-to sea.

The businessman blocked the approach road used by the fishermen on the 26th of May this year by erecting a fence across the road and gravel piled up alongside, claiming it belonged to him and was part of his private land.

The Maritimepattu local authorities confirmed in writing on the 29th May the road is indeed Deo Nagar public road "and not private" as claimed by the owner of Avalon Resort and Spa.

Local journalists say the approach road was used by the local fishermen to transport their catch from the sea to the coastal road for over half a century.

Affected fishermen alleged a nexus exists between the landlord and the Sri Lankan military and he threatened them with their tacit support. The Canadian was emphasizing his right to the approach road to the coast.

Photographs published online and on social media earlier showed Antony and his local agents with the military to brass in Mullaitivu-which is Sri Lanka's most militarized district.

The Deo Nagar fishermen village under the jurisdiction of the the Maritimepattu Pradeshya Sabha was established due to the intervention of the former Archbishop of Jaffna Late Jacob Bastiyampillai Deogupillai in 1973. Since then fishermen have been using the 200-meter coastal route to the sea which belonged to the Bishop's house.






CANADA KANTHASWAMY TEMPLE
Presents
FREE ENTRANCE AND PARKING
கனடா கந்தசுவாமி கோவில்
வாகனத்தரிப்பிட திறந்தவெளித்திடலில்
JUNE 22 - 23
Exclusive Television Partners
Exclusive Radio Partners
TSN EXPRESS & TTR TRANSPORT
இன்
KAARTHIKEYAN FEST
கார்த்திகேயன் விழா
2024
CO-Presented By
A1 MASTER COUNTERTOPS INC.
Powered By
UTHAYAN
LOCATION : 733 BIRCHMOUNT RD, SCARBOROUGH M1K 1R5.
Production by
SV MEDIA
Playback Singer
Rohith Jayaraman
Vijay TV Super Singer
Chinmayi
ZEE Tamil
Maathulani
Swiss Singer
Amirtha
Playback Singer
Vidhyashankar
Eelam singer
kandappu jeyanthan
விளம்பரம் மற்றும் வர்த்தகச்சாவடி
MUTHU +14162000792
GOWRY +16472336129
THANA +16478892710
SEVENOTES


CANADA KANTHASWAMY TEMPLE
Presents
விளம்பரம்
மற்றும்
வர்த்தகச்சாவடி
தொடர்புகளுக்கு
MUTHU
+14162000792
THANA
+16478892710
GOWRY
+16472336129
KAARTHIKEYAN FEST
கார்த்திகேயன்
விழா
JUNE
22 - 23
2024
கனடா கந்தசுவாமி கோவில்
வாகனத்தரிப்பிட திறந்தவெளித்திடலில்
FREE ENTRANCE AND PARKING
Location : Canada Kanthaswamy Temple Society, 733 Birchmount Rd, scar, M1K1R5.


ஓம் சக்தி துணை
ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம்
சோமசுந்தரேஸ்வரர் தேவஸ்தானம்
585 MIDDLEFIELD RD, UNIT 1 & 2, TORONTO (MIDDLEFIELD & FINCH) TEL: 416 535-6560
பிரம்மோத்ஸவ (துவஜாரோஹண) விஞ்ஞாபனம்
சிவன்
பிரம்மோற்சவ பெருவிழா 2024
சிவன் திருவிழா
(31.05.2024 வெள்ளி முதல் 11.06.2024 செவ்வாய் வரை)
திருவிழா நிகழ்ச்சி நிரல்
31.05.2024 கொடியேற்றம் - வெள்ளி நண்பகல் 11மணிக்கு
06.06.2024 வேட்டை திருவிழா - வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு
07.06.2024 சப்பரத் திருவிழா - வெள்ளிக்கிழமை மாலை 8 மணிக்கு
08.06.2024 தேர் திருவிழா - சனிக்கிழமை காலை 11:30
09.06.2024 தீர்த்தத் திருவிழா - ஞாயிறு காலை 11 மணிக்கு
10.06.2024 திருக்கல்யாணம் - பூங்காவனத் திருவிழா திங்கள் இரவு 7:00 மணிக்கு
11.06.2024 வயிரவர் மடை - செவ்வாய் மாலை 7 மணிக்கு
தேர்த்திருவிழா
சனி காலை 11:30 மணி
08.06.2024
என்றும் இறைபணியில்
ஆலய தர்ம கர்த்தா
அனைவரும் வருக - அன்னையின் அருள் பெருக


லோகன் கணபதி | MPP Markham - Thornhill
உங்களை அன்புடன் அழைக்கிறோம்
June 27 ஆம் திகதி 2024 BBQ
வியாழக்கிழமை | 5 PM - 7 PM
முகவரி: 15 Simonston Blvd, Markham, ON (Simonston Park)
உங்கள் வருகையை பதிவு செய்ய
அழையுங்கள்: 905 305 1933
அல்லது இந்த QR code-ஐ scan செய்து
பதிவு செய்யவும்.
மின்னஞ்சல் அனுப்புவதற்கு:
logan.kanapathico@pc.ola.org
SCAN ME
அனுமதி இலவசம்: உணவு,
BBQ மற்றும், சிறுவர்
விளையாட்டுகள்

# 30th Anniversary Grand Sale

SALE! SALE!!! SALE!! SALE! SALE!!! SALE!! SALE! SALE!!! SALE!! SALE!

S&S Since 1994

# SAMY & SONS

Wholesalers & Retailers



# GRAND SALE

## JUNE. 1ST TO JULY. 01ST

- ☑ Reliable
- ☑ Trustworthy
- ☑ Friendly

**Textiles, Jewellery, Gift Items & Fancy Goods**
**Express Money Transfer,**
**Pawn Broker, Etc.**

- ☑ Quality
- ☑ Quantity
- ☑ Discounts

## BLOWOUT SALE EVERYTHING MUST GO



$33
10 Cup



Premier
$45

Preethi Eco Plus 3pcs



$135



9pcs
$115

### EACH $7.00

Saree Blouses,
Saree Underskirts,
Senorita Bras,
Saarams, Skirts,
T-Shirts,
And Many More!

### NEW ARRIVALS

Pattus, Cut Works,
Bridal Soft Silks.
Sequins, &
Cotton Sarees,
Special Salwars
Fancy Lengha Suits,
Kurtha Blouses,
Kurtha Suits,
and many more!
All At Unbelievable
Blowout Prices.

### EACH $12.00

Kurtha Tops,
Kurtha Shirts (Men),
Denim Pants,
Dress Pants,
Shirts(Men),
Fancy Frocks(Kids),
Salwars (All Sizes),
**Milk Cooker,**
**Appa Chatti,**
**Puttu Kudam,**
**Archunai Basket,**
**Kundu Dosa Chatti,**
**Coconut Scrapper.**

**Steamer $29.00**
**Banana Leaf Plate $3.50**
**3 Set Satti $18.00**
**Silver or Brass Thattus,**
**and more!**



Many More
Items on Sale:

**OPEN**
**7 Days**
10:00am
9:00 pm
DOOR BUSTER
First 25
Customers Get A
Free Rice Cooker
If Purchase Is Over
$300
(Clothing Items)

**Fancy Items From 50¢**
**Tel: 416-298-1598**
**Cell: 647-239-SAMY (7269)**
1884 Kennedy Road (at Ellesmere)
Scarborough, Ontario M1P 2L8
www.samyandsons.com Email: samyandsons@gmail.com

DOOR BUSTER
First 25
Customers Get
Free HOT BOX
If Purchase Is
Over $150
(Clothing Items)

SALE! SALE!!! SALE!! SALE! SALE!!! SALE!! SALE! SALE!!! SALE!! SALE!

அன்றும், இன்றும், என்றும் ஒரே குடையின் கீழ் சாமி அன்ட் சன்ஸ்

# புலம்பெயர் தேசங்களில் தமிழ் மொழியை தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் மூலம் கற்பிப்பதன் ஊடாக தமிழுக்கு நாம் புத்துயிர் கொடுக்கின்றோம்

## ரொறன்ரோ மாநகரில் நடைபெற்ற 15வது உலகத் தமிழ் ஆசிரியர் மாநாட்டில் மாகாண அரசின் பிரதிநிதி லோகன் கணபதி புகழாரம்







- ரொறன்ரோவிலிருந்து "வீணைமைந்தன்"

"புலம்பெயர் தேசங்களில் தமிழ் மொழியை தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் மூலம் கற்பிப்பதன் ஊடாக தமிழுக்கு நாம் புத்துயிர் கொடுக்கின்றோம். தங்களின் சொந்த மொழியில் பேசுவதென்பது ஒவ்வொருவரின் உடலுக்கும் உள்ளத்திற்கும் ஊட்டச் சத்து போன்றது. தாய்மொழிதான் சிந்திக்கும் திறனின் திறவுகோலாக இருக்கிறது. எந்த மொழியைக் கற்றாலும், எத்தனை மொழிகளைக் கற்றாலும் ஒருவரின் சிந்தனை உருவெடுப்பது தாய்மொழியில்தான். மனித ஆற்றலை வளமையாக்கவும், ஒருவரது படைப்பாற்றலை அதிகப்படுத்தவும் தாய்மொழிக் கல்வியால் மட்டுமே முடியும். இது அறிவியல் பூர்வமாக நிரூபணமான உண்மை. இதனை உணர்ந்துதான் தாய்மொழியில் அறிவியல் கல்வியைக் கொடுப்பதன் மூலம் ஆக்கப்பூர்வ சிந்தனையைக் குழந்தைகள் மத்தியில் கொண்டுவர முடியும் என்று முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் கூறியுள்ளார். மேலும்ஒரு குழந்தையை வளர்ப்பதற்கு ஒரு கிராமம் தேவைப்படுகின்றது" என்ற ஆபிரிக்க பழமொழியைப் போல. நாம் எமது தமிழை வளர்ப்பதற்கு இந்த உலகமே தேவைப்படுகின்றது.

"இவ்வாறு கடந்த 1ம் திகதி சனிக்கிழமையன்று ரொறன்ரோ பல்கலைக் கழகத்தின் ஸ்காபுறோ வளாகத்தில் ஆரம்பமான 15வது உலகத் தமிழ் ஆசிரியர்கள் மாநாட்டின் தொடக்கத்தில் சிறப்புரையாற்றிய ஒன்றாரியோ மாகாண அரசின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட மார்க்கம் - தோர்ண்ஹில் தொகுதியின் உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் புகழாரம் சூட்டினார்.

சித்தம் அழகியான் சு. இராசரத்தினம் தலைமையில் அமைக்கப்பெற்ற நிர்வாகக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த மூன்று நாள் மாநாடு கடந்த 3ம் திகதி திங்கட்கிழமை நிறைவுற்றது.

முதல் நாள் உரையாற்றிய மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்களின் வேண்டுகோளின்பேரில் மாகாண கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெச்சே அவர்களும் அங்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்தார். அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் லோகன் கணபதி அவர்கள் பின்வருமாறு தெரிவித்தார்.

"இந்த 15ஆம் உலகத் தமிழாசிரியர் மகாநாட்டிடை ஒழுங்குபடுத்திய கனடிய தமிழ்ச்சங்கம், படிமுறைத் தமிழ் ஒன்றியம், அத்துடன் இணைந்து நடத்தும் உலகத்தமிழாசிரியர் பேரவை, Active Brain Centre, Department of Historical and Cultural Studies of University of Toronto, Scarborough கிளைக்கும் எனது மனமார்ந்த பாராட்டை தெரிவித்துக் கொள்கின்றேன். இங்கு உலகெங்கிலும் இருந்து வருகைதந்திருக்கும் ஆசிரியர்களையும், தமிழ் அறிஞர்களையும், கனேடிய

ஒண்டாரியோ மாகாண பாராளுமன்ற உறுப்பினராக, அத்துடன் ஒன்றாரியோ Minister of Multiculturalism and PA to the Minister of Children Community and Social Services சார்பில் நெஞ்சம் நிறைந்த அன்புடன் வரவேற்கின்றேன்.

இன்றைய நிகழ்வு கனடாவிற்கும் இங்கு வாழும் தமிழ் மக்களுக்கும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நாள். மாணவர்களின் மொழித்திறன், கலை, கலாசார சமூக விழுமியங்கள், 21ஆம் நூற்றாண்டுத் நூறாண்டின் வினைத்திறன்னுடன்கூடிய திறன்கள் என அவர்களை முழுமையாக வளர்க்கும் அரும்பணியில் ஈடுபடும் தமிழ் ஆசிரியர்கள் முன்னேறுவதற்கு இன்று கனடாவில் பல்வேறு வாய்ப்புகள் உள்ளன. வருங்காலத் தலைமுறையை தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெற்றவர்களாக உருவாக்குவதற்கான ஆர்வமும் உழைப்பும் உள்ளோருக்கு ஆதரவு வழங்க ஒண்டாரியோ மாகாண கல்வி அமைச்சின் உதவிகள் பல உள்ளன. இத்தகைய சிறப்பு நாளில், சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த துன்பத்தைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். 1981 மே 31 அன்று, யாழ்ப்பாணம் பொதுநூலகம் எரிக்கப்பட்டது, இது 20ஆம் நூற்றாண்டின் மோசமான இன அழிப்பு நடவடிக்கைகளில் ஒன்றாகும். இது தமிழர் பிரச்னையின் ஒரு முக்கியமான பகுதியைக் குறிக்கிறது. 97,000க்கும் மேற்பட்ட அரிய நூல்களுடன், தென்கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய நூலகங்களில் ஒன்றாக இருந்தது. உலக தமிழர்களின் பொக்கிஷமாக இருந்த அந்த நூலகம், தமிழின் பண்பாட்டு அடையாளமாக இருந்தது.

மேலும் இன்றைய மாநாட்டை நடத்தும் இராஜரத்தினம் சுப்பிரமணியம் அவர்களின் அர்ப்பணிப்புக்கும் அவர் தமிழின்பால் கொண்டிருக்கும் பற்றுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாணவர்களின் உலகை அறிந்து அவற்றில் தமிழைக் கொண்டுசேர்க்க விழையும் திருவாளர் இராஜரத்தினம் சுப்பிரமணியம், மாணவர்களின் கற்றல் தேவைகளை நன்கு உணர்ந்து, அவர்கள் விரும்பும் வகையிலும் அவர்களுக்கு ஆர்வத்தை ஊட்டும் வகையிலும் மாணவர்களது கற்றல் அனுபவங்களை வடிவமைக்கும் நோக்கில் பாடத்திட்டங்களை வடிவமைக்கிறார்.



















(தொடர்ச்சி 19 பக்கம்)

# நோர்வே கவிஞர் சின்னத்துரை உமாபாலன்

- முனைவர் மு. இளங்கோவன் -
புதுச்சேரி, இந்தியா -- muetamil@gmail.com



[சின்னத்துரை உமாபாலன் இலங்கையில் பிறந்து, தற்பொழுது நோர்வேயில் வாழ்ந்துவருபவர். கவிஞர், எழுத்தாளர், செயற்பாட்டாளர் என அறியப்படுபவர். “நோர்வேயில் வேர்விட்ட விழுதுகள்” என்னும் இவரின் நூல் நோர்வேயில் தமிழர்கள் கால் பதித்த காலம் முதல் இன்று வளர்ந்து நிற்கும் நிலை வரையிலான அரிய தகவல்களைக் கொண்டுள்ளது. தமிழ் மரபுக் கவிதையிலும் ஆழ்ந்த புலமையுடையவர். நோர்வே நகர அவையில் தொழில்நுட்பவியலராகப் பணியாற்றி வருகின்றார்]

2017 ஆம் ஆண்டு சூன் திங்களில் நோர்வே நாட்டின் பேர்கன் நகரில் நடைபெற்ற செம்மொழித் திருநாள் நிகழ்வுக்குப் பேராசிரியர் அ. சண்முகதாஸ், முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் உள்ளிட்ட அறிஞர்களுடன் சென்றிருந்தபொழுது அண்ணன் கவிஞர் சின்னத்துரை உமாபாலன் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு அமைந்தது. செம்மொழித் திருநாளில் உமாபாலனின் உரையும் சிறப்புரையாக இருந்தது. அவரின் மகளாரின் நாட்டிய நிகழ்வும் அத்திருநாளில் நடைபெற்றது. அனைவரும் உரையைக் கேட்டு மகிழ்ந்தோம். நாட்டியத்தைக் கண்டுகளித்தோம்.

செம்மொழித் திருநாள் நிகழ்வு முடிந்து, டென்மார்க்கு, பின்லாந்து நாடுகளுக்குச் சென்று மீண்டும் நோர்வேயின் ஒசுலோ நகருக்குத் திரும்பிவந்தேன். பொறியாளர் அருள்நிதி இராதாகிருட்டினன் உள்ளிட்ட அன்புள்ளங்களால் ஒருங்கிணைக்கப்பட்ட பண்ணாராய்ச்சி வித்தகர் குடந்தை ப. சுந்தரேசனாரின் ஆவணப்படத்தை அங்குத் திரையிட்டோம். நோர்வேயில் வாழ்ந்துவரும் கலைஞர்கள், எழுத்தாளர்கள் தமிழ் ஆர்வலர்கள் பலரும் கலந்துகொண்டு என் முயற்சியை ஊக்கப்படுத்தினர்; பாராட்டினர். அன்று இரவு உமாபாலன் அண்ணனின் இல்லத்தில் தங்கும் வாய்ப்பும் அவர்களின் குடும்பத்தினருடன் பழகும் வாய்ப்பும் எனக்கு வாய்த்தன. அவர்களுடன் பழகும் பொழுது அன்பும் பண்பும் ஒருங்கிணைந்த அரிய குடும்பமாக அவரின் குடும்பம் விளங்குவதை அறிந்து உவகையுற்றேன்.


ஒசுலோ நகரிலும் ஒட்டியுள்ள பகுதிகளிலும் இருக்கும் காட்சியகங்கள், பொழுதுபோக்கு இடங்களுக்கு அண்ணனும் அவர்களின் மகளாரும் அழைத்துச் சென்று காட்டினர். அண்ணன் உமாபாலன் அலுவலகத்திற்கும் அருகில் உள்ள புல்வெளிப் பகுதிகளுக்கும் சென்று பார்வையிட்டமை ஆண்டுகள் பலவானாலும் நெஞ்சில் நிலைபெற்றிருக்கும் நினைவுகளாகும்.

உமாபாலன் அவர்களின் பணிகள் பலதிறத்தனவாக இருப்பினும் நோர்வேயில் வேர்விட்ட விழுதுகள் என்னும் அரிய நூலினை அவர் தமிழுலகுக்குத் தந்துள்ளமை போற்றத்தகுந்த பணியாகும். இந்த நூல் 2016 இல் வெளிவந்துள்ளது. நோர்வே வாழ் தமிழர்களின் வரலாற்றுத் தொகுப்பாகவும் ஆவணமாகவும் விளங்கும் இந்த அரிய நூல் 688 பக்கங்களில் பல்துறைச் செய்திகளைத் தாங்கிய களஞ்சியமாகும். வரலாறும் பண்பாடும், பல்துறை முன்னோடிகள், தமிழ் சார்ந்த முயற்சிகள் என்னும் மூன்று பாகங்களாக இந்த நூலின் உள்ளடக்கச் செய்திகள் உள்ளன.

நோர்வேயில் கால்பதித்த முதற்றமிழர்கள், அரசியலாளர்கள், அறியப்பட வேண்டியவர்கள், ஆன்மீகவாதிகள், இசையமைப்பாளர்கள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், ஓவியர்கள், கல்வியாளர்கள், கவிஞர்கள், நடனக் கலைஞர்கள், வாத்தியக் கலைஞர்கள், வாய்ப்பாட்டுக் கலைஞர்கள், விளையாட்டு வீரர்கள் குறித்த விவரங்களைப் படத்துடனும் சான்றுகளுடன் வழங்கும் இந்த நூல் தமிழகத்து நூலகங்களில் இடம்பெற வேண்டிய நூலாகும்.

தமிழ்சார்ந்த முயற்சிகள் என்னும் பகுதியில் நோர்வேயில் உள்ள ஆன்மீக அமைப்புகள், இசைக்குழுக்கள், ஊடகங்கள், கல்வி நிறுவனங்கள், தமிழ்ப் பாடசாலைகள், தனியார் அமைப்புகள், பொது அமைப்புகள், விளையாட்டுக் கழகங்கள், அரங்கேற்றங்கள், நூல்கள், ஒலி-ஒளி வட்டுகள், உச்சப்பத்து என்னும் தலைப்புகளில் நூலில் தந்துள்ள விவரங்களும் குறிப்புகளும் மிகப் பயன்தருவனவாகும்.

### சின்னத்துரை உமாபாலன் அவர்களின் தமிழ் சார்ந்த வாழ்வு




சின்னத்துரை உமாபாலன் இலங்கையின் யாழ்ப்பாணம் மாவட்டத்தில், மாவிட்டபுரம் என்னும் ஊரினைப் பிறப்பிடமாகக் கொண்டவர். (நல்லை நகர் ஆறுமுக நாவலரின் நேரடி மாணாக்கரான இவரின் பூட்டனார் உரையாசிரியர் ம.க. வேற்பிள்ளை அவர்கள் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையின் தலைமை ஆசிரியராக இருந்தவர்).

மாவிட்டபுரத்தில் வாழ்ந்த சின்னத்துரை - கமலாதேவி ஆகியோரின் மகனாக 23.09.1962. இல் உமாபாலான் பிறந்தவர். ஆரம்பக் கல்வி வீமன்காமம் மகா வித்தியாலயத்திலும். உயர்தரம் - காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியிலும் அமைந்தது. வணிகப் பிரிவில் உயர்தரக் கற்கையை நிறைவுசெய்த உமாபாலன் காங்கேசன்துறைத் துறைமுகத்தில் மேற்பார்வையாளராகக் கடமையாற்றி வந்த காலத்தில் தமிழர்களுக்கெதிரான அரச வன்முறைகளிலிருந்து தப்பிக்கும் முகமாக 1987 இல் நோர்வே நாட்டுக்குப் புலம்பெயர்ந்தவர்.

நோர்வேயின் வடதுருவத்தில் 1987 - 1989 வரை ஈராண்டுகள் நோர்வேஜிய மொழி கற்ற இவர், 1989 முதல் 1997ஆம் ஆண்டு வரை போட்ஸ்பியூர்ட் என்னும் ஊரில் உள்ள மீன் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்தவர். இக்காலப்பகுதியில் இவ்வூரின் மொத்த மக்கள் தொகையில் தமிழர்களின் எண்ணிக்கையானது ஏறக்குறைய 12 வீதமாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இங்கு வாழ்ந்த தமிழர்கள் தமிழ்ப்பாடசாலை, தமிழ் வானொலி, தமிழ்ச் சங்கம் எனப் பல வழிகளிலும் தமிழ்ப்பணியாற்றினர். அவர்களில் ஒருவராகத் தமிழ்ப்பணிகளில் ஈடுபட்டுவந்த உமாபாலன் தமிழ்மொழி ஆசிரியராக, வானொலி அறிவிப்பாளராக, போட்ஸ்பியூர்ட் தமிழ்ச்சங்கத் தலைவராகப் பலநிலைகளில் பணியாற்றியவர்.

வடதுருவ நகரங்களில் இருந்த தமிழர் அமைப்புகளின் கூட்டிணைவில் பின்மார்க் தமிழர் ஐக்கிய முன்னணி உருவாக அடித்தளமிட்டதுடன் அதன் செயலாளராக ஆரம்பப்பணிபுரிந்த இவர், 1997இல் நோர்வேயின் தலைநகரான ஒசுலோவுக்கு இடம் பெயர்ந்தவர்.

1999 ஆம் ஆண்டு சாந்தினியைத் திருமணம் செய்துகொண்டவர். இவர்களுக்கு இரண்டு மக்கள் செல்வங்கள் வாய்த்துள்ளனர்.


2000 ஆண்டு முதல் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தில் தமிழாசிரியர், கலைப்பணி இணைப்பாளர், லோறன்ஸ்கூக் வளாகக நிர்வாகப் பொறுப்பாளர், றொம்மன் வளாகக் கல்விப் பொறுப்பாளர் எனப் பலவழிகளில் தமிழ்ப்பணியாற்றிய இவர் லோறன்ஸ்கூக் தமிழர் விளையாட்டுக் கழகத்தின் தலைவராகவும் ஈராண்டுகள் பணியாற்றியவர்.

கலைநிகழ்வுகளின் நிகழ்ச்சித் தொகுப்பாளராக, கவியரங்க, பட்டிமன்றப் பேச்சாளராக, நடுவராக, பாடலாசிரியராகப் பலதளங்களில் செயற்படும் இவர் லோறன்ஸ்கூக் நகரசபையில் தொழில்நுட்பவியலாளராகக் (Operating Technician) கடமையாற்றி வருகின்றார்.

இலங்கையின் மாவிட்டபுரத்தின் வரலாற்றை, அங்கு வாழ்ந்த தமிழ்ப்பெரியவர்கள் பற்றிய குறிப்புகளை மரபுக் கவிதையில் மாவை மான்மியம் என்னும் நூலாக 2011ஆம் ஆண்டு வெளியிட்டவர். நோர்வே வாழ் தமிழர்களின் 60 ஆண்டுகால வரலாற்றைத் தமிழில் நோர்வேயில் வேர்விட்ட விழுதுகள் எனவும், நோர்வேயிய மொழியில் Tamilenes liv og historie I Norge எனவும் தலைப்பமைத்து, 2016இல் வெளியிட்ட பெருமைக்குரியவர். இலங்கையில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் அருகேயே இவர்தம் வீடு உள்ளது. பாரம்பரியச் சைவக்குடும்பத்தில் பிறந்த இவர் தமிழ்ச் சைவம் என்னும் தலைப்பில் ஒரு சில காணொளிகளை வெளியிட்டுள்ளார். தமிழ்ச் சைவம், வாலி காவியம் என இரு கவிதை நூல்களை எழுதிக் கொண்டுள்ளார்.

பாவலர் மா. வரதராசனாரின் முகநூற் குழுவான பைந்தமிழ்ச் சோலையின் இணையவழியிலான மரபுப்பாக் கற்கைவழிப் பாவலர் பட்டத் தேர்வில் பங்கேற்றுப் பைந்தமிழ்ச் செம்மல், வண்ணப்பாத் தேர்வில் பங்கேற்று வண்ணப் பாவரசு என்னும் பட்டங்களைப் பெற்றவர்.

அன்பும் அறிவுருவுமாக விளங்கும் கவிஞர் உமாபாலன் போன்றவர்களின் தமிழ்ப்பணிகள் தமிழகத்து மக்களுக்கு அறிமுகம் ஆதல் வேண்டும். அவரின் பணிகளுக்கு உரிய மதிப்பும் சிறப்பும் அளிக்கப்படுதல் காலத் தேவையாகும். தமிழ்நாட்டரசின் தமிழ் வளர்ச்சித்துறை இவரைப் போலும் உண்மைத் தமிழ்த்தொண்டர்களைப் போற்றுதல் வேண்டும். புலம்பெயர்ந்த தமிழர் மாநாடுகளில் போற்றப்பட வேண்டிய தமிழ் ஆளுமை உமாபாலன் ஆவார்.



# அரசியல்வாதிகள் அரசியல் செல்வாக்கைக் கொண்டு கல்வி மற்றும் நிருவாகத்தைச் சீரழிக்கின்றனர் என்கிறார் கலையரசன் எம்.பி

- நடராசா லோகதயாளன்

இலங்கையில் சில அரசியல்வாதிகள் அரசியல் ரீதியான செல்வாக்கைப் பயன்படுத்தி குறிப்பிட்ட இடங்களிலே கல்வி மற்றும் பிரதேச நிருவாகத்தினைச் சீரழித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதற்கு உதாரணம் அம்பாறை மாவட்ட தமிழ் கல்வி வலயங்களும், கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயமும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் 05-06-2024 தினம் இடம்பெற்ற கல்வியில் இருக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து சிறந்த கல்வியை வழங்க வேண்டும் என்ற ஒத்திவைப்புப் பிரேரணை மீதான உரையின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

"நாடாக இருக்கலாம் பிரதேசமாக இருக்கலாம் எதுவாக இருப்பினும் கல்வியால் மாத்திரமே அவற்றின் முன்னேற்றத்தை அடைய முடியும் என்பது எங்கள் எல்லோரது கருத்தாகும். அந்த அடிபபடையில் கல்வியை மேம்படுத்த வேண்டியது அனைவரின் கடமையுமாகும். ஆனால் எமது நாட்டில் கல்வியிலே அரசியல் அதிகளவிலான ஆதிக்கத்தைச் செலுத்துகின்றது. நான் அதன் பாதிப்பை உணர்ந்தவன் என்ற ரீதியில் இந்த விடயத்தைச் சொல்லுகின்றேன்.

குறிப்பாக எமது அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறைப் பிரதேசத்திற்கு அண்டியுள்ள எல்லைக் கிராமத்தில் இருப்பவன். கடந்த கால யுத்தத்தில் அதிகளவிலான பாதிக்கப்பட்ட பிரதேசமாகவும் இருக்கின்றது. அந்த அடிப்படையிலேதான் கடந்த 03ம் திகதி சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் நியமனம் வழங்கப்பட்டது. இங்கு 71 பாடசாலைகள் இருக்கின்றன. அதில் 27 பாடசாலைகள் தமிழ் பாடசாலைகளாகவும், 44 முஸ்லீம் பாடசாலைகளாகவும் இருக்கின்றன. கிழக்கு மாகாணம் முறையாக அதற்கு ஒரு வலயக் கல்விப் பணிப்பாளரை நியமிக்க வேண்டும் என்ற அடிப்படையில் பொருத்தமான ஒருவரை நியமனம் செய்திருந்தது. ஆனால் அவர் தமிழராக இருந்த ஒரே காரணத்தினால் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் சென்று அவருக்கு எதிர்ப்புக் காட்டியதன் பேரில் அங்கு ஒரு மோசமான சூழல் நிலவியது.

உண்மையிலே இந்த நாட்டின் கல்வியைச் சீரழிப்பதற்கு அரசியல் பயன்படுத்தப்படுகின்றது என்பதற்கான உதாரணங்களில் ஒன்றாக இதனையும் எடுத்துக் கொள்ளலாம். இந்த அடிப்படையிலே தான் நாங்கள் கடந்த காலங்களில் கல்வி அமைச்சரையும், இராஜாங்க அமைச்சரையும் சந்தித்து எங்களுக்கு ஒரு தனியான கல்வி வலயம் வேண்டும் என்பதை கூறியிருந்தோம். ஏனெனில் இந்த நியமன விடயம் மாத்திரமல்ல கடந்த காலங்களில் வழங்கப்பட்ட வளங்கள் கூட எமது பாடசாலைகளைப் புறந்தள்ளியே வழங்கப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக இந்த நாட்டிலே அரசில் ரீதியான செல்வாக்கைப் பயன்படுத்தி அரசியல்வாதிகள் குறிப்பிட்ட இடங்களிலே கல்வியைச் சீரழித்திருக்கின்றார்கள் என்பதை அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும். யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ்க் கிராமங்கள் கல்வியிலே படிப்படியான வளர்ச்சியினை அடைந்து கொண்டிருக்கின்ற இந்த காலகட்டத்தில் தடைகள் பல ஏற்படுகின்றன.

வளப்பகிர்வு தொடர்பில் இங்கு பேசப்பட்டது. உண்மையிலே சில பாடசாலைகளில் இன்று வரைக்கும் கணிதம். விஞ்ஞானம், ஆங்கிலம் ஆசிரியர்கள் நியமனம் இல்லாத நிலைமைகள் இருக்கின்றன. எமது பிள்ளைகள் நகர்ப்புறங்களுக்குச் சென்று தான் தங்கள் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய சூழல் இருக்கின்றன. ஆனால் தற்போது படிப்படியான வளர்ச்சியின் மூலம் எமது பிரதேசங்களிலும் அந்தக் கல்வியைப் பெற்றுக் கொள்ளக் கூடிய மாற்றங்களும் சிறிய அளிவில் ஏற்பட்டுள்ளன. இந்த நிலைமை இன்னும் அதிகரிக்கப்பட்டு எமது பிரதேசங்களுக்கு வளங்கள் சரியான முறையில் பகிரப்பட்டு கல்வி நிலை உயர்த்தப்பட வேண்டும் என்பதைக் கல்வி அமைச்சரிடம் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

கல்வியில் மாத்திரமல்ல எமது பிரதேசங்கள் நிருவாக ரீதியிலும் முடக்கப்பட்டே வருகின்றது. கல்முனை வடக்கு பிரதேச மக்கள் இன்று 70 நாட்களாக சூழற்சி முறையிலான உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வருகின்றார்கள். இந்த நாட்டிலே இருக்கின்ற பொது நிருவாகம் தங்களுக்கு அநீதியை விளைவிக்கின்றது என்ற காரணத்தினால் பாதிப்புறுகின்ற அப்பிரதேசத்து மக்கள் தாங்களாக முன்வந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருக்கின்றார்கள். ஆனால் பொது நிருவாகத்திற்குப் பொறுப்பான அமைச்சரோ, அமைச்சின் செயலாளரோ இந்த விடயத்தில் பாராமுகமாக இருந்து கொண்டிருக்கின்றார்கள்.

குறிப்பாக முஸ்லீம் அரசியல்வாதிகள் தமிழ் அரசியல்வாதிகள் கல்முனை வடக்கு விளக்கம் தெரியாமல் பேசிக்கொண்டிருக்கின்றார்கள் என்று இந்த சபையிலே தெரிவிக்கின்றார்கள். இது தொடர்பில் வேதனையுடன் ஒரு விடயத்தை நான் கூறி வைக்க விரும்புகின்றேன். கல்முனை 1சி என்கின்ற கிராம சேவையாளர் பிரிவினை ஊடறுத்துச் செல்லுகின்ற கழிவு நீர் வழிந்தோடுகின்ற பகுதியை தனிநபர் வழிமறித்து அந்த அரச காணியை மண்இட்டு நிரப்புகின்ற நிலைமை இருக்கின்றது. இது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர், நில அளவைத் திணைக்களம் போன்றவற்றிற்குத் தெரிவித்து அவற்றினூடாக அறிக்கையும் பெறப்பட்டிருக்கின்றது.

மாகாணசபை இதனைக் களஆய்வு செய்து இது கழிவு நீர் வழிந்தோடும் இடம் எனவும் சட்டவிரோதமாக இங்கு தடுப்புச் சுவர் கட்டப்பட்டிருப்பதாகவும் அறிக்கை சமர்ப்பித்துள்ளது. அதே போன்று நில அளவைத் திணைக்களமும் இது அரசுக்குச் சொந்தமான காணி என்ற ஆவணங்களையும் தந்திருக்கின்றார்கள். அது மட்டுமல்லாமல் அப்பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கம் நீதிமன்ற நடவடிக்கைகைகளையும் மேற்கொண்டிருக்கின்றது. ஆனால் இவ்வாறு இந்தப் பிரச்சனை சென்று கொண்டிருக்கின்ற நிலையிலும், கல்முனை மாநகரசபைக்குச் சொந்தமான வாகனங்களைப் பயன்படுத்தி தொடர்ந்தும் அந்த இடத்தை மண் இட்டு நிரப்பும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டே வருகின்றது.

இவ்வாறு தொடர்ச்சியாக கல்முனை வடக்குப் பிரதேச செயலக பிரிவிலே தமிழர்களின் பூர்வீக நிலங்களை ஆக்கிரமிக்கின்ற செயற்பாடு நடந்து கொண்டிருக்கின்றது. இது தொடர்பில் நான் பொது நிருவாக அமைச்சரிடம் நேரடியாக களவிஜயமொன்றினை மேற்கொள்ளுமாறு கேட்டிருந்தேன் அதுவும் நடைபெறவில்லை. அம்பாறை மாவட்ட செயலாளரும் கூட இது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. நீதிமன்றத்திலே இந்த விடயம் இருக்கின்றபோதும் கூட கல்முனை மாநகர ஆணையாளரால் மாநகரசபை வாகனங்களைப் பயன்படுத்தி இந்த மண் இட்டு நிரப்பும் வேலைதிட்டம் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இது மிகவும் மோசமான ஊழலாகும்.

எனவே இந்த உயரிய சபை இந்த விடயங்களில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" என்று தெரிவித்தார்.

## கடந்தவையும் கடப்பவையும் – (99)

போனவேலை முடிந்த மன மகிழ்வொடு - விசுவமடு
போகவுள்ள வண்டியிலே ஏறியாச்சு

வனப்பு மிகு வன்னிப் பெருநிலத்தின்
செழிப்பினை பார்த்தபடி திரும்புகையில்

வன்னி என்றால் நெருப்பு என்பதெல்லாம் - இந்த
வன்னிக்கும் பொருந்துமோ என்றதொரு கேள்வி - ஏன்?

பரப்பளவில் மிகப்பெரிய வயல்வெளிகள்
பறக்கும் வண்ணவண்ணப் பறவைகள்

ஓங்கி உயர்ந்த பனைமரங்கள் - நல்நிலத்தில்
பாங்காகக் காய்த்துக் குலுங்கும் பயிர்களும் தான்

எங்கிருந்து வந்தவர்க்கும் நிழல்கொடுப்போம் என்பதாக
நன்கு பரந்து வளர்ந்த வேம்புகள்

பல்வகைச் சுவைகொண்ட மாமரங்களோடு
தென்னைகள் வாழைகள் பலாமரங்கள் என

எத்தனை எத்தனை மரங்கள் அங்கு? - மக்கள்
மொத்தமாய் சொல்வதுண்டு வன்னியென்றால் வெய்யிலென்று

வெய்யில்தான் ஆனாலும் அதற்கேற்ப குளிர்வழங்கும்
நல்லபெரு மரங்களுக்கும் குறைவே இல்லை

'ஜெயசிக்குறு' கொடுத்த வன்னியின் இடப்பெயர்வு
கடைசி நேரத்துத் துன்பியல் பெருமழிவு

அத்தனை இடர்களிலும் ஒதுங்குதற்கும்
தற்காலிக தறுப்பாள் வீடுகளை அமைப்பதற்கும்

மெத்தப் பெரும் உதவியாய் இருந்தவை - வன்னியின் பெரும்
சொத்தாக நாமுணர்ந்த அம்மரங்கள்

மரங்கள் மட்டுமல்ல மாலையிலே வீடுசெல்லும்
விலங்குகளும் தனியழகு வன்னி மண்ணில்

தனித்தமிழ் பெயர்களில் கடைகள் - யாரும்
தனித்திரா மகிழ்ச்சியில் மக்கள் கூட்டம்

இனிவரும் நாட்களின் இயல்பினை அறியாது
இனிமையாய் கழித்தனர் இனிய பொழுதினை - பார்க்க

அருமையாய் இருந்தது அங்குள்ளோர் வாழ்க்கை - பின்னாளில்
கொடுமையாய் அமைந்தது 'சத்ஜெய' 1உம்2உம் தொடங்கிய பின்

அத்தகைய கொடுமையை காண்பதன் முன்
எத்தகைய சத்தமும் கேட்காமலே

பத்திரமாய் பலர் வெளியேற பத்தோடு பதினொன்றாய்
மெத்தப் பெரும் சிரமப்பட்டே கொழும்புவரை போய்ச்சேர்ந்தோம்

பளியங்குளம் ஓமந்தை தாண்டிக்குளம் வேப்பம்குளம் - என
பெரியதொரு பயணம் அது.....

(தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வடக்கு கிழக்கு சிவில் அமைப்புக்களின் கூட்டிணைவு என்று அழைக்கப்பட்ட "தமிழ் மக்கள் பொதுச் சபை"யின் அறிக்கை

குடிமக்கள் சமூகக் கூட்டிணைவின் 30.04.2024 வவுனியாத் தீர்மானத்தின் தொடர்ச்சியாக இரண்டாவது பொதுச்சபைக் கூட்டம் 05.06.2024 புதன்கிழமை அன்று யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது.

அதில், இதுவரை வடக்கு கிழக்கு சிவில் அமைப்புக்களின் கூட்டிணைவு என்று அழைக்கப்பட்ட தமிழ் குடிமக்கள் சமூகத்தின் கட்டமைப்பை இனிமேல், “தமிழ் மக்கள் பொதுச்சபை” என அழைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.


ஜனாதிபதித் தேர்தலுக்கான தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயத்தில் அரசியல் கட்சிகள் தங்கள் முடிவுகளை உத்தியோகபூர்வமாக அறிவித்து முடித்தவுடன் பரஸ்பர புரிந்துணர்வு அடிப்படையில் ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்கி செயற்படுவது என ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது.

அத்துடன் தமிழ் மக்கள் பொதுச்சபைக்கான ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட வழிகாட்டல் குழுவும் இருபத்தி ஐந்து பேரை உள்ளடக்கிய தலைமை ஒருங்கிணைப்புக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. தலைமை ஒருங்கிணைப்புக் குழுவில் இருந்து தமிழ் மக்கள் சபைக்குரிய செயற்குழுக்கள் தெரிவுசெய்யப்படும் என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

தொடர்ச்சியாக ஒவ்வொரு மாதத்தின் இறுதி சனிக்கிழமைகளில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழ் மக்கள் பொதுச்சபை கூடி தேவையான முடிவுகளை எடுக்கும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பங்கேற்ற அமைப்புக்கள் மற்றும் செயற்பாட்டாளர்களின் ஒப்பம்

1. சமூக அபிவிருத்தி அமைப்பு - மட்டக்களப்பு
2. நல்லோர் உலகை கட்டி எழுப்பும் அமைப்பு - மட்டக்களப்பு
3. இளைஞர் அமைப்பு மட்டக்களப்பு
4. மீன்பிடி சங்கம் திருப்பெருந்துறை - மட்டக்களப்பு
5. கிழக்கு பல்கலைகழக தமிழ் மாணவர் ஒன்றியம்
6. யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
7. தமிழ் இளையோர் மக்கள் இயக்கம்
8. பண்னையாளர் சங்கம்
9. “சன்ரைஸ்” அமைப்பு
10. குரலற்றவர்களின் குரல் அமைப்பு
11. வடக்கு கிழக்கு வலிந்து காணமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம்
12. “மக்கள் மனு” வடக்கு கிழக்கு சிவில் சமூகம்
13. தமிழர் கலை பண்பாடு மையம்
14. சமூக விஞ்ஞான ஆய்வு மையம்
15. “எம்பவர்” நிறுவனம் - திருகோணமலை
16. தமிழ் சிவில் சமுக அமையம்
17. தளம் அமைப்பு - திருகோணமலை
18. போராளிகள் நலன்புரிச்சங்கம்
19. ஒருங்கிணைந்த தமிழர் கூட்டமைப்பு
20. கால்நடை சமாசம் - மட்டக்களப்பு
21. வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கம்
22. க.இராசலிங்கம் - வாகரை சிவில் சமூச செயற்பாட்டாளர்
23. தவத்திரு அகத்தியர் அடிகள்- தென்கைலை ஆதீனம் - திருகோணமலை
24. சி.அ.யோதிலிங்கம் - சமூக விஞ்ஞான ஆய்வுமையம்
25. அருட்திரு. ப.யோ. ஜெபரட்ணம் - குருமுதல்வர் யாழ் மறைமாவட்டம்
26. கி.ஜெயக்குமார் - மறைக்கோட்ட முதல்வர் இளவாலை
27. சி.மதன்பாபு - இணையம் அமைப்பு
28. இரணைமடு கமக்கார அமைப்புகளின் சம்மேளனம்
29. சே.ஞானமலர் - இரணைமடு டி-8 கமக்கார அமைப்பு
30. யாழ் வணிகர் கழகம்
31. ந.பரந்தாமன் - பேராசிரியர் துரைராஜா அறிவியல் வளர்ச்சிப் பேரவை
32. சி.சயந்தன் - பேராசிரியர் துரைராஜா அறிவியல் வளர்ச்சிப் பேரவை
33. வி.குயிலன் - பேராசிரியர் துரைராஜா அறிவியல் வளர்ச்சிப் பேரவை
34. ஏ.பெனடிக்ட் குரூஸ் - நப்சோ அமைப்பு மன்னார்
35. எஸ். மகாலிங்கம் - இணைச்செயலாளர் தனியார் பேருந்து (788)
36. ஆ.மோகன் பிரசாந் - பேராசிரியர் துரைராஜா அறிவியல் வளர்ச்சிப் பேரவை
37. த.சிறி - சமூக செயற்பாட்டாளர்
38. தம்பாட்டி கிராமிய கடன் நலன்புரிச்சங்கம்
39. எம்.கம்சன் - சமூக செயற்பாட்டாளர்
40. இரணைமடு கமக்கார அமைப்பு
41. கி.ஆறுமுகம்- சமுக செயற்பாட்டாளர்
42. வணபிதா. சதீஸ்டானியல் தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனம்
43. வேலன்சுவாமிகள் - P2P மக்கள் பேரெழுச்சி இயக்கம்
44. பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம் - அரசறிவியல்துறை தலைவர் - யாழ் பல்கலைக்கழகம்
45. அருட்தந்தை பிரான்சிஸ் யூட் ஞானராஜ்
46. அ.அன்னராசா - அகில இலங்கை மீனவ அமைப்பு
47. அ.யதீந்திரா - மக்கள் மனு வடக்கு கிழக்கு சிவில் சமூகம்
48. ச.இளங்கோ - சமூக சமுர்த்தி நல்லூர் பிரதேச மட்டத்தலைவர்
49. அகரம் மக்கள் மையம் - திருகோணமலை
50. சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கம் - யாழ்ப்பாணம்
51. யாழ் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் - யாழ்ப்பாணம்
52. கால்நடை கூட்டுறவுச் சங்கம் - யாழ்ப்பாணம்
53. பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம் - யாழ்ப்பாணம்
54. கிராமிய வங்கி நுகர்ச்சி கூட்டுறவு சங்கம் - யாழ்ப்பாணம்
55. விவசாய சங்க கூட்டுறவுச் சங்கம் - யாழ்ப்பாணம்
56. யாழ்ப்பாணம் வணிகர் கழகம்
57. ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு
58. வடமாகாண வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கம்
59. அகில இலங்கை மீனவ மக்கள் பொதுச்சங்கம்
60. அனலைதீவு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
61. ஊர்காவற்துறை கடற்தொழிலாளர் நலன்புரிச் சங்கம்
62. மெலிஞ்சிமுனை கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
63. எழுவைதீவு கிராம அபிவிருத்திச் சங்கம்
64. நாரந்தனை வடக்கு சனசமூக நிலையம்
65. வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சமாசம்
66. புங்குடுதீவு நசரத் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
67. தம்பாட்டி நலன்புரிச் சங்கம்
68. ஜே98 சிவில் சமூக குழு
69. சி.பூஜா - சமூக செயற்பட்டாளர் மட்டக்களப்பு
70. ம.செல்வின் - சமூக செயற்பட்டாளர்
71. செ.கிரிசாந் - ஊடகவியலாளர்
72. இ.பாரதி - ஊடகவியலாளர்
73. மட்டக்களப்பு சிவில் சமூகம் - வணபிதா. ம.லூக்யோன்
74. சிவசிறீ. வீ.கே. சிபாலன்குருக்கள்
75. ம.நிலாந்தன் - சமூக செயற்பாட்டாளர்
76. விஜயகுமார் - யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய முன்னாள் தலைவர்
77. உதயராஜ் - யாழ் மாவட்ட தனியார் பேருந்து இணையம்
78. காரைநகர் தனியார் பேருந்து சங்கம்
79. யாழ்மாவட்ட பாரதி ஊர்திகள் சங்கம்
80. இந்திரன் ரவீந்திரன் - சமூக செயற்பாட்டாளர்
81. கால்நடை பண்ணையாளர் அமைப்பு - மயிலத்தமடு மாதவனை
82. தமிழ் ஊடகத் திரட்சி (நிமிர்வு)
83. அருட்பணி லூக் ஜோன் - மட்டக்களப்பு சிவில் சமூகம்



# வட்டுக்கோட்டை பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளை பாராளுமன்ற உரையின் போது அம்பலப்படுத்திய கஜேந்திரன் எம்.பி

யாழ்ப்பாணத்திலே அல்லது வடகிழக்கில் பொலிசாரது அராஜகங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக கஜேந்திரன் எம்.பி சுட்டிக்காட்டியுள்ளார். இடம்பெற்றுள்ள பாராளுமன்ற உரையின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில், யாழ்ப்பாணத்திலே அல்லது வடகிழக்கில் பொலிசாரது அராஜகங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற நேரத்திலே கடந்த 2023 ஆம் ஆண்டு 11 ஆம் மாதம் 19 ஆம் திகதி ஒரு இளைஞர் வட்டுக்கோட்டை பொலிஸாரது கட்டுப்பாட்டுக்குள் இருந்த பொழுது படுகொலை செய்யப்பட்டு உயிரிழந்திருந்தார்.

அவருடைய கொலை தொடர்பாக 4 பொலிஸார் கைது செய்யப்பட்டிருக்கின்ற போதிலும் கூட அந்த சித்திர வதைகள் நடைபெற்ற நான்கு நாளும் அந்த வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரியாக இருந்த OIC மீது இது வரைக்கும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது தொடர்பாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கவனம் செலுத்தாமல் இருப்பது ஏன் என்கின்ற ஒரு கேள்வி இருக்கின்றது. ஆகவே இது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

பொன்னாலை பகுதியிலே கிருஷ்ணவேணி என்கின்ற ஒரு பெண் தலைமைத்துவ குடும்பத்தை சேர்ந்த ஒரு பெண் தன்னுடைய வளவிலே ஒரு குழாய் கிணறு ஒன்றை அமைத்து கொண்டிருக்கின்ற பொழுது அங்கு சென்ற வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொலிசார் அந்த அனுமதி பெறப்படவில்லை என்பதை காரணம் காட்டி அவரிடம் இருந்து 8000 ரூபாய் கப்பத்தை பெற்றுக்கொண்டு சென்றிருக்கிறார்கள்.

அந்த தாயின் மகன் க.பொ.த உயர்தரம் படித்துக்கொண்டிருக்கிறார். பாடசாலை கல்வி போக மிகுதி நேரம் போக கூலி வேலை செய்து அதிலே சேமித்த பணத்திலே தான் இந்த குழாய் கிணறு அமைக்கின்ற பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த பணத்தில் தான் 8000 ரூபாயை புடுங்கி சென்றிருக்கிறார்கள். அந்த பொலிசாரினுடைய பெயர்கள் சுமணஸ்ரீ, குமார, மற்றும் க்஁ன் என்ற மூன்று போலீஸ் உத்தியோகத்தர்கள். இவர்கள் இந்த கப்பத்தை பெற்றிருக்கிறார்கள். இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அடுத்ததாக ஆறுகால் மடத்தை சேர்ந்த கந்தசாமி சேகரன் என்ற மனநிலை பாதிக்கப்பட்ட ஒரு நபர் 2023 ஆம் ஆண்டு 11 ஆம் மாதம் 14 ஆம் திகதி காரைநகர் பகுதியிலே கிராம சேவையாளர் அலுவலகம் ஒன்றில் சந்தேகத்துக்கு இடமான முறையிலே நிற்கிறார் என்ற தகவல் கிராம சேவையாளரால் வட்டுக்கோட்டை பொலிசாரால் கடந்த வருடம் 11 ஆம் மாதம் 18 ஆம் திகதி பொன்னாலை சந்தியிலே பற்றைக்குள்ளிருந்து சிதைந்த நிலையில் அவரது சடலம் மீட்கப்பட்டது. அந்த செய்தியை சேகரிப்பதற்கு சென்ற ஊடகவியலாளர் புவனேஸ்வரன் கஜிந்தன் பொலிஸாரால் அச்சுறுத்தப்பட்டிருக்கின்றார். அந்த கொலை தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸாரால் இன்று வரை எவரும் கைது செய்யப்படவில்லை.

அதே போன்று காங்கேசன்துறை விசேட பொலிஸ் பிரிவை சேர்ந்த (பொலீஸ் இலக்கம் 90829) வாளால் பொது மகன் ஒருவரை வெட்டியிருக்கிறார். இந்த சம்பவம் தொடர்பாக இன்றுவரை அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

துரதிஷ்டவசமாக கடந்த 30ஆம் திகதி யாழ்ப்பாணம் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலே யாழ்ப்பாணத்துக்கு பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகர் கூறுகிறார் அவர் தற்காப்பு நடவடிக்கையாக அவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை தடுக்க முற்பட்ட போது தான் அந்த வாள்வெட்டு நடைபெற்றது என்று சொல்லி.

ஆனால் இது அப்பட்டமான பொய் அந்த ஆவணங்கள் நான் இங்கே சபையின் நடவடிக்கைக்காக சமர்பிக்கின்றேன். இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன் என அவர் தெரிவித்துள்ளார்.

# "ஒன்றாறியோ அரசாங்கம் கனேடிய தமிழ் சங்கத்திற்கு 40,000 டாலர்கள் வரை "படிமுறை தமிழ்" என்ற பாடத்திட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த நிதி உதவி வழங்கியது"

கனடிய செய்திகள் Canadian News

## றொறன்ரோ பல்கலைக் கழக ஸ்காபுறோ வளாகத்தில் நடைபெற்ற 15வது உலகத் தமிழாசிரியர் மாநாட்டின் ஆரம்ப விழாவில் உரையாற்றியபோது கல்வி அமைச்சர் தெரிவிப்பு



ஒன்ராறியோ அரசாங்கமானது இங்கு வாழும் தமிழ் மாணவர்களிடையே தமிழ் மொழி மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றைப் பாதுகாக்கவும் கொண்டாடவும் வழங்கும் ஆதரவை மேம்படுத்துகிறது என ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெஸ்சே தெரிவித்தார்.

ஸ்காபுறோவில் அமைந்துள் றொறன்ரோ பல்கலைக் கழகத்தின் வளாகத்தில் கடந்த ஜுன் 1ஆம் தேதி நடைபெற்ற 15வது உலகத் தமிழாசிரியர் மாநாட்டின் ஆரம்ப விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்கள் லோகன் கணபதி மற்றும் அரிஸ் பாபிகியன் ஆகியோரும் உடனிருந்தனர். இந்த நிகழ்வு மாகாணத்தின் உள்ளடக்கம் மற்றும் கலாச்சாரக் கல்விக்கான அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

ஒன்டாரியோவின் பலதரப்பட்ட மாணவர் மக்கள் தொகை மற்றும் தமிழ்க் கல்வியாளர்கள் விவாதித்து நிறைவேற்றும் மன்றமாக இந்த மாநாடு விளங்கியதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தமிழ் கற்பித்தலைச் சுற்றியுள்ள அறிவு, ஏற்பட்ட இழப்பைப் போக்குவதற்கான ஒரு கருவியாகவும் செயல்படுகிறது.

1981 ஆம் ஆண்டு யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்ட துயர சம்பவத்தின் போது தமிழ் சமூகம், பல விலைமதிப்பற்ற தமிழ் இலக்கியப் படைப்புகள் மற்றும் வளங்கள் அழிக்கப்பட்டன. இந்த பேரழிவு ஆழமானது.

தமிழ் மக்களைப் பாதித்தது. மற்றும் கலாச்சார பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்திற்கான அவர்களின் போராட்டத்தை முன்னிலைப்படுத்தியது.

ஒன்றாறியோ அரசாங்கம் கனேடிய தமிழ் சங்கத்திற்கு தற்போது 40,000 டாலர்கள் வரை தமிழ் மொழியை ஊக்குவிப்பதற்காக வழங்குகிறது, மற்றும் படிமுறை தமிழ் என்ற பாடத்திட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஏமது நிதி உதவி பக்கபலமாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

தமிழ் மொழிக்காக வழங்கப்படும் இந்த நிதி ஆதரவு முதன்மையாக உலகத் தமிழ் ஆசிரியர்களின் மூலம் வழங்கப்படும்.

ஒன்றாறியோவில் முதன்முறையாக மாநாடு நடைபெறுகிறது. இந்த முயற்சியின் மூலம், கனடிய தமிழ் ஆசிரியர்கள் படிமுறை பாடத்திட்டத்தில் ஆழமான நுண்ணறிவுகளைப் பெறுவார்கள்.

தமிழ் மொழி மற்றும் கலாச்சாரம் பற்றிய புரிதல் மற்றும் பாராட்டுக்களையும் இவர்கள் பெறுவார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில், "ஒன்றாரியோவில் உலகின் மிகப்பெரிய தமிழ் புலம்பெயர்ந்தோர் வசிக்கின்றனர், மேலும் அவர்கள் கணிசமாக உள்ளனர்.

கனடாவின் வளமான வரலாறு, கலாச்சாரம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு அவர்களின் பங்களிப்பு மிகப்பெரியது" என்றும் அமைச்சர் ஸடீபன் லெஸ்சே கூறினார்.

மேலும் புதிய ஆதரவுகள் மாணவர்கள் தங்கள் தமிழ் வரலாறு மற்றும் பாரம்பரியத்தில் பெருமிதம் கொள்வதை உறுதிசெய்ய உதவும்.

இந்த நிதி வழங்கும் விடயம் தொடர்பில் MPP லோகன் கணபதி மற்றும் MPP விஜய் தணிகாசலம் ஆகியோரால் பரிந்துரைக்கப்படுகிறது என்றும் ஒன்றாரியோவின் கல்வி அமைச்சர் ஸடீபன் லெஸ்சே தெரிவித்துள்ளார்.

# ஒன்றாரியோ முதல்வர் தனது அமைச்சரவையில் செய்துள்ள மாற்றங்கள்

குடியிருப்புவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சகத்தின் குடியிருப்புவசதி இணை அமைச்சராக விஜய் தணிகாசலம் அவர்கள் நியமனம். கல்வி அமைச்சராக இருந்த ஸ்டீபன் லெட்சே மின்சார மற்றும் சக்தி துறை அமைச்சராக நியமனம்.

ஜுன் 6ஆம் திகதி, வியாழக்கிழமையன்று ஒன்றாறியோ மாநில சட்டமன்றத்தில் செய்யப்பட்டுள்ள அமைச்சரவை மாற்றங்களின் அடிப்படையில், குடியிருப்புவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சகத்தின், குடியிருப்புவசதி இணை அமைச்சராக விஜய் தணிகாசலம் அவர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார். இதன் மூலம் பதினைந்து மில்லியன் மக்கள் வாழும் ஒன்றாறியோ மாநிலத்தின் சட்டமன்றத்துக்குத் தெரிவான முதலாவது தமிழ் அமைச்சராக விஜய் தணிகாசலம் அவர்கள் தொடர்ந்து விளங்குகிறார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "முதல்வர் டக் ஃபோர்ட் மற்றும் அமைச்சர் போல் கலண்ட்ரா ஆகியோருடன் இணைந்து ஒன்றாறியோ வாழ் மக்களுக்காக பணியாற்றுவதற்கு குடியிருப்புவசதி இணை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளதையிட்டு நான் பெருமை கொள்கிறேன். இத்தருணத்தில், என் தொகுதியாகிய ஸ்காபரோ - றூஜ் பார்க்கிலுள்ள மக்கள் அனைவரும் என் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கும் அவர்கள் வழங்கி வரும் ஆதரவுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு, இவர் ஒன்றாறியோ மாநிலத்தின் போக்குவரத்துத்துறை அமைச்சகத்தின் துணை அமைச்சராக நியமனம் செய்யப்பட்டார். இவர் ஒன்றாறியோ அரசின் முழுமையான நிதியுதவியில் போக்குவரத்துத் துறையில் கொண்டுவரப்பட்ட "ஒற்றைக்கட்டணத்" திட்டத்தை நடைமுறைப்படுத்தி, அத்திட்டத்தின் மூலம் றொறன்ரோ பெருமபாகத்திலுள்ள பல்வேறுபட்ட போக்குவரத்துச் சேவைகளுக்குமிடையில் பயணிக்கும் பயணிகள் தலா ஆண்டிற்கு 1600 டொலர்களை ஒருவர் சேமிக்க வழிவகுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



அமைச்சர் விஜய் அவர்கள் நான்காவது முறையாக பொய்யாமொழிப் புலவரின் உலகப்பொதுமறையாம் "திருக்குறள்" மீது பதவியேற்பு உறுதிமொழியை ஏற்றார். இதேபோல், இவர் கடந்த 2018, 2022 ஆம் ஆண்டுகளில் தனது சட்டமன்றப் பதவிகளை ஏற்கும்போதும், 2023ஆம் ஆண்டில் தனது அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொள்ளும்போதும் திருக்குறள் மீது பதவியேற்பு உறுதிமொழியை வழங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# "கவிநாயகர்" வி. கந்தவனம் அவர்களது நினைவாக குரும்பசிட்டி நலன்புரிச் சபை — கனடா ஏற்பாடு செய்த மனங்களைத் தொட்ட இரு நிகழ்வுகள்







மறைந்த முன்னாள் அதிபரான "கவிநாயகர்" வி.கந்தவனம் அவர்களது நினைவாக குரும்பசிட்டி நலன்புரிச் சபை - கனடா ஏற்பாடு செய்த மனங்களைத் தொட்ட இரு நிகழ்வுகள் கடந்த 02-06-2024 அன்று ஞாயிற்றுக்கிழமையன்று அஜின்கோர்ட் சன சமூக நிலைய மண்டபத்தில் நலன்புரிச் சபையின் செயலாளர் ஐ. ஜெகதீஸ்வரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

முதலாவது நிகழ்வாக "கவிநாயகர்" கந்தவனம் அவர்களது நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

அதில் வரவேற்புரையை நலன்புரிச் சபையின் செயலாளர் கணேஸ்வரி குகனேசன் அவர்கள் நிகழ்த்தினார்.

தொடர்ந்து அஞ்சலி உரைகளை திருவாளர்கள் வி.எஸ். துரைராஜா, அகணி சுரேஸ். சி. சண்முகராஜா, இரா சம்பந்தன், மற்றும் ஆர்.என். லோகேந்திரலிங்கம் ஆகியோர் ஆற்றினர்.

இவர் அனைவரும் கவிநாயகர் கந்தவனம் அவர்களுடன் பயணித்த காலங்களில் அவரிடத்திலிருந்து கற்றுக் கொண்ட விடயங்கள் மற்றும் கவர்ந்த விடயங்கள் ஆகியவற்றை மிகவும் உருக்கத்தோடு பகிர்ந்து கொண்டார்கள்.

அதனைத் தொடர்ந்து "தாய்வீடு பத்திரிகை நிறுவனத்தினால் வெளியிடப்பெற்ற "கவிநாயகர்" அவர்களின் கட்டுரைகளின் தொகுப்பான "இலக்கிய உறவுகள்" என்னும் நூல் வெளியீட்டு நிகழ்வு நலன்புரிச் சபையின் செயலாளர் ஐ. ஜெகதீஸ்வரன் அவர்கள் தலைமையில் தொடர்ந்து நடைபெற்றது.

மேற்படி நூல் தொடர்பான நயவுரையை எழுத்தாளர் குரு அரவிந்தனும். விதந்துரையை வாணி சிவராஜன் அவர்களும். நூல் நோக்கு என்னும் தலைப்பில் பேராசிரியர் அ. சந்திரகாந்தனும், ஆற்ற தொடர்ந்து தாய் வீடு பிரதம ஆசிரியர் திலீப் குமார் அவர்கள் நூலின் வெளியீட்டுரை கச்சிதமாக சபையோருக்கு சமர்ப்பித்தார்.

தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கும் வைபவம் இடம்பெற. அதில் முதலாவது பிரதியை எழுத்தாளர் எஸ். ஜெகதீசன் அவர்களும், தொடர்ந்து பல அழைக்கப்பெற்ற பிரமுகர்களும் பெற்றுக் கொண்டனர்.

கவிநாயகர் அவர்கள் நடத்தும் இலக்கியக் கூட்டங்களுக்கு ஒப்பானதாக அவருக்கான நினைவேந்தல் நிகழ்வும் நூல்வெளியீடும், இலக்கியத் தரமும் கனமும் நிறைந்ததாக இடம்பெற்றது என கலந்து கொண்டவர்களில் பலர் தெரிவித்த வண்ணம் மண்டபத்தை விட்டு நீங்கினர்.

மேற்படி நிகழ்வில் கவிநாயகர் வி. கந்தவனம் அவர்களது பாரியார் அவர்களும் புதல்வி வாணி மற்றும் புதல்வர் வாரணன் ஆகியோர் தங்கள் குடும்பத்தினர் சகிதம் கலந்து சிறப்பித்தனர்.

- சத்தியன்






# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும்
1098



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் கொழும்பு

**நண்பர்களே!**

**எனது பெயர் கொண்ட முகநூலில் (Facebook) ஒவ்வொரு வாரமும் இந்துமதம் கூறுவதென்ன? மற்றும் தேடல் என்ற தலைப்பில் பல்வேறு விடயங்கள் பற்றி எழுதி வருகின்றேன். வாசித்தறிந்து உங்கள் கருத்துக்களை வெளியிடுங்கள்.**

**நன்றி.**

“ தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறி வாரில்லை
சேயினும் நல்லன் அணியன்நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யானே. ”

அக்காலப்பகுதியில் எங்கும் சிறுதெய்வ வழிபாடு மேம்பட்டுக் காணப்பட்டது. இவ்வாறான ஆலயங்கள் சிவாகம நெறி தழுவாமல் பேணப்பட்டு வந்தன. இந்நிலையை அவதானித்த திரு அருணாசலம் பொன்னம்பலமுதலியார் அவர்கள், சிவாகம முறையிலான சிவாலயமொன்றைக் கொழும்பு மாநகரிலே கட்டவேண்டும் என்ற ஆதங்கம் கொண்டவராகக் காணப்பட்டார். இவ்வாலயம் கட்டுவதற்குரிய ஐந்து ஏக்கர் நிலப்பரப்பை, கப்ரன் ஜோண் பவுல் ஸ்ரோன் என்ற ஆங்கிலேயரிடம் விலைக்கு வாங்கினார். சிவாலயத்தை அமைப்பதற்குரிய சிற்பிகளையும், கோயிற் கட்டடக் கலைஞர்களையும் தென்னிந்தியாவிலிருந்து வரவழைத்தார். ஆரம்பகாலத்தில் இக்கோயில் கல்லாலும், செங்கட்டியாலும், சுண்ணாம்புச் சாந்தாலும் கட்டப்பட்டது.

இச்சிவாலய திருப்பணிவேலைகள் ஆரம்பமாகி, இரண்டு வருடத்தில் அனைத்துத் திருப்பணிகளும் சிறப்பாக நிறைவு பெற்றன. இவ்வாலயத்தின் மகாகும்பாபிஷேகம், 1857 ஆம் ஆண்டு, மார்கழிமாதம் மிக விமரிசையாக நடந்தேறியது. திருக்கோயிலின் உயிர்நிலையாக ஆலயத்தின் கருவறை விளங்குகின்றது. இவ்வாலத்தின் கருவறையிலே இருபத்திரண்டு அங்குல உயரங்கொண்ட சிவலிங்கமும், போகசக்தியும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. திரு. பொன்னம்பலம் அருணாசலம் முதலியார் அவர்கள் தமது வீட்டிலே பாலயந்திரம் ஒன்றினை வைத்துப் பூசித்து வந்தார். இந்த யந்திரத்தை இவ்வாலயத்திலே நிறுவப்பட்ட முப்பத்திரண்டு அங்குல உயரங் கொண்ட சிவகாமி அம்பாளின் பீடத்திற்கு அடியிலே வைத்து அம்பாளை அதன் மேல் நிறுவினார். தான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற பெருநோக்கு, முதலியார் அவர்களுடைய செயலிலே புலப்பட்டுள்ளது.

திருக்கோயில்களிலே எழுந்தருளியுள்ள ஆலயங்களின் அருள்வீச்சிற்கு மந்திரங்களினால் சக்தியூட்டப்பட்ட யந்திரப்பிரதிஷ்டையும், கும்பாபிஷேகமும் முக்கிய காரணங்களாக அமைகின்றன. சாதாரண வழக்கிலே யந்திரம் என்பது இயக்கும் கருவியைக் குறிக்கின்றது. யந்திரம் இல்லாது வண்டி இயங்காது. அதே போல யந்திரப் பிரதிஷ்டை செய்யப்படாத திருவுருவத்திலே, பூரணமான தெய்வீக அலைகள் ஏற்படுவதில்லை என்பது ஞானியர் கருத்தாகக் காணப்படுகின்றது. அத்தோடு சிவகாமி அம்பாளின் பாதாரவிந்தங்களில் ஸ்ரீசக்கரம் என்னும் மகிமை வாய்ந்தயந்திரமும் வைத்துப் பூசிக்கப்படுகின்றது. இவ்வாறான அருள்வீச்சுக்கொண்ட ஸ்ரீசக்காத்தினை அம்பாளின் அருகில் வைத்துப் பிரதிஷ்டை செய்வித்தார்.

ஸ்ரீசக்கர வழிபாடு என்பது உலகை உருவாக்கி காத்துவரும் அன்னைக்குச் செய்யும் யந்திர, தந்திர வழிபாடாகும். சக்திக்காவும், அறிவுக் கூர்மைக்காகவும் ஸ்ரீசக்கர வழிபாடு செய்யும் மரபு காணப்படுகின்றது. ஓர் உருவம், ஒரு நாமம் என்று அமையாத இறைவனை, விக்கிரகமாகவும், சித்திரமாகவும் வழிபடுவது வழக்கம். அவ்வாறே பொருள் நிறைந்த சொற்களிலும், சக்திவாய்ந்த சப்தஉச்சாடனங்களிலும் வெளிப்படுத்தி, மந்திரங்களாக ஓதி இறைவனை வழிபடும் மரபும் வழக்கிலுள்ளது. இதில் பீஜ அட்சரங்களின்மூலம் சக்தியை உருவாக்கும் வித்துக்கள், எழுத்து வடிவத்திலே சொல்லாகவும், ஒலி வடிவத்திலே உச்சாடனமாகவும் இடம்பெறுகின்றன. இந்த இரண்டிற்குமிடையே வருவதுதான் சக்கரம் என அழைக்கப்படுகின்றது.

இதிலே சக்திக்குரிய தெய்வம் கோண, வட்டவடிவங்கள் கொண்ட அமைப்பான (Geometirical Diagram) வடிவத்தில் செய்யப்பட்டுள்ளது. மந்திரங்கள் மனனத்துக்குரியவையாக உள்ளே இடம்பெறும். யந்திரம் (சக்கரம்) வெளியே பூசைக்குரியதாக புறவழிபாடாக அமையும். விக்கிரக வழிபாட்டைக்காட்டிலும் சக்கர வழிபாடு, உருவ எல்லைகளைக் கடந்த ஒன்றாகக் கருதப்படுகின்றது. சக்கரம் என்பது மந்திரத்தைப் போலவே, தெய்வீக உருவை எண்ணத்தில் பதிக்க உதவுகின்றது.

அளவிலும், விரிவிலும் அடக்கமுடியாத மாபெரும் சக்தியை, அளவுபடுத்தி, பிரயோகம் செய்யக்கூடிய அமைப்பில், சக்தியின் அருளாசியை ஸ்ரீசக்கரம் அளிக்கின்றது. சக்தியை வழிபடுவோர் ஸ்ரீசக்கரவழிபாட்டை மேற்கொண்டு, சக்தியின் அருளைப் பெறுகின்றார்கள். பல நூறாண்டுகளுக்கு முன்பே ஆதிசங்கரர், ஸ்ரீசக்கரத்தை நிறுவி வழிபாடியற்றியுள்ளார். இவ்வாறான அருமை பெருமைகளைக் கொண்ட ஸ்ரீசக்கரத்தை, கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்திலுள்ள அம்பிகையான சிவகாமி அம்பாளின் அருகே பிரதிஷடை செய்து அனைவரும் அன்னையின் அருட்சக்தியைப் பெறுமாறு, திரு. அருணாசலம் பொன்னம்பல முதலியார் அவர்கள் அரும்பணி புரிந்துள்ளார்கள்.

திரு. அருணாசலம் பொன்னம்பலமுதலியார் அவர்கள் தனக்குப்பின்னும் இவ்வாலயம் தங்குதடையின்றி சிறப்பாக நடைபெறவேண்டும் என்ற பெருநோக்கில், பல திட்டங்களைச் செய்துவைத்தார், சைவசமயத்திலுள்ள ஆலய வழிபாட்டிலே சிவாலயங்களைப் பேணுவதென்பது சற்றுச் சிரமமானதாகவே தென்படுகின்றது. சிவாலயங்களில் அனைத்தத் திருவுருவங்களும் இடம்பெற்று, நித்திய, நைமித்திய வழிபாடுகள் நடைபெறுவது வழக்கம்.

***வளரும்...***

*(14 பக்கத் தொடர்ச்சி)*

## புலம்பெயர் தேசங்களில் தமிழ் மொழியை தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் மூலம் கற்பிப்பதன் ஊடாக தமிழுக்கு நாம் புத்துயிர் கொடுக்கின்றோம்

அவற்றில் அர்த்தமுள்ள வகையில் மெய்நிகர் தொழில் நுட்பம் உள்ளிட்ட தகவல் தொடர்புத் தொழில் நுட்பங்களை கூடவே ஒருங்கிணைத்தும் வருகிறார். இதன் மூலம் எதிர்கால தலைமுறைகளுக்கான பலமான அடித்தளத்தை உருவாக்கியுள்ளார் என்று கூறலாம் எமது மொழிதான் எமது பலம். தமிழில் மாதா, பிதா, குரு தெய்வம் என்று இறைவனுக்கு முன்னதாக ஆசிரியரை குறிப்பிடுவதே அவர்கள் சமூகத்தில் வணங்கப்பட வேண்டியவர்கள் என்பதற்காக தான்.

எமது தேசத்தில் தமிழ் மொழியை பேசுவதே தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படுகின்றது. அந்த வேளையில் இப்படி ஓர் பிரமாண்டமான கருதரங்கமாக ஓர் இடத்தில் நூற்றுக்கு மேற்பட்ட தமிழ் மொழி பற்றாளர்களை ஒன்றிணைத்து எப்படி எம் மொழியை பேணி வளர்க்கலாம் என்பதை உரையாடுவதற் கொண்டிருக்கிறோம் என்பதே எங்களுக்கு ஓர் வெற்றி.

தமிழ், உலகின் பழமையான மொழிகளில் ஒன்றாக, பெரும் வரலாற்றுமுக்கியத்துவத்துடன் நிறைந்தது. இந்த தலைமுறையினருக்கு தமிழை எளிய முறையில் நாம் கற்பித்தால்தான் தெடர்ந்து நிலைநிற்கும் என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

படியமுறை தமிழ் அதை மொழியியல், ஒலியியல், மற்றும் இலக்கியத்தின் அடிப்படையில் படிப்படியான நுண் அணுகுமுறை மூலம் திறமையாக செயல்படுத்துகிறது.

இசை அமைப்பாளர் ஜேம்ஸ் வசந்தன், அவர்கள் முத்தமிழின் ஒன்றான இசைத்தமிழின் மூலம் எங்கள் பாரம்பரியத்தின் முக்கியகலாசார விழுமியங்களை எடுத்துசெல்வதற்கு பாராட்டுகள்.

ஒன்றாரியோ கல்வி அமைச்சின் நிதி அறிவிப்பு, கனடிய தமிழ் சங்கத்தின்படியமுறைதமிழ்அமைப்பின் வளர்ச்சியைத் தொடரும் திட்டங்களை ஆதரிக்கிறது. ஒன்றாரியோவில் சிறந்தமற்றும் எளிமையான முறையில் தமிழ் கல்வி மாணவர்களுக்கு கிட்ட வேண்டு என்ற நோக்கத்தோடு, நீண்ட காலமாக பொதுநலத்துடன் தமிழ் கல்வியை மேம்படுத்த செயல்பட்டு கொண்டு இருக்கும் படிமுறை தமிழ் கல்வித்திட்டத்திற்கு நிதித் தொகை வழங்கியுள்ளனர் எமது ஒன்றாரியோ கல்வி அமைச்சு” என்று விரிவான உரையை ஆற்றினார் லோகன் கணபதி அவர்கள். தொடர்ந்து அங்கு கலந்து சிறப்பித்த ஒன்றாரியோ கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெச்சே அவர்களும் சிறப்புரையாற்றி அனைவரையும் பாராட்டினார்.

“திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்” என்னும் மகாகவி பாரதியாரின் கனவு மெய்பட்டது போன்று இம்மாதம் 1ம், 2ம், 3ம் திகதிகளில் ரொறன்ரோ பல்கலைக்கழக ஸ்காபுறோ வளாகத்தில் அமைந்துள்ள மாபெரும் அரங்கில் 15வது உலகத் தமிழ் ஆசிரியர் மாநாடு முதன்முதலாக கனடாவில் தமிழர்கள் அதிகளவில் வாழும் பெருநகரில் ஆரம்பமாகிய நிறைவுற்றது.

கனடாவில் தமிழ் மொழிக்கும். தமிழ் மொழி கற்பித்தலுக்கும் தொண்டாற்றிய பெருமக்களான அமரர்கள் நாராயணர் முருகையா. கவிநாயகர் கந்தவனம். “அதிபர்” பொ. கனகசபாபதி. கவிஞர் சபா அருள்சுப்பிரமணியம் மற்றும் பண்டிதர் ம.செ. அலக்சாண்டர், தமிழறிஞர் சிவபாதசுந்தரம் ஆகிய பெருந்தகைகளின் நினைவாக அமைக்கப்பட்டிருந்த பிரதான அரங்கிலும் ஏனைய சிறிய அரங்கங்களிலும் உலகத் தமிழ் அறிஞர்கள் பலர் கலந்து கொண்டு ஆராய்ச்சி கட்டுரைகளையும் ஆக்கங்களையும் வாசித்தமை தமிழ் மொழியின் தரத்தை மேலும் உயர்த்திக் காட்டியது.

மேற்படி மாநாடு நடைபெற்ற மூன்று நாட்களும் காலை மதியம் மற்றும் மாலையென கலை நிகழ்ச்சிகளும் பார்வையாளர்ளை கவரும் வகையில் மேடையேற்றப்பட்டன. அங்கு மேடையேற்றப்பெற்ற அனைத்து நிகழ்ச்சிகளிலும் தமிழ் மணம் வீசி நின்றது. எம் மொழியின் கம்பீரத்தைக் காட்டியது.

கனடாவில் தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கு உதவிய பெருந்தகைகளுக்கான வணக்க நிகழ்வு மங்கல ஒளித்தீபம் ஏற்றல். தமிழ்த்தாய் வாழ்த்து, கனடிய தேசிய கீதம் இசைத்தல் என ஆரம்ப நிகழ்வுகள் அரங்கத்தை மேலும் மெருகூட்டி நின்றன. ஸ்ரீமதி நிரோதினி பரராஜசிங்கம் அவர்களது நிருத்திய கலாஞ்சலி நிறுவனத்தின் மாணவிகள் வழங்கிய வரவேற்பு நடனமான “வந்தனம்” மிகவும் பாராட்டுக்குரிய கலை விருந்தாக அமைந்தது.

மேற்படி 15வது உலகத் தமிழ் ஆசிரியர் மாநாடு முதன்முதலாக கனடாவில் தமிழர்கள் அதிகளவில் வாழும் பெருநகரில் ஏற்பாடு செய்த பெருமைக்குரிய பொறுப்பாளர் “சித்தம் அழகியான்” திரு. சு. இராசரத்தினத்தின் தலைமையுரையை அடுத்து தமிழுக்கு இலக்கணம் வகுத்த அறிஞர் பெருமான் தொல்காப்பியர் அவர்களது உருவப்படம் திரை நீக்கம் செய்யப்பெற்று மரியாதை செலுத்தப்பட்டது.

தொடர்ந்து அழைக்கப்பெற்ற சிறப்பு விருந்தினர்கள் தொடர்ச்சியாக பல பயனுள்ள கருத்துக்களை சபையோரோடு பகிர்ந்து கொண்டார்கள்.

இந்த அற்புதமான உலகெங்கும் தமிழர்கள் வாழும் நாடுகளிலிருந்து வந்து ஆசிரியப் பெருந்தகைகள் கலந்து கொண்ட மாநாடானது மிகவும் விசாலமானது. இதன் மூன்று நாள் நிகழ்ச்சிகளையும் மூன்று வாரங்களுக்கு தொடர்ச்சியாக எழுதலாம். அந்தளவிற்கு புலம்பெயர்ந்து வாழும் நமது பெற்றோர்களின் பிள்ளைச் செல்வங்கள் தமது தாய்மொழியான தமிழை இலகுவில் கற்று எமது மொழியில் தேர்ச்சி பெற்றவர்களாக வளர்ந்து வர வேண்டும் என்ற நோக்கோடு படிமுறைத் தமிழ் வகுப்புக்கள் தமிழர் வாழும் நாடுகளில் எல்லாம் அறிமுகம் செய்யப்பட்டதை கொண்டாடும் ஒரு விழாவாகவும் நாம் மூன்று நாள் கொண்டாட்டங்களையும் கருத்தரங்குகளையும் நாம் பார்க்கலாம்.

எனது 37 வருட கனடிய பெருவாழ்வில் இவ்வாறான ஒரு உலகளாவிய மாநாடு வெற்றிகரமாக நடைபெறுவதற்கு உழைத்த சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்களுக்கும் அவரோடு நட்புடனும் உரிமையோடும் உடனிணைந்து உழைத்த அன்பர்கள் மற்றும் பெருமக்கள் அனைவரையும் பாராட்டுவதற்கான வார்த்தைகளின்றி தடுமாறுகின்றேன். அந்தளவிற்குங அவர்களது “உழைப்பு” மிகப்பெரியது.

இவ்விழாவின் முக்கிய அம்சமாக முதல் இரண்டு நாட்களும் மாலையில் அழகிய முறையில் ஏற்பாடு செய்யப்பெற்று நடைபெற்ற பிரபல தென்னிந்திய இசையமைப்பாளர் ஜேம்ஸ் வசந்தன் அவர்களது நெறியாழ்கையில் இடம்பெற்ற “தமிழோசை” என்னும் சங்கத் தமிழ் இசை நிகழ்ச்சியில் நமது இளைய தலைமுறை மாணவ மணிகள் கலந்து கொண்டு தங்கள் ஆற்றலை வெளிப்படுத்தியமையும் எமது கனடிய தமிழர் சமூகத்தின் சாதனையென்றே நாம் கூறலாம்.

அதைக் கண்டு ரசித்த மக்கள் ஆரவாரம் செய்து வரவேற்றார்கள்.

இறுதியாக இயல்-இசை-நடன நிகழ்ச்சிகளும் தமிழ் மொழியைக் கற்பித்தல் தொடர்பான ஆய்வுரைகளும் விருந்தினர்களின் உரைகளும். மூன்று நாட்களும் மூன்று வேளை விருந்துபசாரமும் வழங்கி தமிழ் மக்களின் இதயங்களில் நீங்காத இடம் பிடித்துள்ள “சித்தம் அழகியான்” சு. இராசரத்தினம் அவர்கள் வாழிய பல்லாண்டு!


# இவ்வார ராசிபலன்

## 07-06-2024 வெள்ளி தொடக்கம் 13-06-2024 வியாழன் வரையும்




**மேஷம்:** மங்கையர் சிலருக்கு மகப்பேறு கிடைக்கும் வாரம். பணியில் கவனம் தேவை. கலைஞர்களுக்கு திருப்புமுனையான காலம். தொழிலாளர்களுக்கு வாய்ப்புக்கள் கிடைக்கும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். புதிய கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். மனக்குழப்பம் தீரும். பொருளாதார நிலை உயரும். தொட்டக் காரியம் ஜெயமாகும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. நீண்ட நாளைய நோய் விலகும். பணவரவு திருப்தி தரும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். இல்லத்தில் அமைதி கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். தேகப்பலம் கூடும். உடல்நலம் சீரா-கும். குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. சுபக்காரியம் கைக்கூடும். தொழில் முயற்சி வெற்றி தரும். வறுமைகள் அகலும். வெளியூர்ப் பயணம் உண்டு. தந்தையின் உடல் நலத்தில் கவனம் தேவை. வாகனங்களில் முதலீடு உண்டாகும். பங்குச்சந்தை லாபம் தரும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். நண்பர்களால் நன்மையுண்டு. விரக்திகள் மறையும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். பேச்சில் நிதானம் தேவை. வங்கி சேமிப்பு உயரும். முத்தான வாய்ப்பு பெருகும். சுபகாரியங்கள் நடந்தேறும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். கல்வியில் கவனம் தேவை. கடன் வசூலாகும். புத்தி சாதுர்யம் பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். அணிமணிகள் சேரும். திருமண தீபம் சுடர்விடும். பணம் புரளும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ கனக துர்க்கை அம்மன், அதிர்ஷ்ட எண்: 3,9,6,5
அதிர்ஷ்ட நிறம்: வெளிர் நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,L





**ரிஷபம்:** மனக்கவலைகள் விலகும் வாரம். பாதகமான சூழ்நிலைகள் அகலும். கணவன், மனைவி உறவு மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். உடல்நலம் சீராகும். சகோதரியினால் நன்மை உண்டு. அரசு வழியில் ஆதாயம் உண்டு. பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். பதவி உயர்வு கிட்டும். வேண்டாத விஷயங்கள் விலகும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். தொழில் அபிவிருத்தி அடையும். வாயில் தேடி வரன் வரும். பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். பெற்றோர்களின் ஆசி கிட்டும். பெண்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெற்றோர் உடல்நலத்தில் அக்கறை தேவை. காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். திருப்தி பெருகும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். பழைய பகை தீரும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். மறைமுக எதிர்ப்புக்கள் விலகும். தர்மச் சிந்தனைகள் மேலோங்கும். உத்தியோகத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும். பெண்களின் ஆலோசனை பயன் தரும். நட்டமில்லாத நன்மைகள் அதிகரிக்கும். வெளிநாட்டுப் பயணம் லாபம் தரும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். புது முயற்சிகளை தள்ளி வைக்கவும். விளையாட்டில் கவனம் தேவை. மாற்று யோசனை பயன் தரும். வருமானம் திருப்தி தரும். காதலர்கள் தம்பதியாவார்கள். தொலைதூரப் பயணம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி, அதிர்ஷ்ட எண்: 5,3,2,7
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,Z




**மிதுனம்:** கண்ணியமும், புண்ணியமும் சேரும் வாரம். மனோ பயம் அகலும். வாழ்க்கையில் பிடிப்பு அதிகரிக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும். பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். புண்ணியக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். சுறுசுறுப்பு பெருகும். சொத்துக்களால் லாபம் உண்டாகும். கலவரமான சூழ்நிலை காணப்படும். வஸ்திர தானம் செய்வதால் வளங்கள் சேரும். தகுதிகள் மிகுதியாகும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். மன நெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டாகும். வீண் வம்புகள் ஒழியும். பால்ய நண்பர் சந்திப்புக் கிட்டும். பயணம் வெற்றி தரும். ஆபரணச்சேர்க்கை உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். இல்லத்தில் நல்ல காரியம் நடைபெறும். வாழ்வில் வசந்தம் கூடும். கனவுகள் பலிதமாகும். குடும்ப கௌரவம் உயரும். பேச்சில் நிதானம் தேவை. வளமான சிந்தனை உதயமாகும். ஆசிரியர்களுக்கு அற்புதமான வாய்ப்பு வரும். பூமியால் லாபம் உண்டு. நூதன பொருள் சேர்க்கையுண்டு. பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். குடும்பத்தில் பல வகைகளில் நன்மை ஏற்படும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வெளியூர் பயணம் வெற்றி தரும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். பெண்களுக்கு அணிகலன் சேரும். பெருமிதம் நிறைந்த காலம். இடையூறுகள் அகலும்.

வழிபட வேண்டிய தெய்வம்: திருத்தணி முருகப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 2,9,8,6
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,K




**கடகம்:** சினத்தைத் தவிர்க்க வேண்டிய வாரம். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். மருத்துவச் செலவுகள் குறையும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. கமிஷன் தொழில் லாபம் தரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். புதிய முயற்சிகள் பலன் தரும். போட்டி, பொறாமைகள் விலகும். வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பயன் தரும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும். வயிற்று சம்பந்தமான நோய் வந்து நீங்கும். மகிழ்ச்சியான செய்தி வரும். தொழில் அபிவிருத்தி அடையும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். உற்சாகம் களைகட்டும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். புத்துணர்வோடு செயல்படுவது நல்லது. பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றமதி தொழிலில் கவனம் தேவை. மாணவர்கள் திறமை பளிச்சிடும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உதவிகள் கிடைக்கம். அரசு வாய்ப்பு தடைப்படும். சகோதர உதவி கிட்டும். இலக்கிய ஆர்வம் கூடும். முயற்சிகள் வெற்றி தரும். தாய், தந்தை உதவி உண்டு. சுபச்செலவுகள் அதிகரிக்கும். மனை வாங்கும் ஆர்வம் அதிகரிக்கும். ஆறுதலான சூழ்நிலை அமையும். திருமகள் கிருபை உண்டு. பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். வழக்குகள் முடிவுக்கு வரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். நலம் காணும் வாரம். திடீர் திருப்பம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதித்ய பகவான், அதிர்ஷ்ட எண்: 6,9,2,4
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,Q




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**சிம்மம்:** உற்சாகத்தோடு செயல்படும் வாரம். ஆடை அணிகலன் சேரும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. உடல்நிலையில் கவனம் தேவை. எண்ணங்கள் மாறுபடும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். விருப்பமான தொழில் அமையும். கடன் சுமை குறையும். பணியில் ஆர்வம் ஏற்படும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். கன்னிப்பெண்களிடம் செயல்களில் துணிவு கூடும். மகான்களின் சந்திப்பு கிட்டும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். மனைவியின் பிரார்த்தனை மாற்றத்தை ஏற்படுத்தும். குடும்ப கௌரவம் உயரும். ஆலோசனை பலன் தரும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. வாகன செலவு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். இடமாற்றம் நன்மை தரும். விருந்தினர் வருகை உற்சாகம் தரும். வீடு தேடி வெற்றி வரும். கலைத்துறையில் முன்னேற்றம் கொடுக்கும். எதிரிகள் பலம் குறையும். பொருளாதார வளம் மேம்படும். திருமண வாய்ப்பு கூடி வரும். துணிவோடு செயல்படுவீர்கள். சொத்துச் சேர்க்கை உண்டு. புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். முன்கோபம் தவிர்க்கவும். மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். பிரச்சனை முடிவுக்கு வரும். பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். மனதில் உற்சாகம் கூடும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். மெத்தனப் போக்கு விலகும். பேச்சில் இனிமை கூடும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வீரமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 1,4,5,9
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,S




**கன்னி:** பெண்களால் ஆதாயம் வரும் வாரம். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். புதிய நட்பு ஏற்படும். விவசாயம் பலன் தரும். அரசு வழி ஆதாயம் உண்டு. குடும்ப அன்யோன்யம் கூடும். நண்பர்களால் உதவி உண்டு. சுபச்செலவு அதிகரிக்கும். கடன் பிரச்சனைகள் அகலும். கவலைகள் ஒழியும். பால் தானம் பாக்கியம் சேர்க்கும். அனுகூலமான காலம். பூமியால் லாபம் உண்டு. பதவி வாய்ப்பு வரும். பாதகமான சூழ்நிலை விலகும். கல்வியில் ஆர்வம் கூடும். குதூ கலமான மனநிலை காணப்படும். புத்திரர்களால் மேன்மை உண்டு. அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். ஆடம்பர சுகங்கள் கூடும். முயற்சிகள் பலன் தரும். மங்களச் செய்திகள் வரும். கமிஷன் தொழில் லாபம் தரும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். பாராட்டுக்கள் குவியும். வெளியூர் பயணம் வெற்றி தரும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் நீங்கும். திடீர் லாபம் உண்டு. திருமண வாய்ப்புக் கூடி வரும். பேச்சில் நிதானம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோக ஈடுபாடு குறையும். ஆபரணச் செலவுகள் கூடும். யோகமான காலமாக அமையும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். தொழில் மேன்மை உண்டு. காதல் கசக்கும். திருத்தமான முடிவு ஏற்படும். வருத்தங்கள் மறையும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடி வரும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். திட்டம் வெற்றி பெறும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமா-கும். ஆபரணப் பொருள் களவு போகும். அனுகூலச் செய்தி வந்து சேரும். வாயில் தேடி வாய்ப்பு வரும். காரியங்கள் கைகூடும். வங்கிச்சேமிப்பு உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கற்பக மூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 9,5,3,2
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,J




**துலாம்:** பயணத்தால் அனுகூலம் தரும் வாரம். விவேகமான பேச்சுக்களால் தொல்லைகள் அகலும். திறமைகள் வெளிப்படும். ஊக்கம் அதிகரிக்கும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். மன நெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. தாய்ப்பாசம் அதிகரிக்கும். பணவரவு பெருகும். வம்புதும்புகள் ஒழியும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். தொலைதூரப் பயணம் ஏற்படும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிட்டும். விவசாயிகள் கோரிக்கைகள் நிறைவேறும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். வியாபாரம் விருத்தியாகும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். தொழில் போட்டி மறையும். உறவினரால் உதவிகள் கிட்டும். ஆபத்துக்கள் விலகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. திருமணப் பேச்சு முடிவிற்கு வரும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். பொது வாழ்வில் புகழ் கூடும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். அந்நிய தேசப் பயணம் உண்டு. அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. வாழ்த்துச் செய்திகள் வரும். தர்மச் சிந்தனை மேலோங்கும். விளையாட்டுத் துறையில் வெகுமதி உண்டு. பழைய பகை தீரும். கடன் அமையும். அணிமணிகள் சேரும். திருமண தீபம் சுடர் விடும். பங்குச்சந்தையில் பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சிப் பொங்கும். ஏற்றங்கள் அதிகரிக்கும். உளுந்து தானம் சிறந்த பலன் சேர்க்கும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை ஏற்படும். மனதில் தெம்பும், தைரியமும் கூடும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். நினைத்தது நடக்கும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வீர அண்ணாமலையார், அதிர்ஷ்ட எண்: 7,9,2,4
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,G




**விருச்சிகம்:** வெற்றிச் செய்தி வரும் வாரம். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். நீண்ட தூரப்பயணம் லாபம் தரும். கணவன், மனைவி உறவு இனிக்கும். பங்குச்சந்தை லாபம் தரும். செய்த்தொழிலில் முன்னேற்றம் உண்டு. புதிய வாகனங்களால் முதலீடு உண்டாகும். அரசியல்வாதிகள், ஆன்மீகவாதிகள், உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். வேண்டும் வரம் கிட்டும். நட்பு வட்டம் விரிவடையும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். புதுமைகள் நிறைந்த காலம். நீண்ட நாளைய நோய் விலகும். பெண்களின் விருப்பம் ரூடவ்டேறும். உள்ளம் மகிழும். வெளிவட்டாரப் பழக்கங்கள் அதிகமாகும். உல்லாசப் பயணம் இனிக்கும். எதிர்கால தேவைகள் பூர்த்தியாகும். தெளிவான முடிவுகள் உதயமாகும். மனிதநேயம் மிகுதியாகும். வயிற்று உபாதைகள் வந்து போகும். பெற்றோர்களால் பெருமை சேரும். தெய்வத் திருப்பணியில் ஆர்வம் கூடும். தடைகள் விலகும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். தேக ஆரோக்கியம் மிளிரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். பங்குச்சந்தை லாபம் தரும். நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். உழைப்பு கடுமையாக இருக்கும். விரக்திகள் விலகும். ***(தொடர்ச்சி 22 பக்கம்)***

கனடிய செய்திகள் Canadian News

# "இளையபாரதி" என்னும் கந்தையா சிவசோதி கண்கலங்கி உரையாற்றிய, இசைச் செல்வி லிலானி தங்கவடிவேலுவின் வாய்ப்பாட்டு அரங்கேற்ற மேடை

கடந்த சனிக்கிழமை (01-06-2024) இம்மாதத்தின் முதல்நாள் மாலை கனடியத் தமிழர்களின் நுண்கலைகள் மீதான பற்றின் அடையாளமாகத் திகழும் "தமிழிசைச் கலாமன்றத்தின்" அரங்கத்தில் ஒரு இசை அரங்கேற்றம்.

"இன்னிசை வேந்தர்" பொன் சுந்தரலிங்கம் அவர்களின் மாணவிதான் அரங்கேற்றச் செல்வி லிலானி தங்கவடிவேலு.


பிரதம விருந்தினராக அழைக்கப்பெற்றிருந்தவர் "இளையபாரதி" என்னும் நண்பர், கந்தையா சிவசோதி. நானும் "வாணிஅக்கா" என்னும் திருமதி. பாலசுந்தரம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்கள். சிறப்பான நிகழ்ச்சித் தொகுப்பாளர்களாக, திரு. குணம் செல்லையா மற்றும் செல்வி லிசானி தங்கவடிவேலு ஆகியோர்.

அரங்கேற்றதிற்கு அணிசேர் பக்கவாத்தியக் கலைஞர்களாக வித்தகர்கள் வாசுதேவன் இராஜலிங்கம் மற்றும் தனதேவி மித்ரதேவா மற்றும் இளைய தலைமுறையினர்.

இசைச் செல்வி லிலானி தான் கற்ற வித்தையை இனிதான குரலில் அரங்கேற்றிக் கொண்டிருந்தார். ஒவ்வொரு உருப்படியும் ராகமும் தாளமும் தப்பாமல் இசையும் குரலும் இணைந்து சபையோரை மகிழ்வித்த வண்ணம் நகர்ந்து கொண்டிருந்தது.

லிலானியின் குரு இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கம். அவரது பாரியார் மற்றும் புதல்வி கானப் பிரியா ஆகிய மூவரும் இசை சார்ந்த கண்காணிப்புடன் மேடையை நோக்கி தங்கள் கவனத்தை செலுத்திக் கொண்டிருந்தார்கள்.

அனைத்து உருப்படிகளும் இனிதே நிறைவேற்றப்பட்டு இறுதியில் தில்லானா. திருப்புகழ் மற்றும் மங்களம் ஆகியன இசைக்கப்பட்டு கரகோசங்கள் சபையிலிருந்து எழுந்து வர. அதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் நண்பர் "இளையபாரதி" மேடைக்கு அழைக்கப் பெறுகின்றார்.







அவரும் எழுந்து நடந்து மேடையில் தோன்றுகின்றார்.

ஒரு சிறந்த கலைஞர். ஆழமான வாசகர். "மற்றவர்களுக்கு அவர்களுக்கு வாய்களுக்கு முன்னால் தான் "மைக்" வைக்கப்படும். ஆனால், "இளையபாரதி" அவர்களுக்கு இறைவன் தொண்டைக்குள்ளேயே "மைக்" கை வைத்துவிட்டான்" என்று அன்றொரு நாள் தமிழகத்தின் நட்சத்திரப் பேச்சாளர் சுகி சிவம் அவர்களால் கனடிய மேடை ஒன்றில் புகழாரம் சூட்டப்பெற்ற ஒலிபரப்பாளர், ஊடகவியலாளர்களும் பத்திரிகையாளர்களும் பொருளாதாரச் சிக்கல்கள் இன்றி தங்கள் பணிகளை ஆற்ற வேண்டும் என்பதில் அக்கறையோடு அறிவுரைகள் கூறும் ஊடகர்,



இவ்வாறான பல சிறப்பியல்புகளைக் கொண்ட அவர் இன்று என்ன பேசப்போகின்றார் என்பதை செவிமடுப்பதற்காக ஆசனத்தின் முன் நுனிக்கு நகர்ந்து கொண்டு. செவிகளை திறந்து வைத்து தயாராகின்றேன். காரணம் அவரது உரையை நீண்ட நாட்களுக்குப் பின்னர் கேட்கும் சந்தர்ப்பம் அது.

அரங்கேற்றச் செல்வி லிலானி பற்றியும் அவர் எவ்வாறு இசைமீதும் எம் மொழி மீதும் சிறுவயதில் ஆர்வம் கொண்டு கற்றார்?. "வாணிஅக்கா" "சாந்தா அக்கா" ஆகிய தமிழாசிரியர்களின் கற்பித்தலை எவ்வாறு ஆர்வத்துடன் பின்பற்றினார்?, தனது வானொலி நிலையத்திற்கு நேரடியாக வந்து சிறுவர் நிகழ்ச்சிகளில் எவ்வாறு தனது மழலைக்குரலால் எம் செம்மொழியை உச்சரித்தார்?. எவ்வாறு தனது ஆற்றலை வளர்த்துக்கொண்டார்?, ஒரு சாதாரண குடும்பத்தின் பிள்ளையாக அவர் எவ்வாறு உயரத்திற்குச் செல்லத் துடித்தார்? என்பதையெல்லாம் "உண்மையின் வடிவங்களாக" எடுத்துரைத்தார்.

உற்சாகமாகப் பேசிக்கொண்டிருந்த நண்பர் "இளைபாரதி"யின் கண்கள் கலங்குகின்றன. இருபக்கமும் வடியும் கண்ணீரை தனது கண்ணாடிக்குள்ளால் கைகளை விட்டு துடைத்துக்கொள்கின்றார். நண்பர் செல்வம் ஒரு "ரிசு" பேப்பரை அவரிடம் சென்று ஒப்படைக்கின்றார், கண்ணீரைத் துடைத்துக்கொள்வதற்காக.

என் கண்களிலிருந்தும் கண்ணீர் வடிகின்றது. காரணம் தெரியவில்லை. ஆனால் நான் துடைத்துக் கொள்ளவில்லை. நன்றாக வடியட்டும் என்று விட்டு விடுகின்றேன். நண்பர் இளையபாரதிக்காகவும் இசைச் செல்வி லிலானிக்காகவும் என எண்ணிக்கொண்டேன்.

சிறிது நேரத்தின் எனது பத்திரிகைப் பணியையும் உழைப்பையும் சபையோருக்கு எடுத்துரைக்கின்றார்.

பின்னால் திரும்பி எனது துணைவியைப் பார்க்கின்றேன். அவரது கண்களிலும் கண்ணீர்.. என்ன ஆச்சரியம்! இன்று என்ன இசையரங்கேற்றமா? அல்லது கண்ணீர் அரங்கேற்றமா?.

ஏன், இப்பொழுது என் இந்த பதிவை தட்டச்சு செய்யும் போது கூட என் கண்களில் கண்ணீர் தான்..

இவ்வாறான சந்தர்ப்பங்கள் கிட்டுவது அரிது.

ஆனால் வாழ்க்கையின் மேன்மையை, கலையின் அற்புதத்தை உணர்ந்து கண்ணீர் வடிக்கும் இவ்வாறான தருணங்கள் அனைவருக்கும் கிட்ட வேண்டும்.

லிலானி அரங்கேற்றம் வெற்றி பெற உழைத்த, வாழ்த்திய அனைவருக்கும் வாழ்த்துக்கள்!

**இங்ஙனம்: மலையன்பன் - ஆர். என். லோகேந்திரலிங்கம்**

# அன்பின் தொனி - 780

**பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)**

**தேவகிருபை** - Grace of God

### தேவன் வானத்திலிருக்கிறார்; நீ பூமியிலிருக்கிறாய்

நீ தேவாலயத்துக்குப் போகும்போது உன் நடையைக் காத்துக்கொள்; மூடர் பலியிடுவது போலப் பலியிடுவதைப்பார்க்கிலும் செவிகொடுக்கச் சேர்வதே நலம். தாங்கள் செய்கிறது தீமையென்று அறியாதிருக்கிறார்கள். தேவசமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு; தேவன் வானத்திலிருக்கிறார்; நீ பூமியிலிருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக. தொல்லையின் திரட்சியினால் சொப்பனம் பிறக்கிறதுபோல, வார்த்தைகளின் திரட்சியினால் மூடனுடைய சத்தம் பிறக்கும். நீ தேவனுக்கு ஒரு பொருத்தனைபண்ணிக்கொண்டால், அதைச்செலுத்தத்தாமதியாதே; அவர் மூடரில் பிரியப்படுகிறதில்லை, நீ நேர்ந்துகொண்டதைச்செய். நீ நேர்ந்துகொண்டதைச் செய்யாமற்போவதைப்பார்க்கிலும், நேர்ந்துகொள்ளாதிருப்பதே நலம். உன் மாம்சத்தைப் பாவத்துக்குள்ளாக்க உன் வாய்க்கு இடங்கொடாதே, அது புத்திபிச கினால் செய்தது என்று தூதனுக்குமுன் சொல்லாதே, தேவன் உன் வார்த்தைகளினாலே கோபங்கொண்டு, உன் கைகளின் கிரியையை அழிப்பானேன்? அநேக சொப்பனங்கள் மாயையாயிருப்பதுபோல, அநேக வார்த்தைகளும் வியர்த்தமாயிருக்கும் ஆகையால் நீ தேவனுக்குப் பயந்திரு. **- பிரசங்கி 5: 1-7**

### பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை

ஒரு தேசத்தில் ஏழைகள் ஒடுக்கப்படுகிறதையும், நியாயமும் நீதியும் புரட்டப்படுகிறதையும் நீ காண்பாயானால், அதைக்குறித்து ஆச்சரியப்படாதே; உயர்ந்தவன்மேல் உயர்ந்தவன் காவ லாளியாயிருக்கிறான்; அவர்கள்மேல் உயர்ந்தவரும் ஒருவருண்டு. பூமியில் விளையும் பலன் யாவருக்குமுரியது; ராஜாவும் வயலின் பலனால் ஆதரிக்கப்படுகிறான். பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை செல்வப்பிரியன் செல்வப்பெருக்கினால் திருப்தியடைவதில்லை; இதுவும் மாயையே. பொருள் பெருகினால் அதைத் தின்கிறவர்களும் பெருகுகிறார்கள்; அதை உடையவர்கள் தங்கள் கண்களினால் அதை காண்பதேயன்றி அவர்களுக்குப் பிர யோஜனம் என்ன? வேலைசெய்கிறவன் கொஞ்சமாய்ப் புசித்தாலும் அதிகமாய் புசித்தாலும் அவன் நித்திரை இன்பமாயிருக்கும்; செல்வனுடைய பெருக்கோ அவனை தூங்கவொட்டாது. சூரியனுக்குக் கீழே நான் கண்ட வேறொரு கொடிய தீங்குமுண்டு அதாவது, ஐசுவரியமானது அதை உடையவர்களுக்கே கேடுண்டாகும்படி சேகரித்து வைக்கப்படுவதாம். அந்த ஐசுவரியம் விக்கினத்தால் அழிந்துபோகிறது; அவன் ஒரு புத்திரனைப் பெறுகிறான், அவன் கையில் யாதொன்றும் இல்லை. தன் தாயின் கர்ப்பத்திலிருந்து நிர்வாணியாய் வந்தான்; வந்ததுபோலவே




நிர்வாணியாய்த் திரும்பிப்போவான். அவன் தன் பிரயாசத்தினால் உண்டான பலனொன்றையும் தன் கையிலே எடுத்துக்கொண்டுபோவதில்லை. அவன் வந்தபிரகாரமே போகிறான், இதுவும் கொடுமையான தீங்கு; அவன் காற்றுக்குப் பிரயாசப்பட்டதினால் அவனுக்கு லாபம் என்ன? அவன் தன் நாட்களிலெல்லாம் இருளிலே புசித்து, மிகவும் சலித்து, நோயும் துன்பமும் அடைகிறான். இதோ உயிரோடிருக்கும்படி தேவன் அருளிச்செய்த நாளெல்லாம் மனுஷன் புசித்துக் குடித்து, சூரியனுக்குக் கீழே தான் படும் பிரயாசம் அனைத்தின் பலனையும் அநுபவிப்பதே நலமும் உத்தமுமான காரியமென்று நான் கண்டேன், இதுவே இவன் பங்கு. தேவன் ஐசுவரியத்தையும் சம்பத்தையும் எவனுக்குக் கொடுத்திருக்கிறாரோ, அவன் அதிலே புசிக்கவும், தன்பங்கைப் பெறவும், தன் பிரயாசத்திலே மகிழ்ச்சியாயிருக்கவும் அவனுக்கு அதிகாரம் அளிப்பது தேவனுடைய அநுக்கிரகம். அவனுடைய இருதயத்திலே மகிழும்படி தேவன் அவனுக்கு அநுக்கிரகம்பண்ணுகிறபடியினால், அவன் தன் ஜீவனுள்ள நாட்களை அதிகமாய் நினையான். **- பிரசங்கி 5: 8-20**

**தொடரும்...**

# Hostel Nun Accused of Torturing Students Gets Bail in a Day




A court in Sri Lanka has released on bail a nun who was arrested by the police for allegedly torturing female students at the hostel of an 80-year-old girls' school located on an islet in the north.

Regional correspondents say that scars caused by beating had been observed on the female students' bodies, according to the Judicial Medical Officer's (JMO) report.

They added that the students were obtaining treatment in the Kayts Hospital even on the day of the hearing.

According to the correspondents, on 27 May, 11 female students studying at the Little Flowers Girls' College in Karampon – also known as the 'Little Vatican' – had filed a complaint of assault and torture with the Kayts Police Station.

These students are between the ages of 10 and 17. Correspondents added that based on the complaint, on 28 May, the police had arrested the nun who was serving as the hostel warden.

The nun, who was produced before the court the same day, was remanded by the Kayts Magistrate until 29 May. However, on 29 May, the court released her on bail.

The 11 girls had lodged a complaint with the Kayts Police Station on 27 May saying that the school hostel warden had been torturing them for around three years.

In their complaint, the students had further said that they were thrashed for alleged mispronunciation of English words, grammatical errors in spoken English, and incorrect observation of religious rites.

Regional reporters said that the Kayts police presented the 11 female students before Jaffna Teaching Hospital JMO S. Pranavanadan.

Moreover, regional reporters explained that both parents and school authorities have ignored the alleged assaults for years, despite being informed several times.

A violation of human rights.

Last year, the Human Rights Commission of Sri Lanka (HRCSL) had called the education ministry's attention to the necessity of raising awareness among all schools in the country about several recommendations issued in accordance with the United Nations Convention on the Rights of the Child (UNCRC) which has been ratified by Sri Lanka as well.

These recommendations direct schools to refrain from resorting to corporal punishment to discipline students and to maintain discipline in a manner that protects the dignity of the child.

Attention was also paid to the necessity of displaying the relevant circular, issued by the education ministry, in staff rooms. Circular no. 12/2016, which incorporates UNCRC recommendations pertains to maintaining discipline in school.

On several occasions, Ceylon Teachers' Union (CTU) General Secretary Joseph Stalin had pointed out that the general public opposes the school system, whenever the education ministry guidelines on disciplinary action concerning children are being violated.

The Education Ministry's circular says that cases can be filed against teachers for subjecting students to torture and for violating students' fundamental rights, while disciplinary actions can also be taken against the teacher that subject students to corporal punishment.

## இவ்வார ராசிபலன்

(20 பக்கத் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** வாயில் தேடி வாய்ப்புக்கள் வரும். வரவுகள் மிகுதியாகும். சுறுசுறுப்பு அதிகமாகும். காலை நேரத்தில் இனிய செய்திகள் வரும். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணியம் சேரும். வேதனைகள் சாதனையாகும். பெண்களால் பெருமை சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 2,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,T





**தனுசு:** தந்தை வழி உறவுகளால் பெருமை சேரும் வாரம். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் உண்டு. வியாபாரத்தில் வேகம் கூடும். வாயில் தேடி வரன் வரும். ஆசைகள் நிறைவேறும். பணமும், பாராட்டும் சேரும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். வெளியூர்ப் பயணம் வெற்றி தரும். சொத்துக்கள் வில்லங்கம் விலகும். கனிவான பேச்சு அவசியம். மருத்துவச் செலவு குறையும். மதிநுட்பம் மாபெரும் வெற்றித் தரும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் உண்டு. ஆசிரியர்களுக்கு அற்புதமான காலம். நூதன பொருள் சேர்க்கையுண்டு. போட்டி, பொறாமைகள் விலகும். சமுதாய விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. உடல்நலம் சீராகும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். நம்பிக்கை துளிர்விடும். வருமானம் திருப்தி தரும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். பணியாளர்களின் ஒத்துழைப்புக் கிட்டும். வியாபாரம் விருத்தியாகும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். இன்றைய பிரார்த்தனை நன்மையைக் கூட்டும். மங்களச் செய்தியால் மனம் மகிழும். நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். சிந்தனை மேலோங்கும். பாகப்பிரிவினை ஏற்படும். பழைய பாக்கிகளும் வசூலாகும். ஏற்றுமதி தொழிலில் லாபம் தரும். பொது வி'யங்களில் நாட்டம் ஏற்படும். பித்ருக்கள் சாபம் நீங்கும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மீனாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,L




**மகரம்:** மகிழ்ச்சி செய்தி வரும் வாரம். இடமாற்றம் நன்மை தரும். பெரியோர்களின் வாழ்த்து கிடைக்கும். உடன்பிறப்புக்களால் உதவி உண்டு. பணவரவு திருப்தி தரும். பொது வாழ்வில் புகழ் கூடும். செயல்பாட்டின் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. இனம் புரியா சந்தோஷம் மனதில் குடிக்கொள்ளும். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். எதிரிகள் உதிரியாவார்கள். தொட்டக்காரியம் ஜெயமாகும். நீண்ட நாளைய நோய் விலகும். சேமிப்பு வளரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. வியாபாரம் வெற்றி தரும். வெளியூர் பயணம் உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். பேச்சில் நிதானம் தேவை. பொருளாதார நிலை உயரும். வரவுகள் அதிகரிக்கும். நல்லவர் நட்பு கிட்டும். தோற்றப் பொலிவு கூடும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். சகோதர உதவி கிட்டும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். பொறியியல் துறை லாபம் தரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். அயல்நாட்டு பயணம் உண்டு. ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். புதிய முயற்சிகள் பலன் தரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். பழைய பாக்கிகள் வசூலாகும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பெரியோர்களின் பாராட்டுக் கிடைக்கும். பெண்களுக்கு பெருமை சேரும். யோக பலன் கூடும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ணமயமாகும். புதிய முயற்சிகளை தள்ளி வைக்கவும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அதிதேவதை, அதிர்ஷ்ட எண்: 6,9,5,4
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,P




**கும்பம்:** பணவரவு அதிகரிக்கும் வாரம். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். அரசு வழியில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழிலில் லாபம் அதிகரிக்கும். எதிரிகள் உதிரியாவார்கள். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். மாற்றங்கள் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். புதிய தொழில் வாய்ப்பு வரும். மனக்கசப்பு நீங்கும். பெண்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். செல்வாக்கு மேம்படும். விளையாட்டுத் துறையில் லாபம் தரும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். மங்களச் செய்திகள் வரும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பெண்களின் ஆலோசனைகளால் ஆதாயம் பெருகும். முன் கோபத்தை குறைக்க வேண்டும். தொழில் முயற்சி வெற்றி தரும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். ஆக்கப்பூர்வ எண்ணம் உதயமாகும். தொழிலாளர்களுக்கு மன நிறைவு உண்டு. கடன் பிரச்சனைகள் நீங்கும். புத்தி சாதுர்யம் பெருகும். செய்த்தொழில் லாபம் சிறக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். வாழ்க்கைத்துணையால் வளம் பெருகும். கட்டிடத் தொழிலாளர்களுக்கு லாபம் அதிகரிக்கும். பயண முயற்சி பலன் தரும். உத்தியோகத்தில் நல்லபெயர் கிட்டும். தெய்வப்பணிகளில் ஈடுபாடு கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குபேர பகவான், அதிர்ஷ்ட எண்: 2,9,4,6
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,H




**மீனம்:** பணியில் பாராட்டு கிடைக்கும் வாரம். வாகனச் செலவு ஏற்படும். புதிய முயற்சியில் ஈடுபடலாம். அலைச்சல் குறையும். மன நிம்மதி குறையும். தன சேர்க்கை உண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். உயர்வுகள் தாமதமாகும். ஆதாயம் பெருகும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். நண்பகலில் நல்ல தகவல் வரும். வேலைப்பளு அதிகரிக்கும். அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். தான தர்மங்கள் பலன் தரும். வழக்குகள் தள்ளிப்போகும். உடல்பொலிவு கூடும். புதிய முதலீடு தவிர்க்கவும். செல்வாக்கு உயரும். வரவு திருப்தி தரும். உடன்பிறப்புக்களால் ஆதாயம் உண்டு. முயற்சிகள் பலன் கொடுக்கும். ஆரோக்யம் சீராக இருக்கும். பூமியால் நன்மை உண்டு. வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். எதிர்ப்புக்கள் தவிடுபொடியாகும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். பாராட்டுக்கள் கூடும். மாலை நேரத்தில் கவனம் தேவை. அத்தியாவசிய தேவைகள் பூர்த்தியாகும். நீண்ட கால எண்ணம் நிறைவேறும். உதவிகள் குவியும். வாழ்க்கைத் தரம் உயரும். பொன், பொருள் சேரும். கலக்கமான மனநிலை காணப்படும். கண்ணாடிப் பொருட்கள் சேதம் தரும். அணிகலன் சேர்க்கை ஏற்படும். புதிய சிந்தனை உதயமாகும். சேமிப்பு அதிகரிக்கும். கலைஞர்களுக்கு திருப்புமுனையான காலம். தொழிலில் ரகசியம் காப்பது நல்லது. பணியில் மாற்றம் ஏற்படும். முயற்சியில் வளர்ச்சியடையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். நல்லச்செய்திகள் நாடி வரும். குடும்ப அன்யோன்யம் சிறக்கும். செல்வாக்கு உயரும். வீடு தேடி வெற்றி வரும். ஆழமான மேன்மைகள் தொடரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். சந்தோஷம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 3,9,7,2
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,P

# MORTGAGE
# FINANCIAL SOLUTIONS

- RESIDENTIAL
- CONSTRUCTION
- COMMERCIAL
- VACANT LAND
- INDUSTRIAL




**RESIDENTIAL- COMMERCIAL**

- **Purchase**
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- **Refinance**
- **Renewal**
- **Equity line of Credit**

Contact Us Today

**NESAN**
*Subramaniam*

**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

**Powered By**

MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Mortgage Agent level 1 Licence # M15001465
Mortgage Alliance, Brokerage #10330

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எங்களுடன்
தொடர்பு கொள்ளவும்.

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record

PROPERTY MAX

Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 416-291-0005
www.iselldreamcondos.ca www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்
உதயம் 1470 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 7, 2024

# ''கவிநாயகர்'' வி. கந்தவனம் நினைவாக குரும்பசிட்டி நலன்புரிச் சபை – கனடா ஏற்பாடு செய்த இரு நிகழ்வுகள்



மறைந்த முன்னாள் அதிபரான கவிநாயகர்“ வி. கந்தவனம் அவர்களது நினைவாக குரும்பசிட்டி நலன்புரிச் சபை - கனடா ஏற்பாடு செய்த மனங்களைத் தொட்ட இரு நிகழ்வுகள் கடந்த 02-06-2024 அன்று ஞாயிற்றுக்கிழமையன்று அஜின்கோர்ட் சன சமூக நிலைய மண்டபத்தில் நலன்புரிச் சபையின் செயலாளர் ஐ. ஜெகதீஸ்வரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

முதலாவது நிகழ்வாக “கவிநாயகர்“ கந்தவனம் அவர்களது நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

(தொடர்ச்சி 18ம் பக்கம்)

# "ஒன்ராறியோ அரசு தமிழ் சங்கத்திற்கு 40,000 டாலர்கள் வரை "படிமுறை தமிழ்" பாடத்திட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வழங்கிய நிதி உதவி”

## ஸ்காபுறோ வளாகத்தில் நடைபெற்ற 15வது உலகத் தமிழாசிரியர் மாநாட்டின் ஆரம்ப விழாவில் கல்வி அமைச்சர் தெரிவிப்பு



ஒன்ராறியோ அரசாங்கமானது இங்கு வாழும் தமிழ் மாணவர்களிடையே தமிழ் மொழி மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றைப் பாதுகாக்கவும் கொண்டாடவும் வழங்கும் ஆதரவை மேம்படுத்துகிறது என ஒன்ராறியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெஸ்சே தெரிவித்தார்

ஸ்காபுறோவில் அமைந்துள் ரொறன்ரோ பல்கலைக் கழகத்தின் வளாகத்தில் கடந்த ஜூன் 1ஆம் தேதி நடைபெற்ற 15வது உலகத் தமிழாசிரியர் மாநாட்டின் ஆரம்ப விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

(தொடர்ச்சி 18ம் பக்கம்)



# ஒன்றாரியோ முதல்வர் தனது அமைச்சரவையில் செய்துள்ள மாற்றங்கள்

## குடியிருப்புவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சின் குடியிருப்புவசதி இணை அமைச்சராக விஜய் தணிகாசலம் நியமனம்.

ஜூன் 6ஆம் திகதி, வியாழக்கிழமையன்று ஒன்ராறியோ மாநில சட்டமன்றத்தில் செய்யப்பட்டுள்ள அமைச்சரவை மாற்றங்களின் அடிப்படையில், குடியிருப்புவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சகத்தின், குடியிருப்புவசதி இணை அமைச்சராக விஜய் தணிகாசலம் அவர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார். இதன் மூலம் பதினைந்து மில்லியன் மக்கள் வாழும் ஒன்ராறியோ மாநிலத்தின் சட்டமன்றத்துக்குத் தெரிவான முதலாவது தமிழ் அமைச்சராக விஜய் தணிகாசலம் அவர்கள் தொடர்ந்து விளங்குகிறார்.

(தொடர்ச்சி 18ம் பக்கம்)

# "இன்னிசை வேந்தர்" பொன் சுந்தரலிங்கம் அவர்களின் மாணவி லிலானி தங்கவடிவேலுவின் வாய்ப்பாட்டு அரங்கேற்றம் சிறப்பாக நடைபெற்றது



“இன்னிசை வேந்தர்“ பொன் சுந்தரலிங்கம் அவர்களின் மாணவி லிலானி தங்கவடிவேலு வாய்ப்பாட்டு அரங்கேற்றம கடந்த சனிக்கிழமை யூன் மாதம் 1ம் திகதி சஸ்காபுறோவில் தமிழிசைக் கலாமன்ற மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. பக்கவாத்தியக் கலைஞர்களாக ‘மிருதங்கவாருதி’ வாசுதேவன் இராஜலிங்கம் மற்றும் வயலின் வித்துவான் தனதேவி மித்ரதேவா ஆகியோரும் ஏனைய இளங்கலைஞர்களும் பங்கெடுத்தனர்.

பிரதம விருந்தினராக அழைக்கப்பெற்றிருந்தவர் “இளையபாரதி ஆகிய கந்தையா சிவசோதி அவர்கள் அழைக்கப்பெற்றிருந்தார்.சிறப்பான நிகழ்ச்சித் தொகுப்பாளர்களாக, திரு. குணம் செல்லையா மற்றும் செல்வி லிசானி தங்கவடிவேலு ஆகியோர் பணியாற்றினர்.

இசைச் செல்வி லிலானி தான் கற்ற வித்தையை இனிதான குரலில் அரங்கேற்றிக்கொண்டிருந்தார். ஒவ்வொரு உருப்படியும் ராகமும் தாளமும் தப்பாமல் இசையும் குரலும் இணைந்து சபையோரை மகிழ்வித்த வண்ணம் நகர்ந்து கொண்டிருந்தது.

லிலானியின் குரு இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கம். அவரது பாரியார் மற்றும் புதல்வி கானப் பிரியா ஆகிய மூவரும் இசை சார்ந்த கண்காணிப்புடன் மேடையை நோக்கி தங்கள் கவனத்தை செலுத்திக் கொண்டிருந்தார்கள்.பார்வையாளர்கள் அடிக்கடி கரகோசம் செய்து அரங்கேற்றச் செல்வி லிலானியை தொடர்ந்து பாராட்டிக் கொண்டிருந்தார்கள்

# வடஅமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் 2024 – 2026 ஆண்டுக்கான தேர்தலில் கனடா வாழ் .வள்ளிக்கண்ணன் மருதப்பன் பொருளாளராக தெரிவு



வடஅமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் என்பது, வட அமெரிக்காவில் உள்ள தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்பாகும். இதன் 2024-2026 ஆம் ஆண்டுக்கான செயற்குழுத் தேர்தல் அண்மையில் இடம் பெற்றது. இந்த தேர்தலில் கனடா தமிழ்ச் சங்கத்தின் நிறுவனர் திரு. வள்ளிக்கண்ணன் மருதப்பன் அவர்கள் பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ளார்.

வள்ளிக்கண்ணன் மருதப்பன் அவர்கள் சார்ந்த பேரவை மேன்மை அணியினர் ஒட்டுமொத்தமாக அனைத்து பொறுப்புகளுக்கும் வெற்றி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. தேர்தலில் வெற்றிபெற்ற இவர்கள் ஜுலை மாதம் அமெரிக்காவில் உள்ள செனட் ஆண்ட்டோனியோ நகரில் நிகழவிருக்கும் பேரவை பேரவை மாநாட்டின் போது பொறுப்பேற்கவுள்ளனர்.


தமது நற்சேவையினால் தமிழ் மக்களின்
உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan
Broker
Joy H-Selvanayagam
Broker
